www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 54 செப்-01 - செப்-14, 1994 விலை 7/=

## ● யுத்த நிறுத்தம் ● பொருளாதாரத் தடை நீக்கம்:

# சந்திரிகா சாதிப்பாரா ?

**வடக்கு கிழக்கில் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறையில் இருந்து வரும் பொருளாதாரத் தடை நீக்கப்படுமா, வடக்கு கிழக்கு மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் யுத்தம் நிறுத்தப்படுமா என்ற கேள்விகள், புதிய அரசாங்கத்தின் வருகையுடன் பரவலாக எழுப்பப்படுகின்றன. வடக்கு கிழக்கு மக்களின் எல்லாப் பிரிவினர் மத்தியிலும் எழுந்துள்ள இந்த எதிர்பார்ப்பைப் புதிதாக வந்துள்ள சந்திரிகா அரசாங்கம் நிவர்த்தி செய்யுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.**

தேர்தலுக்குப் பின் அறிவிக்கப்பட்டது போலவே உத்தேச யுத்தநிறுத்தம் ஒன்றை மேற்கொள்வது தொடர்பான முடிவு எடுப்பதற்காக முப்படைத் தலைமைகளையும் கூட்டி கலந்துரையாடல் ஒன்றை நடாத்தப் போவதாக புதிய அரசாங்கத்தின் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க அறிவித்துள்ளார். இதே வேளை அவரது அரசாங்கத்தில் பிரதி பாதுகாப்பு அமைச்சர் பதவியை ஏற்றுள்ள அனுருத்த ரத்வத்தை அவர்கள் சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் நாட்டின் இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றை அரசு காணும் வரை யுத்தம் நிறுத்தப்படமாட்டாது என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை யுத்த நிறுத்தம், பொருளாதாரத்தடை என்பன தொடர்பாக இராணுவத்திவர் மத்தியில் இருவிதமான போக்குகள் நிலவுவதாகத் தெரிய வருகிறது.

யுத்தத்தைத் தொடர்ந்து நடாத்த வேண்டுமெனக் கருதும் கடும்

→2

## புதிய அரசைக் கவிழ்க்க இராணுவச் சதி

கடந்த 16ம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐ.தே.க தோல்வி கண்ட பின்பு ஆட்சி மாறப்படுவதற்கு முன்பும் ஒகஸ்ட் 17ஆந் திகதியன்று ஆட்சி மாறிய பின்பும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை இராணுவச் சதியொன்றின் மூலமாகக் கவிழ்க்கும் முயற்சிகள் செய்யப்பட்டிருந்ததாக உயர்மட்ட இராணுவத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆட்சி மாறும் முன்பு ஒகஸ்ட் 17ம் திகதி நடைபெறவிருந்த சதித் திட்டத்தின்படி ஐ.தே.கயிடமிருந்து ஆட்சியைப் பொ.ஐ.முயிடம் வழங்காது இராணுவத்தின் ஒரு பகுதியினரின் ஆதரவுடன் ஐ.தே.கவை மேலும் ஆட்சியில் இருக்கச் செய்யும் நோக்குடன் செய்யப்பட்டதாகும். அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்ரன் வனசிங்ஹவுக்கும் இராணுவத் தளபதி ஜெரி சில்வாவுக்கும் இதுபற்றி அறியக் கிடைத்தவுடன் அவர்களிருவரும் ஒகஸ்ட் 17ஆந் திகதி இராணுவ தலைமையிடத்துக்குச் சென்று அன்றிரவு அங்கேயே தங்கியிருந்துள்ளனர். இச் சதி தொடர்பாகச் செயற்பட்ட ஏனைய இராணுவ உயர் அதிகாரிகள் சிலரையும் இராணுவத் தலைமையகத்திற்கு வெளியே எடுத்துள்ளனர். முன்னாள் இராணு

→2




## சண்டை பிடிக்கும் சம்பந்தர் !

தமிழர் விடுதலைக் கூட்டணிக்குக் கிடைத்துள்ள -தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் நால்வரும் தேசியப்பட்டியல் உறுப்பினர் ஒருவருமாக- ஐந்து ஆசனங்களில் எப்படியாவது ஒரு ஆசனத்தைக் கட்சி தனக்கு ஒதுக்கித் தரவேண்டும் என்று சம்பந்தன் கோரியதைத் தொடர்ந்து கட்சிக்குள் இழுபறி ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

திருகோணமலையில் விருப்பு வாக்குகள் எண்ணப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், புலிகளின் அச்சுறுத்தல் காரணமாகத் தங்கத்துரைக்குச் செல்வாக்குள்ள மூதூர்ப்பகுதியில் பலர் வாக்களிக்காததால் விருப்பு வாக்குக் கணிப்பில் அவருக்குக் குறைவாகவே கிடைக்கும் எனவும் இதனால் சம்பந்தருக்கே வெற்றிவாய்ப்பு அதிகம் உண்டென்ற கருத்து நிலவியது. இதனால் தங்கத்துரை சோர்வடைந்து நேரகாலத்துடன் வீடு திரும்பி விட்டார். சந்திரிகா கூட சம்பந்தனுடனேயே தொடர்பு கொண்டார். ஆனால் விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை முடிவு மாறான பதிலையே தந்திருந்தது.

தங்கத்துரை தனது பகுதிகளில் தனது எண்ணை மட்டுமே பிரச்சாரம் செய்ததாகவும், ஆனால் தான் தனது பகுதிகளில் இருவரினது எண்களையும் பிரச்சாரம் செய்ததாகவும் சம்பந்தர் கூறியுள்ளார் எனவும், வெற்றிவாய்ப்புக்கு காரணம் மூதூர் வாக்குகள் அல்ல, தனது பகுதியில் விழுந்த வாக்குகளே என்பதாலும் இன்னும் பல காரணங்களாலும் பா.உ பதவி தனக்கே தரப்பட வேண்டுமென அவர் சண்டையில் இறங்கியதாகவும், அவர் தனது ஆதரவாளர்களுடன் தலைமைப் பீடத்தில் கூச்சல் போட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக பலத்த வாக்குவாதம் உருவாகியதாகவும் சம்பந்தர் இந்த மோதலின் போது கட்சிக் காரியதரிசி என்ற முறையில் தன்னால் தங்கத்துரையின் பதவியை உடனடியாக நீக்கம் செய்யமுடியும் எனவும் கூறியதாகவும், இதனால் எழுந்த இழுபறி இன்னமும் தீர்ந்தபாடில்லை என்றும் தெரியவருகின்றது.

இதேவேளையில் தேசியப் பட்டியலுக்கு யாரை நியமிப்பது என்ற இழுபறியும் தோன்றியது. மட்டக்களப்பு வாக்குகளினால்தான் தேசியப் பட்டியலுக்கான வாய்ப்புகள் வந்ததன் காரணமாக இதற்கான பிரதிநிதியைத் தீர்மானிக்கும் தார்மீக உரிமை யோசப்பிடமே இருந்தது. ''வடக்கும் கிழக்கும் எனது இரு கண்கள்'' என்ற தந்தை செல்வாவின் கூற்றுக்கு ஏற்ப இயங்குவதாகக் கூறும் யோசப், கிழக்கிலங்கையிலேயே அனைத்துப் பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளதால் வடக்குக்கு ஒன்றைக் கொடுப்பதை நியாயமானது எனக் கருதியதில் வியப்பில்லை. எனவே, அது சிவசிதம்பரத்திற்கே செல்ல வேண்டும் என அவர் தீர்மானித்தார் என்றும் தெரிய வருகின்றது. (மனமுடைந்திருந்த சிவசிதம்பரம் அதை நிராகரிக்கப் போவதாகக் கூறினாலும் பின்னர் ஓரளவு உடன்படும் நிலையிலிருந்தார்)

ஆயினும் இவ்விடத்திலும் சம்பந்தன் குறுக்கிட்டு தான் பொதுக் காரியதரிசி என்றும், தனக்கே தேசியப் பட்டியல் ஆசனம் தரப்பட வேண்டும் எனவும் சண்டையில் இறங்கினார் என்றும், சம்பந்தனைத் தேசியப் பட்டியலில் போட யோசப்புக்கு விருப்பமில்லை என்பதால் சிவசிதம்பரம் மறுக்கும் பட்சத்தில் நீலனுக்கே அப் பதவி வழங்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

→2

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# இனவாதம் : செத்துவிட்டதா?

கடந்த தேர்தலில் இனவாதிகளுக்கு பலத்த அடி கிடைத்து விட்டதாக பல்வேறு மட்டங்களில் பேசப்பட்டு வருகின்றன. இதற்கு ஆதாரமாக சிங்களயே மகாசம்மத பூமி புத்திர பக்ஷய (சிங்கள மண்ணின் மைந்தர் கட்சி) தான் போட்டியிட்ட ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 267 வாக்குகள் மட்டுமே பெற்றிருந்தது என்பதையும் சென்றமுறை மூன்று உறுப்பினர்கள் அங்கம் வகித்த மக்கள் ஐக்கிய முன்னணியில் இம்முறை படுதோல்வியடைந்தது என்பதையும் காட்டுகின்றன.

நடந்து முடிந்த தேர்தலில் 'இனவாதம்' போட்டி போட்டு பயன்படுத்தப்பட்டது. கட்சிகள் மட்டுமல்லாது சாதாரண சிங்கள தினசரிப் பத்திரிகைகள் கூட தங்கள் பங்களிப்பை வழங்காமலிருக்கவில்லை. அஷ்ரப் - சந்திரிகா ஒப்பந்தம், தொண்டமான் - அஷ்ரப் திட்டம் என்பவை ஈழத்துக்கான அங்கீகாரம் எனச் சிங்கள பௌத்தர்களால் தூக்கிப் பிடிக்கப்பட்டது. வாசுதேவ - நியதபால ஆகியோருக்கிடையிலான தொலைக்காட்சி விவாதம், பொதுஜன ஐக்கிய முன்னணி ஈழத்துக்கு சம்மதித்து விட்டது என்று பேசப்பட்டது . 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிங்களப் பத்திரிகைகளில் நளின் த டி சில்வா, காமினி ஜயசூரிய, தினேஷ் குணவர்த்தனா ஆகிய இனவாதிகளின் கட்டுரைகளள் முக்கியத்துவமளித்து போடப்பட்டிருந்தது. தேர்தலுக்கு முன்தினம் தொலைக்காட்சியில் 'ஈரியகொல்'வின் இனவாத கலந்துரையாடலுக்கு இடம் கொடுக்கப்பட்டிருந்தது. அத்தோடு நகரெங்கும் இனவாத சுவரொட்டிளுக்கும் குறைவில்லை.

'அமர்ந்திருக்கும் பிரபாகரனுக்கு சந்திரிகா ஈழத்தை தட்டில் வைத்து ஒப்படைப்பதாக' ஒரு காட்டூன் சுவரொட்டி இருந்தது.

'தமிழ் ரைம்ஸ்' சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த அஷ்ரப் பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தை சுட்டிக்காட்டி 'முஸ்லீம் பிரபாகரனுடன்' கூட்டுச் சேரும் அமைப்புகளுக்கு வாக்களிக்காதே'' என்றது ஒரு போஸ்டர்.

''உங்கள் தலைமைத்துவம் சிங்கக் கொடியின் கீழா ஈழக் கொடியின் கீழா'' என புலிக் கொடியும் - கதிரைச்சின்னக் கொடியும் ஒரு பக்கமும்; தேசியக் கொடியும்-யானைச் சின்னக் கொடியும் மறுபக்கமும் அமைந்த போஸ்டரும் நகரெங்கும் ஒட்டப்பட்டிருந்தது.

கேள்வி யாதெனில் இம்முறை இனவாத அமைப்புகளின் தோல்வியை வைத்துக் கொண்டு சிங்கள மக்கள் இனவாதிகளை பகிஷ்கரித்தார்கள் என்ற முடிவுக்கு வரலாமா?

பொது எதிரியை வீழ்த்துதல், மாற்றத்தைக் காணுதல் என்ற நோக்கில் இம்முறை சிங்கள மக்கள் தங்கள் வாக்குகளை பொ.ஐ.மு. பக்கம் திருப்பி விட்டிருக்கின்றார்கள் என்ற முடிவுக்கு பலர் வந்திருக்கின்ற நிலையில் 'இனவாதத்துக்கு சாவு மணியடித்தாகி விட்டது' என்ற முடிவு சரிதானா? (ஐ.தே.க பெற்ற வாக்குகளில் - பலமான எதிர்கட்சியாவதற்கான வலுவான காரணங்களில் - தமிழ் வாக்குகள் அதிகளவு கைகொடுத்துள்ளது என்பது அறிந்ததே)

சிங்கள பௌத்த கருத்தியல் உணர்விலிருந்து சிங்கள மக்கள் விடுபட்டார்கள் என்ற முடிவுக்கு வர மேற்படி கருத்து வலுவானயா என்ற



கேள்வி முக்கியமானது. ஒரு வேளை இனப்பிரச்சினைக்கான தமிழ் மக்கள் கோரும் நான்க ம்சக் கோரிக்கையை அங்கீகரிப்பதற்கான மக்கள் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்புபொன்று நடத்தப்பட்டால் தெரியும் உண்மை என்னவென்று.

**-என். சரவணன்-**

## யாழ் சமூகம் பற்றிய ஆய்வரங்கு

மேற்படி ஆய்வரங்கு செப்டம்பர் மாதம் நடுப்பகுதியில் ஒரு முழுநாள் கருத்தரங்காக கொழும்பில் நடைபெற உள்ளது. இதில் பேராசிரியர் கா,சிவத்தம்பி அவர்கள் பிரதான உரையாற்றுவார். மேலும் பல அறிஞர்களும் கருத்துரை வழங்குவர். மேற்படி ஆய்வரங்கில் பங்கு கொள்ள விரும்புவோர் செம்டம்பர் 10ம் திகதிக்கு முன் கீழ்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

TAMIL SECTION
CO-ORDINA TOR
VIBHAVI,
59,OLD KOTTAWA RD,
MIRIHANA
NUGEGODA
T.P: 811927

## சண்டை...

இது இப்படியிருக்க மாவை சேனாதிராஜாவும் தலைமைப் பீடத்திடம் அம்பாறை மாவட்டத்திற்கான தமிழ்ப் பிரதிநிதித்துவம் இல்லாமல் போனதால், அதை நிவர்த்தி செய்யத் தானே தேசியப் பட்டியலில் செல்ல வேண்டுமெனக் கோரியுள்ளார்.

ஆயினும், தேசியப் பட்டியலில் கண்வைத்திருந்த நீலன், சம்பந்தன் ஆகியோரால் இக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. அதேவேளை நீலன், தானே தேசியப் பட்டியலில் செல்வேன் எனக் கொழும்பிலும் வெளிநாட்டிலும் உள்ள முக்கியஸ்தர்கள் பலரும் எதிர்பாத்திருப்பதால், கூட்டணி தன்னைக் கைவிடுமானால் தான் அவர்களின் முகத்தில் எப்படி முழிப்பது என்றும் எனவே எப்படியாவது தன்னையே போடும்படி தலைமைப் பீடத்திடம் மன்றாடியுள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இறுதியில் தற்காலிகமாக தங்கத்துரை திருமலை பா.உ வாகப் போகலாம் என்ற உடன்பாட்டுக்கு சம்பந்தன் வந்துள்ளார்.

ஆனால், தேசியப் பட்டியலில் அம்பாறை மாவட்டப் பிரதிநிதி ஒருவர் செல்வதே நியாயமானது என பலராலும் கருதப்படுகிறது. ஏனெனில் வடக்கு கிழக்குக்கான தமிழ்ப் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் இருக்கின்றார்கள். அம்பாறை மாவட்டத்திற்கான பிரதிநிதி இல்லாத குறையை நிவர்த்தி செய்வது நல்லது என்ற கோரிக்கையை அம்பாறை கூட்டணி வட்டாரங்கள் முணுமுணுத்து வருகின்றன.

பதவி என்று வந்ததும் தேர்தலின் போது தாம் எதற்காகத் தேர்தலில் நிற்பதாக அவர்கள் கூறினார்களோ அதை வசதியாக மறந்து விட்டார்கள்!

த.வி.கூ என்றைக்கும் அதே த.வி.கூதான் என்பதற்கு இதை ஒரு சான்றாகக் கருதலாமா?

## புதிய அரசைக்....

வத் தளபதி சிசில் வைத்தியரத்ன அன்று இந்தியாவிலேயே இருந்துள்ளார். இன்னொரு தகவலின் படி அவசர அவசரமாக ஓகஸ்ட் 15ம் திகதி நள்ளிரவுக்குப் பின் எயார் லங்கா UL423 விமானத்தில் பாங்கொக்கிலிருந்து வந்தார். இங்கிருந்து 15ம்திகதி UL402 இல் திரும்பவும் சென்றுள்ளார் என்று தெரியவருகிறது. இதனால் அச்சதி பலனற்றுப் போனதாகத் தெரியவருகிறது.

மற்றைய சதி முயற்சி பற்றித் தெரிய வருவதாவது; 18ஆம் திகதி முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னவின் இராணுவச் சேவை உதவியாளராக இருந்த பொறியியலாளர் சேவைப் படைப் பிரிவின் தளபதியான லெப்ரினன் கேணல் எம்.ஆர்.டபிள்யூ. சொய்சாவின் வீட்டில் கூடிய இராணுவத்தின் சீவ் ஒவ் ஸ்ராவ் மேஜர் ஜெனரல் லக்கி அல்கம, மேஜர் மல்லிமாரச்சி, யாழ்ப்பாணம் பகுதிக்குப் பொறுப்பாகவிருந்த பிரிகேடியர் சரத் பொன்சேகா, யாழ்ப்பாண 9வது படைப்பிரிவின் தளபதியாகவிருந்த கேணல் காமினீ குணசேகர ஆகிய இராணுவ அதிகாரிகளினால் செய்யப்பட்டதாகக் கூறப்படும் இரண்டாது சதி தொடர்பாகத் தற்போது உயர்மட்ட விசாரணையொன்று நடைபெற்று வருவதாக அறியக் கிடைக்கிறது.

அவர்களின் சதியின் முதல் கட்டமாகத் திட்டமிடப்பட்டிருந்தது இராணுவத் தளபதி ஜெரி சில்வாவையும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்ரன் வனசிங்கவையும் கொலை செய்வது அல்லது அப்பதவிகளிலிருந்து அகற்றுவது எனத் தகவல் கிடைத்துள்ளதாக இராணுவத்தின் உள் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அந்நடவடிக்கை வெற்றி பெற்றால் காலியாகும் பாதுகாப்புச் செயலாளர் பதவிக்கு ஜெனரல் சிசில் வைத்தியரத்னவையும், இராணுவத் தளபதியாக லக்கி அல்கமவையும் நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் கோருவதை இரண்டாவதாகவும் திட்டமிடப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. ஜனாதிபதி இக்கோரிக்கையை நிறைவேற்றாது விடச் சந்தர்ப்பமொன்றைக் கொடுக்காதிருக்க, இது தொடர்பாக ஐ.தே.கவின் உயர்மட்ட அரசியல் வாதிகளின் தலையீடும் இருந்துள்ளதாக அறியக் கிடைக்கிறது. அதைப் போலவே மேஜர் ஜெனரல் லக்கி அல்கம நேரடியாகவே ஐ.தே.கவுடன் தொடர்புகளை வைத்துள்ளவர் என்பதுடன் அவர் ஐ.தே.கக்கு நம்பிக்கையான நபராகக் கருதப்படுகிறார்.

இவ் இராணுவச் சதி தொடர்பாக 'முதலாவதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கவுக்கே தகவல் கிடைத்தது.

சதி தொடர்பான தகவல் கிடைத்தவுடன், பாதுகாப்பு அமைச்சு மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவை விட ஏனைய அனைவரையும் கொழும்பிற்கு வெளியே இடமாற்றம் செய்து அனுப்பி வைத்துள்ளது. அதன்படி கேர்ணல் தோரதெனிய பூநகரிக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து கடமைக்காக கொழும்பு வந்திருந்த பிரிகேடியர் சரத் பொன்சேகா திரும்ப யாழ்ப்பாணத்துக்கும், லெப்.கேர்ணல் சொய்சா மன்னாருக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவ் இராணுவச் சதி ஐ.தே.கவுடன் நேரடியாகவே தொடர்புபட்டதாகத் தெரிய வருவதாக இராணுவத் தகவல் வட்டாரமொன்றின் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல் தெரிவிக்கிக்கிறது. தற்போது இலங்கை இராணுவம் புதிய அரசாங்கத்தின் மீதும், சந்திரிகா குமாரணதுங்கவின் மீதும் நம்பிக்கை கொண்டிருப்பதால் இவ்வாறாக நடைபெறவிருந்த சதி சந்தர்ப்பத்தைத் தவிர்த்தது என அறிய வருகிறது.

இச் சதி ம்யற்சி தொடர்பாக விரிவான விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கவிடம், இரத்தினபுரி மாவட்டப் பா.உ. வாசுதேவ நாணயக்கார கோரியுள்ளார்.

எவ்வாறெனினும், இவ்வாறான சதி முயற்சிகள் எதுவும் நடக்கவில்லை எனவும் அப்படிப்பட்ட முயற்சிகள் எதிலும் தனக்குப் பங்கிருக்கவில்லை எனவும் விரும்பினால் இது தொடர்பான விசாரணை ஒன்றை நடத்துமாறு ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் மேஜர் ஜெனரல் லக்கி அல்கம் தெரிவித்துள்ளார்.

## யுத்த நிறுத்தம்...

போக்காளர்கள் ஒரு புறமும், யுத்தத்தை நிறுத்தி பொருளாதாரத் தடையைத் தொடர்ந்து அமுல்படுத்த வேண்டும் என்று கருதும் 'மிதவாதிகள்' ஒருபுறமுமாக அங்கு கருத்து மோதல்கள் நிலவுகின்றன. யுத்தத்தைத் தொடர வேண்டும் என்று கூறுவோர், எல்லாவிதமான யுத்த நிறுத்தமும் பொருளாதாரத் தடை நீக்கமும் புலிகளை மேலும் பலப்படுத்தும் என்று கருதுகின்றனர்.

மிதவாதப் போக்குடைய ஜெரி சில்வா போன்ற இராணுவத் தலைமைகள் யுத்தத்தை நிறுத்துவதற்கும் கட்டுப்பாடான பொருளாதாரத் தடையை அமுல்படுத்தவும் உடன்படுகின்றனர். ஏனெனில் ஆகாய, கடல் வழிப் பாதைகள் பலவீனமான நிலையில் உள்ளதுடன், பாதுகாப்பற்றவைகளாகவும் உள்ளன. வினைத் திறன் மிக்க இராணுவம் ஒன்றை உருவாக்கும் விதத்தில் இன்றைய இராணுவத்திற்குக் கல்வியறிவூட்டி மீள்பயிற்சியளித்து சீரமைப்பது அவசியம் என்றும், அதற்குக் கால அவகாசம் தேவைப்படுவதால் ஒரு யுத்த நிறுத்தம் அவசியமானது என்றும் இப்பிரிவினர் கருதுகின்றனர்.

கடும்போக்காளர்கள் புதிய அரசாங்கத்தின் கீழ் நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பதால், மிதவாதிகளின் கருத்து அமுல்படுத்தப்படும் சாத்தியக்கூறுகள் உள்ளன. இது தொடர்பாக இராணுவத் தலைவர்களிடம் கருத்துக் கணிப்பொன்றை நடத்துவதற்கும் தீர்மானித்துள்ளார்கள்.

எப்படியோ இரு சாரார்களதும் இறுதி நோக்கம் யுத்தம் செய்வதே. ஆனால் அதைத் தொடர்ந்து செய்வதா அல்லது இராணுவத்தை மீள்சீரமைத்துச் செய்வதா என்பதே இன்றுள்ள இழுபறியாகும். இந்த நிலைமையில், பிரதமர் சந்திரிகாவால் வடபகுதி மக்களுக்கு விமோசனம் கிடைக்குமா என்பது கேள்விக்குறியே!



சரிநிகர்
4.ஜெயரட்ன மாவத்தை
திம்பிரிகஸ்யாய
கொழும்பு -05
தொலைபேசி: 584380

# புதிய ஆட்சி

புதிய ஆட்சி அமைக்கப்பட்டதோடு எல்லாத் திசைகளிலிருந்தும் நம்பிக்கையின் குரல் ஒலிகளைக் கேட்கக் கூடியதாயிருக்கிறது. கடந்த பல வருடங்களாக இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் அரசியல் வரலாற்றை ஆய்வு செய்து வருகிற, புகழ் பெற்ற பேராசிரியர் ஏ.ஜே.வில்சன் அவர்கள் கூட ''நம்பிக்கையின் ஒரு கிரணம்'' தென்படுவதாக எழுதுகிறார்.

உண்மைதான்.

அவநம்பிக்கைகளோடு மனிதர்கள் வாழ முடியாது. அதுபோல காரண காரியத் தொடர்பு அற்ற நம்பிக்கைகளோடும் மனிதர்கள் வாழ முடியாது.

சந்திரிகா குமாரணதுங்க அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிற்பாடு நாட்டு மக்களுக்கு வழங்கிய பொறுப்புமிக்க உரையை (இந்த உரையின் தமிழாக்கத்தைக் கேட்க நாம் ஒரு நாள் பொறுத்திருக்க வேண்டியதாயிற்று!) இதுவரை கால ஆட்சித் தலைவர்கள் எவருமே தந்திருக்கவில்லை. ''மனிதத்துவம்'', ''உண்மையான ஜனநாயகம்'', ''சமாதானம்'', ''தமிழ் மக்களுக்கு ஒரு நேசக்கரம்'' என்ற முக்கியமான அம்சங்களைப் பிரதமர் தனது உரையினதும் தனது ஆட்சியினதும் அத்திவாரமாகக் கொண்டுள்ளார் என்ற மனப்பதிவை அவர் எமக்குத் தந்திருக்கிறார்.

சமாதானத்தை நிலை நிறுத்துவதற்கான ஆணையை மக்களிடமிருந்து பெற்றுக் கொண்டுள்ளதாக வலியுறுத்தும் பிரதமர் அவர்கள் சமத்துவத்துடன் கூடிய சமாதானமே (Peace with Equality) நிலையானது என்பதை அறியாதிருக்க முடியாது. வாக்குறுதிகளும் ஒப்பந்தங்களும் நீர் மேல் எழுதுக்களாகிய நான்கு தசாப்த வரலாறு எங்களுக்குப் பின்னால் உள்ளது.

அதுவும் குறிப்பாக 1970இல் ஆட்சிக்கு வந்த சுதந்திரக்கட்சி தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் அரசியந்திரத்தின் பல்லுகளிலும், சில்லுகளிலும் தனது கட்சியைச் சார்ந்தவர்களை மட்டுமே பொருத்தி ஒருபக்கச் சார்பானதாக மாற்றியது ஒன்றும் இரகசியமானதல்ல. இது என்ன விளைவுகளை ஏற்படுத்தியது என்பதை இன்றைய பொது ஜன முன்னணி அரசு உணர்ந்தாக வேண்டும்.

70ம் ஆண்டு ஐக்கிய முன்னணி அரசிடம் இருந்து தான் ஐ.தே.க. அரசு இந்த வழிமுறையைப் பெற்றுக் கொண்டது என்பதுவும் இங்கு சுட்டப்பட வேண்டியதாகிறது.

புதிய பிரதமரும் அவரைச் சூழ உள்ள புதிய சிந்தனையாளர்களும், வாசுதேவ நாணயக்கார, இந்திக குணவர்தன, பேர்னாட் சொய்ஸா, வை.பீ.டீ.சில்வா, கே.பி.சில்வா போன்ற இடதுசாரிகளும் புதிய ஆட்சியின் சமாதான நோக்கிற்குப் பலம் சேர்ப்பவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

நீண்டகால யுத்தங்கள் தொடர்பாக உலக அரங்கில் ஏற்பட்டு வரும் மாற்றங்களும் இணக்கப்பாடுகளும் புதிய ஆட்சியின் கொள்கை வகுப்பாளர்களால் உரிய முறையில் கிரகிக்கப்பட்டுள்ளது என்று பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், கலாநிதி ஜயதேவ உயங்கொட போன்றவர்கள் தெரிவிக்கிறார்கள்.

நல்லது.

செயல் ஒன்றுதான் முற்று முழுதான நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். பிரதமர் சொல்வது போல தென்னிலங்கை மக்களிடமிருந்து அவர் பெற்றுக் கொண்ட ஆணையை எவ்வித தயக்கமோ, பின்வாங்கலோ இன்றி அவர் நடைமுறைப்படுத்த வேண்டும்.

தமிழ் முஸ்லீம் மக்களுக்குச் செயல் மூலம் நம்பிக்கைகளைக் கட்டியெழுப்ப வேண்டும். இதற்கான (Confidence Building ) வேலைத் திட்டங்களை வரையும் பொறுப்பைக் கொழும்பின் பிரபல சமூக ஆய்வு, இனத்துவ ஆய்வு நிறுவனங்களிடம் பிரதமர் ஒப்படைத்திருப்பதாகத் தெரிகிறது. அரசியல்வாதிகளிடம் அன்றி அறிஞர்களிடம் இதனைத் தந்திருப்பது உகந்ததே. இந்த அறிஞர்கள் தங்கக் கோபுரங்களில் வாழ்பவர்கள் என்றால்தான் சிக்கல். எனினும் அந்த நிலை இல்லை என்றுதான் இப்போதைக்குத் தோன்றுகிறது.

தமிழ், முஸ்லீம் மக்களிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்காக என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பதை இந்த இதழில் எமது அலுவலக எழுத்தாளர் ''நாசமறுப்பான்'' விரிவாக எழுதியுள்ளார்.

இருபத்தி நான்கு மணி நேரத்தில் சிங்களத்தை அரசகரும மொழியாகக் கொண்டு வந்தவர்களும், இருபத்தி நான்கு மணி நேரத்தில் இ.போ.ச, C.T.B சின்னங்களைப் பஸ் வண்டியில் பொறித்தவர்களும் குறைந்தபட்சம் இரண்டு வாரங்களிலாவது பின்வரும் விஷயங்களைச் செய்ய முடியாதா?

★ பொருளாதாரத் தடை நீக்கல்

★ கொழும்பிலாவது (!) தமிழ் மொழிக்கு உரிய இடத்தை வழங்குவது.

புதிய ஆட்சியின் 'புதிய' சிந்தனையாளர் இது பற்றிய உணர்திறனுடன் இருப்பார்கள் என்று நம்புவோம். இந்த நம்பிக்கை எங்களைப் பொறுத்தவரை மிகுந்த விழிப்புடன் கூடிய ஒரு நம்பிக்கையாகும் (Cautious Optimism).

புதிய ஆட்சியின் சொல்லுக்கும் செயலுக்குமிடையேயான தூரம் பூச்சியமாக இருக்க வேண்டும்.

இருக்குமா?


# அவர் அப்படிக் கூறவில்லையாம்!

தங்களின் ஜூன் 16, ஜூன் 29 ஆகிய வெளியீடுகளில் வே.குறிஞ்சித்தம்பி அவர்களால் மட்டக்களப்பு ப.நோ.கூ.சங்கத் தலைவர் மை.பத்மநாதன் அவர்களைப் பற்றி அவர் பணியாளர் மத்தியில் பேசாத, சில உண்மைக்கு முரணான செய்திகளை வெளியிட்டுள்ளமைபற்றி தற்கான உண்மையான விளக்கத்தை தங்களிடம் சமர்ப்பிக்கின்றோம். இதை 'சரிநிகரி'ல் வெளியிட்டு எம்போன்ற வாசகர்களுக்கும் அபிமான நேயர்களுக்கும் உண்மையைத் தெளிவுபடுத்துவீர்கள் என நம்புகின்றோம்.


தலைவர் மை.பத்மநாதன் அவர்கள் 14.5.94 அன்று பணியாளர்களை சந்திப்பதாக 11.5.94இல் பணியாளர்களுக்கு அறிவித்திருந்தார். அவர் மாநகரசபை உறுப்பினராக இருக்கும் போது, ப.நோ.கூ. சங்கத்தில் உறுப்பினராகச் செயல்பட முடியாது என நாம் அறிந்து, சங்கத்தின் தலைவர் பதவியை இராஜினாமா செய்யாமல் மாநகர சபை உறுப்பினர் பதவியை விட்டு விலகக் கோரி, சங்கப் பணியாளர்கள் ஆகிய நாம் 99 வீதமானோர் கையொப்பமிட்டு 14.5.94ல் நடந்த கூட்டத்தில் தலைவரிடம் கையளித்தோம். அக்கூட்டத்தில் பேசிய மை.பத்மநாதன் அவர்கள் 'பணியாளர்கள் என்மீது வைத்துள்ள நம்பிக்கையையும் அபிமானத்தையும் ஏற்றுக்கொண்டு நான் உங்களுடனேயே இருக்கிறேன்; நான் ஏற்கனவே மாநகரசபை உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்த கடிதம், அமைச்சருக்கும் கூட்டுறவு ஆணையாளருக்கும் அனுப்பப்பட்டு விட்டது' என்று கூறினாரே தவிர 'அமைச்சரும் இராணுவமும் எனது கையாட்கள்' என்று எச்சந்தர்ப்பத்திலும் இப்படிப் பேசவில்லை. தலைவர் தமக்கு இரு மெய்ப்பாதுகாவலரை வைத்துள்ளார் என்பது உண்மையே. ஆனால் அவர்களால் எந்த ஊழியர்களுக்கும் எவ்வித பாதிப்போ ஏற்பட்டதில்லை என்பதுடன் அவர்கள் ஊழியர்களுடன் அன்புடனும் அன்னியோன்னியத்துடனும், கண்ணியத்துடனும் பழகுவதையும் அவ்தானிக்கலாம். எனவே, வே.குறிஞ்சித்தம்பி அவர்கள், எமது சங்கத்தில் பணிபுரிபவரல்லர். அத்துடன் சங்கத்துடன் எத்தொடர்பும் வைத்திருப்பவருமல்லர் என்பதையும் தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

கீழே சங்கத்தைச் சேர்ந்த 62பேர் ஒப்பிட்டிருக்கிறார்கள்.

**ம.ப.நோ.கூ.சங்கம்**
**105 திருமலை வீதி**
**மட்டக்களப்பு**




# இராசையாவின் இராசகாரியம்!



திருகோணமலையின் வடதிசையில் புல்மோட்டை வீதியில் அமைந்துள்ளது தி/இறக்கக் கண்டி அல்ஹம்றா வித்தியாலயம். இங்குள்ள உயர் வகுப்பு மாணவர்கள் பரீட்சை எழுதுவதற்காகத் தேசிய அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பிக்க வேண்டி இருந்தது. இதற்காக பாடசாலை அதிபர் முதலில் திருகோணமலைப் பெரும்பகுதிப் பதிவுக் காரியா்லயத்துக்கு பன்னிரண்டு மாணவர்களின் பிறப்புச் சாட்சிப் பத்திரங்களுக்கான விண்ணப்பத்தை அனுப்பியிருந்தார். அவற்றில் பெரும்பாலான மாணவர்களது பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் கிடைத்தன. சில மாணவர்களுக்கோ சிங்களத்தில் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

அதிபருக்கோ அல்லது இங்கு கடமையாற்றும் உதவி ஆசிரியர்களுக்கோ சிங்களம் தெரியாது. இதனால் இக்கடிதங்கள் எங்கிருந்து வந்தன என்பது பற்றிக் கூட இவர்களால் அறிந்து கொள்ள முடியாதிருந்தது. எனவே, அதிபர் இக்கடிதங்களை வாசிப்பதற்காகப் பக்கத்தில் உள்ள இராணுவ முகாமின் உதவியை நாடியுள்ளார். இராணுவத்தில் உள்ளவர்களுக்கோ தமிழ் தெரியாது. நீண்ட முயற்சியின் பின்னர் இக்கடிதங்கள் பதிவுக் காரியஸ்தரிடம் இருந்து வந்ததென்பதை விளக்கிக் கொண்டார். எனினும் அவற்றில் இருந்த விடயங்கள் என்ன என்பதை விளங்கிக் கொள்ள முடியவில்லை. இதனால் இக்கடிதத்தை உதவி ஆசிரியர்களின் உதவியுடன் திருகோணமலையில் உள்ள சிங்களம் தெரிந்தவர்களுக்கு அனுப்பி மொழி பெயர்க்க முயற்சி செய்துள்ளார்.

பதிவுக் காரியகர்த்தர் காரியாலயத்தில் மேலதிகப் பெரும் பகுதிப் பதிவாளராக (ஏ.டீ.ஆர்) ஒரு தமிழரே கடமையாற்றுகிறார். இவரது பெயர் எல்.இராசையா. கடிதத்தில் கையெழுத்திட்டிருப்பவரும் அவரே. இக்காரியாலயத்தில் கடமை புரிபவர்களில் தொண்ணூறு வீதமானவர்கள் தமிழ் பேசுபவர்கள். அப்படியிருந்தும் சிங்களத்தில் கடிதம் அனுப்பித் தன்னை அலைக்கழித்து விட்டதாக அதிபர் குறைபட்டுக் கொண்டார்.

அரசாங்க அலுவலகங்களில் இருந்து தமிழில் கடிதங்கள் அனுப்பப்படுவதில்லையே என்று குறை கூறினால், வடகிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் ''தமிழ் அதிகாரிகள் இல்லையே'' என்ற பதில் வரும். ஆனால், திருகோணமலைப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து சிங்களத்தில் கடிதங்கள் வந்தால் ''தமிழ் அதிகாரிகள் இல்லையே'' என்று கூறமுடியமா? தமிழ் பேசுபவர்கள் தமிழைப் புறக்கணிக்கும் போது மற்றவர்களைக் குறை சொல்லி என்ன பயன்?

**பாடசாலை அபிவிருத்திச் சபை**
**இறாக்கண்டி**

# பணம் எனக்குத் தரப்படவில்லை!

தங்களது சரிநிகர் இதழ் 49இல் வெளியாகிய ''மட்டக்களப்பு செஞ்சிலுவைச் சங்கம் சம்பந்தமான செய்தி சார்பாக:


''மேற்படி செய்தியில் மட்டக்களப்பு செஞ்சிலுவைச் சங்கம் எனக்கு 5லட்சத்து 50 ஆயிரம் பணம் தந்ததாகவும் அதற்கு நான் கணக்குச் சமர்ப்பித்ததாகவும், அதற்குரிய வேலைகள் நடைபெறவில்லை எனவும் வெளியான செய்தி முற்றிலும் பிழையானது. எனக்கு செஞ்சிலுவைச் சங்கம் 5லட்சத்து 50 ஆயிரம் தரவுமில்லை அதற்கு நான் கணக்கு சமர்ப்பிக்கவுமில்லை. பொலநறுவையிலிருந்து ஓட்டமாவடியில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு வீடுகளை அமைப்பதற்கு உதவி செய்யுமாறு செஞ்சிலுவைச் சங்கத்தை நான் கோரினேன். அதற்குகிணங்க அவர்கள் தாங்களாகவே உதவி செய்தனர். இவ்வுதவிகள் யாவும் ஓட்டமாவடிப்பகுதி பள்ளி கிராம முன்னேற்றச் சங்கம் மூலமாகவே விநியோகிக்கப்பட்டது. திரு.ஞானப்பிரகாசத்திற்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. அச்செய்தி முற்றிலும் பிழையானது.

**சின்னையா**
**ஓட்டமாவடி பிரதேச செயலாளர்**

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# "எமக்கு வெட்கமாக இருக்கிறது" "எவ்வளவு இனவாதிகளாக இருந்திருக்கிறோம்"

யுத்தத்துக்கு எதிரான உணர்வு கொண்ட சிங்கள இளைஞர்கள் பலர் சேர்ந்து அனைத்து இனங்களுக்கிடையிலான சகோதரத்துவம் எனும் இயக்கமொன்றை உருவாக்கியுள்ளனர். இவ்வருடம் பெப்ரவரி மாதம் 21 ம் திகதியன்று கொழும்பில் நடத்தப்பட்ட ராஜினி - றிச்சர்ட் நினைவு தினத்தன்று உத்தியோகபூர்வமாக இந்த இயக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்குத் தடையாக இருப்பவற்றுள் சிங்கள - தமிழ் - முஸ்லீம் மக்களுக்கிடையிலான புரிந்துணர்வின்மை என்பதும் பிரதானமான ஒன்று என இவ்வமைப்பினர் சுட்டிக் காட்டுகின்றனர். பல மட்டங்களில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வெவ்வேறுபட்ட அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிற இவ்வமைப்பு இனங்களுக்கிடையே புரிந்துணர்வை வளர்ப்பதற்கான மக்கள் இயக்கம் ஒன்று செயல்பட வேண்டும் என்று கூறுகிறது.

இதுவரை கொழும்பில் நடந்த ராஜினி-றிச்சர்ட் நினைவு விழா உட்பட அது போன்ற முக்கிய நிகழ்ச்சிகளின் போது தங்கள் இனப்புரிந்துணர்வை வெளிப்படுத்தும் துண்டுப்பிரசுரங்கள் வெளியிடுதல், சுவரொட்டி ஒட்டுதல் போன்ற வேலைகளையும் செய்து வருகின்றனர்.

இவ்வமைப்பின் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில் எந்த அரச சார்பற்ற நிறுவனத்தின் கீழ் இயங்கவும் இவர்கள் தயாரில்லை என்பதாகும். அது எங்கள் இலக்கை சிதைத்து விடக்கூடும் எனக் கூறுகிறார் இவ்வமைப்பின் பொறுப்பாளர் ஜயம்பதி புலத் சிங்ஹள.

இவர்கள் இவ்வமைப்பினூடாக 'யுத்த எதிர்ப்புத் திட்டம்' ஒன்றை உருவாக்கியுள்ளனர். இத்திட்டத்தின் மூலம் யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள விளைவுகள் அதற்கான காரணங்கள் என்பனவற்றை கிராமப்புறங்களுக்குச் சென்று பிரச்சாரங்கள் செய்து வருகின்றனர். இவ் 'யுத்த எதிர்ப்புத் திட்டத்தின் மூலம் இவ்வருடத்திலிருந்து 83 இனப்படு கொலை யூலை'யை ஒரு பாவத்துக்குரிய ஒரு நாளாக நினைவில் கொள்ள வைப்பதற்காக வருடா வருடம் அந்நாளில் பாரிய சுவரொட்டித் திட்டம், துண்டுப் பிரசுரங்களை ஆயிரக் கணக்கில் விநியோகித்துமுள்ளனர்.

இவாகளுடைய பல துண்டுப்பிரசுரங்களில் பொதுவாக இன முரண்பாடுகளுக்கான ஆரம்பம், பின்னணி, இன்று அதனை தலைமையேற்று நடத்துபவர்கள், அதன் கோரப்பிரதிபலன் என்பவை சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. இந்தச் செயற்பாடுகள் கிராமிய சிங்கள மக்கள் மத்தியில் நல்ல பலனை அளித்திருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

''நாங்கள் இவ்வளவு பெரிய கொடூர இனவாதிகளாக இருந்திருக்கிறோம் என்பதை நினைக்கும் போது வெட்கமாக இருக்கிறது' என கம்பஹாவில் இவ்வமைப்பினால் நடத்தப்பட்ட கூட்டத்தின் முடிவில் ஒரு பெண்மணி கூறினார்.

''ஒவ்வொரு வினாடியும் யுத்தத்திற்காக 793.00 ரூபாவும் வருடத்திற்கு 2,500 கோடி ரூபாவும் செலவு செய்யப்படுகிறது. பாடசாலை சிறுவர்களின் கல்விக்கோ 1,500 கோடி ரூபாய் கூட செலவு செய்யப்படுவதில்லை தெரியுமா? சுகாதாரத்திற்காக 750 கோடி ரூபா கூட செலவு செய்யப்படுவதில்லை தெரியுமா?''

''1983 இல் 12,500 பேர் இருந்த படையினர் 1993 இல் 80,000க்கும் மேலாக அதிகரிக்கப்பட்டது. ஆனாலும் பிரச்சினை குறைக்கப் பட்டதா...?''

''எம் நாட்டிலேயே யுத்தத்தினால் 4,87,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இன்னும் 2,50,000 பேர் அகதி முகாம்களில் இருக்கின்றனர். பாதிக்கப்பட்ட முழு மக்களையும் எடுத்துக் கொண்டால்... எமது நாட்டில் 16 பேருக்கொருவர் அகதி. தென்னாசியாவிலேயே பெரிய அகதி முகாம் எமது நாட்டிலேயே உள்ளது. அது 'மடு' முகாம். முழு நாடும் அகதி முகாமாக மாறும் காலம் தொலைவிலில்லை.''



''இனி மேலும் எம்மால் கண்ணையும், காதையும் பொத்திக் கொண்டிருக்கத்தான் முடியுமா..?'' என்கிறது ஒரு துண்டுப் பிரசுரம்.

மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்) வெளியிட்ட ''முறிந்தபனை' நூலின் சிங்களப் பதிப்பின் முதல் பதிப்பு தீர்ந்து விட்ட நிலையில் இதே புத்தகத்தை மக்களிடம் போய்ச் சேர வேண்டும் எனும் நோக்கில் இவர்கள் மலிவுப் பதிப்பாக அச்சிட்டு வெளியிட்டுள்ளனர்.

அதுமட்டுமன்றி இவர்கள் இதுவரை வெளியிட்ட அனேகமான துண்டுப்பிரசுரங்கள் கூட சிங்கள மொழியிலேயே வெளியிடப்பட்டன. அதற்கு இவர்கள் கூறும் காரணம் இன்று தமிழ் மக்களின் பிரச்சினையை சிங்கள மக்களுக்கு கொண்டு செல்லும் வேலையே மிகவும் பிரதானமானது என்பதாகும். அத்தோடு சரிநிகரின் சகோதரச் சிங்களப் பத்திரிகையான 'யுக்திய' பத்திரிகையில் தொடர்ந்து வெளிவரும் 'அயல் வீட்டானின் தினககுறிப்புகள்' எனும் தொடர் பத்தியையும் அடுத்து நூலாக வெளியிட உள்ளனர். இந்தத் தொடர் பத்தியில் வடக்கு கிழக்கு மக்கள் யுத்தத்தால் படும் அவலங்களும் அவர்களின் போராட்டங்களும் நாள் வாரியாக எழுதப்பட்டு வருகிறது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

**என்.எஸ்.குமரன்**

குருநாகல், அல்பிட்டிய கரந்தெனிய, அம்பலாங்கொட போன்ற இடங்களில் இந்த அமைப்பினர் தொடர்ந்தும் கூட்டங்களை நடத்தி வருகின்றனர்.

ரங்கள் வெளியிடுதல், பகிரங்க கருத்தரங்குகள், கூட்டங்களை நடத்துதல் எனப் பல நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர். மேலும் இனவாதக் கொடூரங்களை நினைவிற் கொள்ளும் வண்ணம் புகைப் படக் கண்காட்சிகள் என்பவற்றை நடத்தப் போகின்றனர். இவை இம்மாத கொடூர யூலை நினைவு தினத்திலிருந்து ஆரம்பமாகியுள்ளன . ஜூலை மாதம் கொழும்பிலிருந்து வெளிப் பிரதேசங்களுக்குச் செல்லும் எல்லாப் புகை வண்டிப் பயணிகளுக்கும் ஜூலைப் படுகொலை தொடர்பான துண்டுப் பிர

# அம்பாறை: கோட்டை விட்ட தமிழ்ப் பிரதிநிதித்துவம்!

இதுவரை காலமும் நடைபெற்று வந்த தொகுதிவாரியான தேர்தலிலும் சரி அதன்பின்பு வந்த விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தலிலும் சரி கிடைக்கப் பெற்றுவந்த பொத்துவில் தொகுதியை அடித்தளமாகக் கொண்ட பாராளுமன்றத் தமிழ்ப் பிரிதிநிதித்துவம் ஒன்று இம்முறை நடைபெற்ற பொதுத் தேர்தலின் ஊடாக இழக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் பொத்துவில் தொகுதியை அடித்தளமாகக் கொண்டே தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவாவது வழமை. 1989ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற திவ்வியநாதன் தான் எம்.பி ஆன தன் பின்பு, தான் சார்ந்து நின்று போட்டியிட்ட ரெலோ இயக்கத்திற்கு எதிராக அறிக்கைகள் விட்டு தன்னை ஒரு ஐ.தே.க கட்சியின் விசுவாசியாகக் காட்டிக் கொண்டதுடன் தான், அம்பாறை மாவட்டத் தமிழ்ப் பிரதிநிதித்துவதிற்கு ஆபத்து ஆரம்பமானது என்று குறிப்பிடலாம். இறுதி வரை தேர்தலில் போட்டியிட மாட்டேன் என்றும் அரசியலில் இருந்து ஒதுங்கப் போவதாகவும் தொடர்ச்சியான அறிக்கைகளை விட்ட திவ்வியநாதன் இறுதிநேரத்தில் ஐ.தே.கவில் போட்டியிட முன்வந்தமை ஐ.தே.கவுக்கு இவர் விலை போனமையையும், இவரைப் பாவித்து தனக்குரிய பிரதிநிதித்துவத்தை அது காப்பாற்றிக் கொண்டமையையுமே குறிக்கின்றது.

அம்பாறை மாவட்டத்தில் நடந்து முடிந்த பொதுத்தேர்தலின் போது நேரடியான போட்டி முஸ்லீம் காங்கிரஸ் ஐ.தே.க என்பவற்றுக்கிடையிலேயே இருந்தது. ஆனாலும் வெற்றிக்கான வாய்ப்பு மு.காங்கிரஸ் பக்கமாக இருந்தது. என்ன தான் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களையும், மன்சூர் போன்ற மந்திரியையும் தேர்தலில் நிறுத்தியும் ஐ.தே.க அம்பாறையில் தோல்வியையே கண்டது. இதை முன்கூட்டியே எதிர்பார்த்த ஐ.தே.க தன்னுடைய பிரதிநித்துவத்தைப் பாதுகாக்க தமிழ் வாக்குகளைச் சிதறச் செய்வதையே குறுகிய நோக்கமாகக் கொண்டு திவ்வியநாதனைத் தேர்தலில் நிறுத்தியது என்பதுதான் நடந்த உண்மை. திவ்வியநாதன் முன்னாள் எம்.பி என்ற ரீதியிலும் அவர் பொத்துவில் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்ற ரீதியிலும் அவரைப் பயன்படுத்தினால் தான் தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறச் செய்ய முடியும் என உணர்ந்து திவ்வியநாதனை நிறுத்தி அதில் வெற்றியும் கண்டுள்ளது. ஆக நடந்து முடிந்த தேர்தலில் திவ்வியநாதன் தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் ஒரு கோடாரிக் காம்பாகவே செயற்பட்டிருக்கின்றார். ஆனால் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டமைக்கு இது மாத்திரம் காரணம் அல்ல. அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்ட தமிழ்க்கட்சிகளும் தங்களது பலத்தையும், தங்களது செல்வாக்கையும்தான் நிலை நிறுத்த முயற்சித்தார்களே தவிர தமிழ் மக்களின் சார்பில் ஒருவர் மாத்திரமே அம்பாறை மாவட்டத்தில் இருந்து தெரிவாக முடியும் என்ற உண்மையை மறந்து போட்டியிட்ட எல்லோரும் தங்களுக்குத்தான் வெற்றி என்ற மமதையில் திரிந்ததையே அவதானிக்க முடிந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எப் அங்கு போட்டியிட்ட கோபாலகிருஷ்ணன் (இவர் ஒரு அப்பழுக்கற்ற ஈ.பி.ஆர்.எல்.எப் என்பது வேறு விடயம்) தலைமையிலான சுயேட்சைக்குழுவை தன்னுடையது என்று கூற அதற்கு சுயேட்சைக்குழு மறுப்பறிக்கை விட அதிலும் தமிழ் மக்கள் குழப்பியடிக்கப்பட்டனர். போதாததற்கு ரெலோ தானும் போட்டியில் இறங்கி இருந்ததையும் கலைத்தது. ஆக மொத்தத்தில் ஒரே ஒரு தமிழ் எம்.பி தெரிவாகக் கூடிய அம்பாறை மாவட்டத்தில் அப்பதவிக்கு போட்டியிட்ட தமிழர்களின் எண்ணிக்கை 30ற்கும் அதிகம். இதன் முடிவு அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டு அம்பாறையில் தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக அனாதைகளாக ஆக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் மு.காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் தனது உரையின் போது அற்ப சலுகைகளுக்காக தமிழ் மக்கள் சோரம் போய்விட்டனர் என்றும், இனிமேல் தான் அவர்களைக் காப்பாற்றப் போவதாகவும் கூறியுள்ளார். ஆரம்பத்திலேயே தமிழ் மக்களைக் குற்றஞ்சாட்டும் தொனியின் பேசும் இவராலும், இவர் கட்சியாலும் தமிழ் மக்கள் ஆதரிக்கப்படுவார்களா என்பது ஒரு கேள்விக்குறியே. பொது ஜன முன்னணியில் தெரிவு செய்யப்பட்டவரும் ஒரு சிங்களவரே.

ஆக அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் நிலைக்கு அங்கு போட்டியிட்ட தமிழ்க் குழுக்களும் போட்டியிட்ட தமிழர்களும் காரணமானவர் என்பது மறுக்கப்பட முடியாத உண்மை அல்லவா?

**-ரி.எஸ்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# சந்திரிகா : வளர்பிறையா ? தேய்பிறையா ?

சந்திரிகாவின் தேர்தல் வெற்றி ஏற்படுத்தியிருக்கின்ற மகிழ்ச்சி அலை, இந்திய அமைதிப்படையின் வருகையின் போது யாழ்ப்பாணத்தில் இருந்த மகிழ்ச்சி அலைக்கும் சற்றும் குறைவில்லாத விதத்தில் வீசுகின்றது. குறிப்பாக வடக்குக் கிழக்கில் இதுவரை கால யுத்தமும் அது தந்த கசப்பான அனுபவங்களும் இந்தியப்படை வருவதற்கு முன்பிருந்த நிலைமையை விட மோசமானவை. அன்றைய பொருளாதாரத் தடை ஒருசில மாதங்கள் கூட நீடிக்கவில்லை. ஆனால் 1990 லிருந்து கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக நீடித்துள்ள யுத்தமும் பொருளாதாரத் தடையும் மக்களிடையே குறிப்பாக வடக்கு மக்களிடையே ஏதாவது ஒரு நம்பிக்கை தரும் ஒளி வீச்சு வராதா என்ற ஏக்கத்தை வளர்த்து விட்டிருந்தன. சந்திரிகாவின் தேர்தல் வெற்றியும், 'ஒரு பிளேட் சோறு கொடுத்தேன் போதாதா' என்று பேசிய ஐ.தே.க இனவாத அரசாங்கத்தின் வீழ்ச்சியும் ஒரு புதிய நம்பிக்கையை ஊட்டியிருப்பதில் வியப்பில்லை.

பிரதமர் பதவி ஏற்றுக் கொண்டதும், சந்திரிகா குமாரணதுங்க நாட்டு மக்களுக்காற்றிய உரையில், தேர்தலுக்கு முன் தெரிவித்தது. போலவே இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சகல முயற்சிகளையும் எடுப்பேன் என்று அறிவித்தது இந்த நம்பிக்கைக்கு மேலும் வலுவூட்டியுள்ளது.

வடக்கு மீதான பொருளாதாரத் தடை நீங்கும், போக்குவரத்துக்கான பாதை திறக்கப்படும். யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்டுவிடும், யாழ்ப்பாணத்திற்கு, தாண்டிக்கு எம் தாண்டி ரெயில் ஓடப்போகிறது என்றெல்லாம் எதிர்பார்ப்புகள் உருவாகியுள்ளன.

'எப்படா பாதை திறக்கும், நாங்கள் யாழ்ப்பாணம் ஓட' என்று காத்துக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணத்த வரை கொழும்பு வாடகை வீடுகளெங்கும் காணக்கூடியதாக இருக்கிறது.

கடந்த 17 ஆண்டுகால ஐ.தே.க. ஆட்சியின் ஊழல், அதிகார துஷ்பிரயோகம், படுகொலைகள் என்பன நிறைந்த பேயாட்சியிலிருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வு நாடு பூராவுமே தீவிரமாக வளர்ந்து விட்டிருந்தது. இனிமேலும் பொறுக்க முடியாது என்கிற அளவுக்கு ஐ.தே.கவினரின் காட்டாட்சி மக்கள் மீது அளவற்ற சுமைகளைச் சுமத்தி விட்டிருந்தது. நடந்து முடிந்த பொதுத்தேர்தலில், ஐ.தே.கவின் ஆட்சியை எப்படியாவது வீழ்த்திவிட வேண்டும் என்பதே நாட்டின் அனைத்துப் பிரிவினரதும் தேவையாகவும் இருந்தது.

ஐ.தே.க அரசின் கொலைக் கலாசாரத்திற்கு, ஊழலும் அதிகார துஷ்பிரயோகமும் நிறைந்த அரசியலுக்கு முடிவுகட்ட வந்துதித்த ஒரு தேவதையாகவே சந்திரிகா சித்திரிக்கப்படுகின்றார்.

சந்திரிகா அரசு. ஐ.தே.கவினை வீழ்த்துவதுடன் மட்டுமல்ல, அதற்கு மாற்றான, மக்களது ஜனநாயக உரிமைகளை மதிக்கின்ற, அமைதியாக வாழ விரும்பும் அவர்களது விருப்பங்களை நிறைவேற்றுகின்ற, நாட்டை அழிவுப்பாதையிலிருந்து மீட்டெடுக்கின்ற ஒரு அரசாகவும் அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் கூடவே எழுந்துள்ளது.

புதிய அரசாங்கம் ஆட்சியேற்றவுடனான ஒருசில நடவடிக்கைகள் பத்திரிகை அறிக்கைகள், அமைச்சர்களின் பேச்சுக்கள், தேர்தல் வாக்குறுதிகளை தாம் காப்பாற்றுவோம் என்கின்ற அறிவிப்புகள் எல்லாம் இந்த எதிர்பார்ப்புக்களை மேலும் வலுவூட்டி வருகின்றன.

இந்த அரசாங்கத்துள் மக்களது நலன்காக்கும் பல விடயங்களைச் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையும் பல புத்திஜீவிகள் மத்தியில் காணப்படுகின்றது.

வடக்கு கிழக்கு பிரச்சினையைப் பொறுத்தவரை, சந்திரிகா அரசு எப்படியாவது இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வினைக் கொண்டு வரும் என்ற நம்பிக்கையும் தமிழ் முஸ்லீம் மக்கள் மத்தியில் மட்டுமல்ல, சிங்கள மக்கள் மத்தியிலும் காணக்கூடியதாக இருக்கின்றது.

ஆனால், எப்போதுமே வெறும் மனவிருப்பங்களும் ஆசைகளுமே பிரச்சினைகளை தீர்த்துவிடுவதில்லை. மனவிருப்பங்களை வெளிப்படுத்துகின்ற ஒவ்வொரு கணமும் விருப்பங்களை வெளிப்படுத்துபவர் மீதான நம்பிக்கைகள் வளர்த்து விடப்படுகின்றன. ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்துவதனால் மட்டுமே இந்த நம்பிக்கைகளை நிரந்தரமானதாக்க முடியும்.

சந்திரிகாவினதும், சந்திரிகா அரசினதும் இங்குள்ள இனப்பிரச்சினையை தீர்ப்பது தொடர்பான ஆர்வத்தினையும் அதற்கான அர்ப்பணிப்புகளையும் யாரும் இந்த நேரத்தில் சந்தேகிக்க வேண்டியதில்லை. தேர்தலுக்கு முன்னர், இனப்பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக தெளிவான எந்தக் கருத்துக்களையும் சந்திரிகாவோ அவரது அணியினரோ தெரிவித்திருக்கவில்லை; எந்தத் தமிழ் பாராளுமன்ற கட்சிகளுடனும் இது தொடர்பாக பேசி முடிவுக்கு வருவதற்கும் கூட முயலவில்லை. ஆனாலும், அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக, தமிழ், முஸ்லீம் கட்சிகளின் பிரதிநிதிகளது ஆதரவுடனேயே ஆட்சியை அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இந்தக் காரணத்திற்காகவேனும், இனப்பிரச்சினை தொடர்பாக ஒரு தீர்வுக்கான முயற்சிகளில் ஈடுபடுவது அவர்களது தார்மீகப் பொறுப்பாகி விடுகிறது. எப்படியோ, இப்பிரச்சினை தொடர்பான ஒரு தீர்வு காண்பதற்கான அவர்களது முயற்சியை யாரும் சந்தேகிக்க வேண்டியதில்லை.

அதேவேளை, இந்த முயற்சிகள் வெற்றிபெற வேண்டுமானால், சந்திரிகாவின் அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டிய சில விடயங்கள் இருக்கின்றன. நாட்டின் இனப்பிரச்சினை தொடர்பாக தாங்கள் புரிந்து வைத்திருப்பவைகள் மேலோட்டமானவைகள் அல்ல, அப்பிரச்சினையின் ஆழம்வரை அதை தாம் புரிந்து வைத்திருக்கின்றோம் என்பதை வெளிப்படுத்துவது அவசியம். நாட்டின் இனப்பிரச்சினை ஒரு சில அதிகார அலகுகளை உருவாக்கி விடுவதன் மூலமாக தீர்ந்துவிடுகிற பிரச்சினை அல்ல. இது இரண்டு தேசிய இனங்கள் ஒன்றை ஒன்று அங்கீகரிக்கின்ற, ஒன்றுக்கு ஒன்று மதிப்பளிக்கின்றதா என்கிற பிரச்சினை. இந்த நிலைமையை சிருஷ்டிப்பது ஒன்றும் ஓரிரு நாட்களில் முடிந்து விடக்கூடிய விடயம் அல்ல. கடந்த நான்கு தசாப்தங்களாக வளர்த்து வரப்பட்ட இனவாதம், இன சகிப்பின்மை என்பனவற்றை முற்றாக இல்லாது ஒழிப்பது என்பது தொடர்ச்சியான ஒரு புதிய சமூக கலாசார கட்டுமானத்திற்கான பணியுடன் தொடர்புபட்டதாகும். பாடப் புத்தகங்களிலேயே இனவாதம் புகுந்துள்ள, பள்ளிச் சிறார்களே இனவாதம் பேசுகின்ற, பிற தேசிய இனங்களை அந்நியர்கள், எதிரிகள் என உணர்கின்ற பண்பாட்டுத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. இது இல்லாதொழிக்கப்பட வேண்டுமானால்,முற்றுமுழுதான-நாடளவிலான ஒரு கலாசார தளத்திலான விழிப்புணர்வு உருவாக வேண்டும்.

இதற்கு அடிப்படையாக, இது இரு தேசங்களுக்கிடையிலான பிரச்சினை என்ற உண்மையை விளங்கிக் கொள்ளல் வேண்டும். இரு தேசங்களுக்கிடையிலான பிரச்சினை இது என்று விளங்கிக் கொள்ளாதவரை இப்பிரச்சினை நிரந்தரமாக தீர்க்கப்பட முடியாததாகும். பல்லின பல்மத சமூகங்கள் வாழும் ஒரு நாட்டில், ஒரு குறிப்பிட்ட மதமே அரசமதமாக இருப்பது இந்த அடிப்படையை ஏற்றுக் கொள்ளாமையில் இருந்தே எழுகிறது.

எப்படியோ, இவையெல்லாம் உடனடியாக சாதிக்கப்படக்கூடியவைகள் அல்ல. ஆனால் இவற்றை சாதிப்பதற்கான சூழலை உருவாக்கக்கூடிய 'பரஸ்பர நம்பிக்கையை' தரவல்ல சில விடயங்களை உடனடியாகச் செய்தாக வேண்டும்.

1. நிபந்தனை அற்ற யுத்த நிறுத்தத்தை அறிவிப்பது. அதாவது வடக்கு கிழக்கு மக்கள் மீதான யுத்தத்தை நடாத்துவது அரசின் நோக்கம் அல்ல என்பதை வெளிப்படுத்துவது. விடுதலைப் புலிகளிடம் தாக்குதலில் ஈடுபடாதிருக்குமாறு கோருவதற்கான அடிப்படை இது வாகும்.

2. பொருளாதார தடையை நீக்குவது. உணவுப் பொருட்களை மற்றும் பாவனைப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கான தடை நீக்கப்படுவது, அதாவது மக்களை பட்டினி போடுவது எமது நோக்கமல்ல என்று உணர்த்துவது. சவர்க்காரம் முதல், றோணியோ பேப்பர் வரை தடை செய்யப்பட்டுள்ள சகல பாவனைப் பொருட்களும் மக்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

3. போக்குவரத்துக்கான பாதையை திறந்துவிடல். மக்கள் விரும்பிய வித்தில் போய் வர ஏதுவான பாதுகாப்பான ஒரு பாதை அவசியம். இதற்கான வாய்ப்புக்களை புலிகளுடன் பேசி உருவாக்கிக் கொள்ள முயல்வது.

4. விடுதலைப்புலிகளுடன் இவை தொடர்பாக பேசுவதற்கு தயார் என்று அறிவிப்பது.

5. வடக்கு கிழக்கு மக்களுக்கான நிவாரண உதவிகள் அம்மக்களுக்கு போய்ச்சேர வழி செய்தல்.

இந்த ஐந்து அம்சங்களும் செய்யப்படுமாயின் மட்டுமே பரஸ்பர நம்பிக்கைக்கான ஒரு வாய்ப்பு ஏற்படும்; இந்த அரசு எதையாவது செய்யும் என்ற உணர்வு மக்கள் மத்தியில் ஏற்படமுடியும். இனவாதத்தை தூண்டும் பிரச்சாரங்களை சட்டரீதியாக தடை செய்வது இந் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, இப்பிரச்சினையை தீர்ப்பதற்கான தீர்வுத் திட்டமாக, அரசு தான் எதை கருதுகிறதோ அதைப் பகிரங்கமாக முன் வைப்பதும் அவசியமாகும்.

'சந்திரிகை'யை வளர்பிறையா தேய்பிறையா என்று நிரூபிக்கப் போகிற பிரச்சினை மட்டுமல்ல இது,இந்நாட்டின் வரலாறு தொடர்ந்தும் இரத்தத்தால்தான் எழுதப்படப் போகிறதா? என்ற பிரச்சினையும் கூட.

ஆட்சிக்கு வருகிற ஒவ்வொருவரும் இனப்பிரச்சினையை மூன்று மாதத்துள் தீர்த்து விடப் போவதாக கூறக் கேட்டிருக்கிறோம். சந்திரிக்கா இன்னமும் அப்படி சொல்லவில்லை அவர் சொன்னாலென்ன சொல்லா விட்டாலென்ன மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு என்ன நடக்கப் போகிறது என்பதை மட்டும் ஒரு மூன்று மாதங்களுக்குள் நிச்சயமாக கூறி விடலாம் ●



ஜோசமருப்பான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எதிலிருந்து தொடங்குவது-10

## இளம் பருவக் கோளாறிலிருந்து...

**டேவிட் நந்தகுமார்**

"புள்ளோய் ஓடி வா......" என்று கதறினார். ஓடினேன் நான். பொசுங்கிக் கொண்டிருந்தார். சீலையை இழுத்து நிலத்தில் விழுத்தி, அம்மம்மாவை உருட்டினேன்.

பலர் வந்து விட்டனர்.

கணேசண்ணையின் கார் வந்தது. வாழையின் குருத்து இலையில் அம்மம்மாவைப் பொத்திப் பிடித்து ஏற்றினார்கள்.

"அம்மா, என்னம்மா செய்யுது?" என்று எனது அம்மா, தனது அம்மாவிடம் கேட்டார்.

"இனி அம்மா தான்..." என்று அம்மம்மா சொன்னார்.

அவர் சொன்னது சரியாகிப் போய் விட்டது. இரண்டாம் நாள் கருகிய உடலுடன் இறந்து போனார்,

நான் படுத்திருந்த இரவோ, சாமமோ, விடியவோ... நினைப்பில்லை. சின்னமாமா வந்து அம்மம்மா ஆஸ்பத்திரியில் இறந்து போனதாகச் சொன்னார்.

அம்மனும் வைரவரும் உலாவுகிற அவர்கள் கொஞ்சம் அசந்தால் பேய்கள் உலாவுகிற தஞ்சிட்டிச் சந்தி தாண்டி இருக்கிற மூத்தமாமா வீட்டிற்கு நான் அந்த இருட்டில் செய்தி சொல்லப் போனேன்.

என்னவென்று தெரியவில்லை. அப்போது பயம் வரவில்லை. எரிந்து கொண்டிருக்கிற அம்மம்மா தான் தெரிந்து கொண்டிருந்தார்.

நம் வீட்டில் நடந்த முதலாவது செத்தவீடு அது. அப்போது நம்வீட்டில் வயறிங் செய்து முடிந்திருந்தது. ஊருக்கு மின்சாரம் வரவில்லை. வந்திருந்தால் அம்மம்மாவின் இறப்பைத் தவிர்த்திருக்கலாம் என்று அடிக்கடி யோசிப்பேன்.

இரவினில் அம்மம்மா பாக்கு இடிக்கிற சத்தம் ஒவ்வொருநாளும் கேட்கிறது. டொக், டொக், டொக்.....

பிறகு இன்னொரு சத்தம் கேட்கிறது. "புள்ளோய்.... புள்ளோய்...." அவலமாக ஒலிக்கிற குரல்.

நமக்கு முழிப்புத் தட்டுகிறது. நித்திரை வருகிறபாடாக இல்லை. துயர் தோய்கிறது. நான் அம்மம்மாவுக்குக் கொடுமை செய்யாது விட்டிருக்கலாம். பூவரசமிலையை வெத்திலைத் தட்டத்தில் போடாது விட்டிருக்கலாம். "உடம்பு சூடா இருக்கு. ராசா, குளிக்கிறதுக்குக் கொஞ்சம் தண்ணி அள்ளித்தா...." என்று கேட்ட போது தண்ணி அள்ளிக் கொடுத்திருக்கலாம். வெள்ளிக் கிழமைகளில் அம்மாள் கோயிலுக்குக் கூட்டிக் கொண்டு போகச் சொன்ன போது கூட்டிப் போயிருக்கலாம்.

இப்போது டொக்... டொக்.... சத்தம். புள்ளோய், புள்ளோய்... அவலக்குரல்.

இந்த இறப்புத்தான் என்னை உணர வைத்தது. பதினான்கு வயது அப்போது எனக்கு. நான் மிகச் சரியாக இருக்க வேண்டும். என்னை நான் உணர வேண்டும்.

என் சூழல் எது? தோட்டவெளி, பனைமரத் தோப்பு, பற்றைக்காடு, ஆங்காங்கு கோயில்கள், இரவினில் மண்ணெண்ணெய்ப் புகை மூக்கில் நுழைகிற விளக்கு.

என் பரம்பரை என்ன செய்கிறார்கள்? பெரும்பான்மை தோட்டம் கொத்துகிறார்கள். சிறுபான்மை வேட்டி கட்டி உத்தியோகம் செய்கிறார்கள்.

இதற்குள்ளிருந்து நான் என்ன செய்யப் போகிறேன்? என் கடமை என்ன?

தோட்டம் கொத்திக் கொத்தியே அழிந்து போவதா?

படிக்க வேண்டும். என் அறிவு பெருக வேண்டும். அறிவு பெருகியிருந்தால் அம்மம்மாவிற்கு கொடுமை செய்திருக்க மாட்டேன். இறப்பைக் கூட சில வேளை தவிர்த்திருக்கலாம்.

அந்த இரவிலும் அழுகை வந்தது. அம்மம்மா இறந்ததற்கு முதன் முதலாக அழுகை வந்தது.

சன்னிதிக் கோயில் திருவிழாவிற்கு அல்லது வெள்ளிக்கிழமை பூசைக்குச் சென்றால் கடலைச் சரையும் பனங்கட்டிக் குட்டான்களும் கொண்டு வந்து தருவார்.

"பனங்கட்டியைக் கடிச்சுக் கொண்டு கடலையைத் திண்டு பார். என்ன சோக்காயிருக்கும்...."

நல்லூர்க் கந்தனைத் திரும்பியும் பார்ப்பதில்லை. மாவிட்டபுரக் கந்தன் அயலில் இருந்த போதும், தீர்த்தத் தன்று ஆடி அமாவாசை நாளானபடியால் கீரிமலைக்கு மாத்திரம் செல்வதுண்டு. ஆனால் தொண்டமானாறு சன்னிதி கோயில் திருவிழாவிற்கு விரதமும், வலு ஒழுங்கும்.

அம்மம்மா கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு செல்வார். "வா ராசா.... சன்னிதியான்ரை அருளாலை தான் நீ பிறந்தனி."

இந்த அம்மம்மாவுக்குக் கண் தெரியாத போது நான் கோயிலுக்குக் கூட்டிச் செல்லவில்லை.

நான் திருந்த வேண்டும்.

அப்போது இரண்டுங்கெட்டான் சூழலில் வளர்ந்து கொண்டிருந்தேன்.

எனக்கு அப்போது முகமெல்லாம் பரு போடத் தொடங்கியது. பரு எதற்குப் போடுகிறது என்று தெரியவில்லை. மீசை மயிர் அரும்பத் தொடங்கியது. நாடிப் பகுதியில் ஓரிடத்தில் மாத்திரம் அதிக மயிர் முளைத்தது.

நம் உடலில் பல்வேறு மாற்றங்கள். திடீரென்று நெடுத்தது போல, திடீரென்று முகம் ஒடுங்கியது போல, அப்படியேதான் மாறிப் போனேன் நான்.

சூட்சமான பல விளைவுகள் நம் உடலில் தெரிந்தன. குரல் தடித்துப் போனது. சொற்கள் திணறித் திணறி வெளி வந்தன. நான் கதைப்பது எனக்கே அந்நியமாகி ஒலித்தது. நான் இவ்வுலகிற்கு அந்நியப்பட்டுக் கொண்டிருந்தேன்.

விரக்தி என்னைச் சூழ்ந்தது. நம் வீடு நமக்கு விரோதியாகத் தெரிந்தது. தோட்டத்தில் தண்ணீர் கட்டுகிறபோது, பாத்திகளில் நீர் தேங்கி உடைக்க ஆரம்பித்தது. அவ்வளவும் கனவு. பகற் கனவு. மிளகாய்ப் பழம் ஆய்கிறதில் மனம் செலுத்த முடிவதில்லை. வெங்காயம் பிடுங்குவதில், பிடி கட்டுவதில், லொறியில் வெங்காய மூட்டையை ஏற்றுவதில் ஒன்றிலும் ஆர்வம் கொள்ள முடியவில்லை.

நாதனுடன் கதைப்பதற்கு நிறைய இருந்தது. நாதன் சண்டிக்கட்டு நிறையப் புழுக்கொடியல் கொண்டு வருவான். தேங்காய்ச் சொட்டும் இருக்கும். நாதன் சூத்திரத்தை வளைக்கிற போது ஏறிக்குந்தினால், தேங்காய்ச் சொட்டுக் கடித்து, புழுக்கொடியல் தின்று, நிறைய நேரம் கதைக்கலாம்.

கதைப்பதற்கு நிறைய விஷயங்கள் இருந்தன. இருவர்க்கும் மாத்திரமே இருந்த இரகசியம்.

ஆனால் நாதனுக்கும் சொல்லாமல், சொல்ல முடியாமல் ஒரு இரகசியம். நம் மனதுள் புதைந்து குறுகிக் கிடந்தது.

இப்போது சொல்ல வாய் உன்னுகிற போது கூட கூச்சம் தடுக்கிறது. அந்த இரகசியம், இரகசியமாகவே மனதுள் புதைந்து சமாதியாகி விட்டிருந்தது.

அப்போது பெண்களைக் கண்டால் கூச்சம். ஒதுங்கிப் போகிற சுபாவம். நாலு பெண்கள் கூடுகிற இடத்தில் நடக்கிற போது கால்கள் தடுமாறும். சில பெண்கள் வாயால் வம்புக்கிழுக்கிற போது, நம் வாய் வரை வார்த்தைகள் வராது. அசட்டுச் சிரிப்புடன் நகர்ந்தால் போதும். தெரிந்த பெண்கள் கண்டு சிரித்தால் வியர்த்து வழிகிறது.

இப்படி ஒரு காலம் இருந்தது.

ஆனால் அரசியல் என்று வருகிற போது, அத்தனையும் தவிடு பொடி.

நம் தானைத் தளபதி அமிர்தலிங்கம் அப்போது எம்.பி இல்லை. அழகான தமிழில் அவர் பேசுகிற போது உடல் புல்லரிக்கும். இப்படி ஒரு தலைவர் நமக்குக் கிடைத்ததற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

சின்னமாமி வாயூறிச் சொல்லுவார்;"என்ன மாதிரிப் பேசுகிறான்" என்று. தங்கு தடையில்லாத தமிழ். தமிழ் தனித்து விளையாடுகிற நாக்கு. மிடுக்கான பார்வை. கம்பீரமான தோற்றம். எண்ணி, எண்ணி எடுத்து வைக்கிற சொற்கள். இவர் காலத்தில் ஈழம் நமக்குக் கிடைக்கும். நமக்கொரு நாடு கிடைக்கும்.

அமிர் பேச்சைக் கேட்டவர் யாரும் இக்கருத்திலிருந்து தப்ப முடியாது. அவர் பார்வையில் அகப்பட்ட எவரும் இக்கருத்தை மறுக்க முடியாது.

(வரும்)

# ஆணலை

கண்ணுக் கெட்டிய தொலைவு வரை
கரைகள் பொங்கித் ததும்ப
எழுந்தெழுந்து ஆர்பரித்தது கடல்.
ஒன்று உருண்டு கரையில் அழிய முன்
அடுத்தடுத்தென பாயாய்ச் சுருள
மடியும் அலைகள்.

இன்றனைத்து அலைகளும் பேரலைகளே!
ஏழாவதாய் எழும் ஆணலைகள் தவிர
வேறு சிறு அலைகள்
ஏதுமில்லை கடலில்.

இரைந்திரைந்து அலைகளெறிந்து
பிளிறிற்று கடல்
அதனிலும் பெரிதாய்த் திமிறி எழுந்தன
ஆயிரம் இராட்சத அலைகள் மனதில்
பாறாங்கற்களை மோதி அடித்தன.

போர்ப்பறை அறைந்து
முழங்கிற்றென்னுள்
பிறிதோர் கடல்.

கால்கள் அலைகளில் நனைந்திட
பின்புறத்தே ஈரம்
பிசு பிசுக்கும் கடலோரம்
முழங்கால்கள் பற்றி வெறித்திருந்தேன் கடலை.
சேர்ச்சின் முன்னிருந்த செக் பொயின்றில்
என் சேட் கொலர் பிடித்து முறைத்து
உறுக்கிய மூவரதும் கோர முகங்கள்
தோன்றித் தோன்றிக் கிளறின எனை
நெஞ்சுலர
வெளியேறும் மூச்செல்லாம் கடுகாற்றாய்.
என்னிரு கண் வழியும்
தீ வரல் கூடும் இனி.
உச்ச சினத்தில் துடித்தன என்
சதைத்துண்டுகள் தனித்தனியே.

மிகவும் கொந்தளித்திருந்தேன் நான்.

பாலிறைக்கும் சந்திரன்
மங்கலான மென்நீல ஆகாயப் பரப்பினிடை
ஊரும் மேகப் பஞ்சுக் குவியல்கள்.
பூமிக்கு ஒளிக் கூர்கள்
நீட்டும் வெள்ளிகள்
கடலின் நடுவினிலே
வலையிழுக்கும் மீனவர் தம்
தோணிகளில்
வில்லமைவில் ஒளிரும் மின்குமிழ்கள்
ஆடைகளின் உள்புகுந்தென்
ஆண்குறியின் ஈரமும் உலர்த்திப் போகிற
மலர் விரல்கள் பொருந்திய இக்
கடற்கரையின் காற்று
என் முதுகின் பின் கரையொதுங்கியுள
படகுகள் எல்லாம் தம்
சோபையை எவ்விடம் தொலைத்தன இன்றிரவில்?
குஞ்சுக் கோழியின் இறகிலும்
மென்மையினதான என் இதயம்
காற்றின் வெளிகளிலே
கால் தாவ மாட்டாமல்
உயர உயர அலாதியாய் மிதந்துலாவ
இவை தந்த ரம்யமெலாம்
எங்கு போய்த் தொலைந்தனவோ?

வெடித்துச் சிதறி இம்மனம்
தணித்திடாதோ கோபம்?

அடங்காமல் மென் மேலும்
பெருக்கெடுக்கும் மனதினிலே
பேரலைகள் குமுறி
எழுந்து விழ
சாறணில் ஒட்டிய குருத்து மணல்கள் தட்டி
என் பிரிய கடற்கரையில்
கால்கள் புதைய
தாழம் பற்றை இருளில்
சாத்தி வைத்த சைக்கிள் நோக்கி
நகரும் என் கால்கள்.

எனினும் நான்
புழுதி அப்பிப் புரண்டளைந்த தாய் மண்ணில்
அந்நிய
காக்கிச் சட்டைச் சிங்கள நாய்களிடம்
தோற்றுத் தான் போனேன் காண் இன்று.

— என்.ஆத்மா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



# லஜ்ஜா தடையை நீக்குக! கருத்து சுதந்திரத்தை உறுதி செய்க!

**— திக்குவல்லை எழுத்தாளர் சங்கம் —**

வங்காள தேசப் பெண் எழுத்தாளர் தஸ்லிமா நஸ்ரீன் எழுதிய 'லஜ்ஜா' என்ற நாவலை இலங்கை அரசாங்கம் தடைசெய்துள்ளமை வாசகர் மத்தியில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது தஸ்லிமாவுக்கு எதிரான நடவடிக்கை என்பதை விட இலங்கை வாசகரின் வாசித்தறியும் உரிமையைப் பறிப்பதாகும். சார்க் நாடுகளுக்கிடையிலான கலை இலக்கியப் பரிவர்த்தனையைச் சீர்குலைப்பதும், ஜனநாயகக் கருத்துணர்வை அவமதிப்பதுமாகும்.

சகோதர சார்க் நாடான வங்காள தேசத்தில் பெண்ணடிமைத்தனத்துக்கும் சனாதனவாதத்துத்துக்கும் (Fanaticism) எதிராகப் போராடிவரும் தஸ்லிமா நஸ்ரீனின் கருத்துக்கள் அனைத்தையும் நாம் ஆதரிக்கவில்லையென்றாலும், அவரது கருத்துச் சுதந்திரத்தை மதத்தின் பேரால் பறிப்பது இன்றைய யுகத்தில் அநாகரிகச் செயல் என்பது எமது உறுதியான கருத்து.

75வீதத்துக்கு மேல் எழுத்தறிவற்றோர் வாழும் பங்களாதேஷில் பெண் கல்விக்கு முல்லாக்கள் முட்டுக்கட்டை போட்டு வருவதும் ஷரிஅத் சட்டம் என்ற பெயரில் பெண்கள் கொடுமைப்படுத்தப்படுவதும் யாவருமறிந்ததே. இந்நிலையில் தஸ்லிமா போன்ற விடுதலைவாதிகள் உருவாவது தவிர்க்க முடியாதது. இஸ்லாம் என்ற பெயரில் முல்லாக்கள் உருவாக்கிக் கொண்ட சட்டங்களை விமர்சித்ததற்காக மதபீடங்கள் கொலைத்தண்டனை விதித்திருப்பது புனித இஸ்லாத்தையே அவமதிப்பதாகும்.

இஸ்லாமிய வரலாற்றை நோக்கும் போது வைதீக வியாக்கியானங்கள் அவ்வப் போது விமர்சனத்துக்குள்ளாகியுள்ளன. இதனால் சமய அணுகுமுறையும் விளக்க உரைகளும் காலத்துக்குக் காலம் மாறி வந்துள்ளன. புதுமைச் சிந்தனையாளர்களுக்கும் முல்லாக்களுக்கும் இடையே தொடர்ந்து இடம்பெற்ற -பெறுகின்ற -கருத்து மோதல்கள் இஸ்லாத்தினது வளர்ச்சிக்கு அடிகோலியது. இது எல்லாத் தத்துவங்களுக்கும் பொருந்துகின்ற யதார்த்தமாகும். குர்ஆனின் அடிப்படையில் இஸ்லாமிய வியாக்கியானங்கள் விரிந்தும் நெகிழ்ந்தும் மாறி வருவதற்கு 'சர்ச்சைக்குரியவர்கள்' நிறைய பங்களிப்பு செய்துள்ளார்கள். பெரும்பாலும் ஆண்களாலேயே இது நடந்துள்ளது.

தஸ்லிமா முன்வைக்கும் பலகருத்துக்கள் ஏற்கனவே எகிப்து, ஈராக், லெபனான் போன்ற நாடுகளில் முஸ்லிம் பெண்களால் முன்வைக்கப்பட்டவை. பெண் அவுலியா (ஆத்மஞானி) என்று போற்றப்படும் ராபிஆ பஸர் பாடிய விரசமான கவிதைகள் ஒருபோது அரபுலகில் பிரச்சினைகளைக் கிளப்பியதை நாம் மறந்து விட முடியாது. எது எப்படி இருந்தபோதும் பக்குவப்பட்ட இஸ்லாமிய சமூகங்களில் கருத்துச் சுதந்திரம் பேணப்பட்டு வந்துள்ளது. பங்களாதேசத்தைப் பொறுத்தவரை மதவெறியும் பழமைவாதமும் கொண்ட முல்லாக்களின் கை ஓங்கியிருப்பதால் தஸ்லிமாவின் தீவிர கருத்துக்கள் பாரிய கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளன.

இன்று தஸ்லிமாவின் விடுதலைக் கருத்துக்களைப் பயன்படுத்த சுயலாபம் பெற பல சக்திகள் முனைந்துள்ளன. இஸ்லாத்தின் மீது மாசு கற்பிக்க சந்தர்ப்பம் பார்த்திருக்கும் சில மேலைப் பொது ஊடகங்கள் (Media) ''இஸ்லாம் காலத்துக் கொவ்வாத மார்க்கம்'' என்று பிரசாரம் செய்ய இப்பிரச்சினையை பயன்படுத்துகின்றன.

இந்தியப் பத்திரிகைகள் சிலவும் குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்ற களம் குதித்துள்ளன. ''பங்களாதேசத்தில் உள்ள ஷரீஅத் (சட்டம்) மாற்றப்படவேண்டும்'' என்று தஸ்லிமா கூறியதை திரித்து ''குர்ஆன் மாற்றப்பட வேண்டும்'' என்று பிரசுரித்து குட்டை குழப்பி விட்டமை இதற்கோர் எடுத்துக் காட்டாகும்.


இலங்கையில் 'லஜ்ஜா' நாவல் தடைசெய்யப்பட்டதிலும் குறுகிய அரசியல் உள்நோக்கம் இருப்பதாக ஏ.எம்.மாக்கான் மார்க்கார் (ஞாயிறு டைம்ஸ்) கருத்துத் தெரிவித்துள்ளார். 'லஜ்ஜா' நாவலை பங்களாதேஷ அரசு தடை செய்தமை, அந்நாட்டைப் பொறுத்தவரை அரசியல் ரீதியில் (சமயரீதியில் அல்ல) சரியானதாய் இருக்கலாம். இலங்கையில் அந்நாவல் தடைசெய்யப்படுவதில் எந்த அர்த்தமும் கிடையாது. மாறாக இது எமது ஜனநாயக உரிமையில் தலையிடுவதாகும்.

1992இல் இந்தியாவில் மதவெறியர்கள் பாபர் மஸ்ஜிதை நிர்மூலமாக்கிய போது உறிந்துக்களுக்கெதிராக வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டனர். பல கோயில்கள் உடைக்கப்பட்டன. கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற கொடுமைகள் நடந்தன. சிறுபான்மையினருக்கு இழைக்கப்பட்ட அநியாயங்களைக் கண்டித்து ஒருவர் நர்வல் எழுதினால் அது எப்படி இஸ்லாத்திற்கு எதிரானதாக முடியும்? ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக - இன மத பேதம் பார்க்காமல் குரல் எழுப்புவது குர்ஆன், உறதீஸின் கண்ணோட்டத்தில் வரவேற்கத்தக்க கைங்கரியம் என்பதை முல்லாக்கள் கவனியாமல் விட்டது துரதிர்ஷ்டமே.

சிறுபான்மையினருக்காக மனிதாபிமான ரீதியில் குரல் கொடுத்த தஸ்லிமாவை மதவிரோதியாக முஸ்லீம் அரசியல் வாதிகள் கணிப்பாராயின் அது இலங்கையில் இடம் பெற்ற சிறுபான்மையின சங்காரத்தை நியாயப்படுத்துவதாகவே முடியும்.

இலங்கைக்கு வெளியே அல்லது உள்ளே வெளியிடப்படும் எந்த வெளியீட்டையும் படிக்கின்ற உரிமையை அரசியல்வாதிகள் பறிப்பதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இஸ்லாமிய ஷரிஅத் என்ற பெயரில் பெண்கள் அடிமைப்படுத்தப்படுவதை நாம் ஆதரிக்க முடியாது. அத்தகைய அடிமைத்தனத்துக்கெதிராகப் போராட தஸ்லிமா நஸ்ரீனுக்கு உள்ள கருத்துச் சுதந்திரத்தை இஸ்லாத்தின் பெயரில் தடை செய்வதையும் நாம் கண்டிக்கின்றோம்.




# ''புலிகளின் பத்திரிகை அல்ல'' – இராசநாயகம்

**(இக்கட்டுரை தேர்தலுக்கு முன் எழுதப்பட்ட கட்டுரையாகும். இங்கு குறிப்பிடப்படும் அரசு ஐ.தே.க. அரசே.)**

அரசின் முற்றான கட்டுப்பாட்டில் இருக்கும் ஏரிக்கரைப் பத்திரிகைகளான தினகரன், சிலுமின, The Sunday Observer ஆகிய பத்திரிகைகள் தமது ஜூலை 31ம் திகதி இதழ்களில் மறுபடியும் பொய், திரித்தல் போன்ற தமது வாலாயமான கைங்கரியங்களில் உச்சத்தைத் தொட்டிருக்கின்றன.

ஏப்பிரல் மாதம் முற்பகுதியில் முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் விடுதலைப் புலிகளின் தலைவருக்கு எழுதிய பகிரங்கக் கடிதம் ஒன்று பற்றியதே விவகாரம்.

அஷ்ரஃப் அவர்களின் கடிதம் மே 1, 1994 Sunday Times இதழில் முற்றாகப் பிரசுரமாகி இருந்தது. ஏப்பிரல் 22, வீரகேசரி இதழ் இக்கடிதத்தின் பகுதிகளைப் பிரசுரம் செய்திருந்தது. லண்டனிலிருந்து வெளிவரும் Tamil Times இதழும் அஷ்ரஃப் அவர்களின் கடிதத்தின் சில பகுதிகளைப் பிரசுரித்திருந்தது.

அஷ்ரஃப் சந்திரிகா தேர்தல் உடன்படிக்கை ஏற்பட்ட பிற்பாடு, இந்த ஏரிக்கரைப் பத்திரிகைகள் அஷ்ரஃப் அவர்களும் பிரபாகரன் அவர்களும் ஒன்றிணைந்து பேரினவாதச் சக்திகளுக்கெதிராகப் போராட வேண்டும் என்று அஷ்ரஃப் இரகசிய உடன்படிக்கை ஒன்றைச் செய்திருப்பதாக இப்போது புரளி கிளப்பி விட்டுள்ளன.

அஷ்ரஃப் அவர்கள் எழுதிய கடிதத்தின் அடிநாதமாக இருந்தது சிறுபான்மை இனங்களின் புரிந்துணர்வுடன் கூடிய ஒற்றுமையே பேரினவாதத்தை முறியடிக்கும் வழிமுறை என்பதாகும். இது மிகச் சரியானதும் கூட.

எனினும் தேர்தல் காலத்தில் ஐ.தே. கட்சிக்குச் சார்பாக சாத்தியமான எல்லாவற்றையும் பயன்படுத்தும் தேவையின் நிமித்தம் ஏரிக்கரைப் பத்திரிகைகள் அஷ்ரஃப் அவர்களின் கடிதம் ஏற்கனவே ஆங்கிலத்திலும் தமிழிலும் இங்கு பிரசுரமானது என்பதை வேண்டுமென்றே மறைத்து லண்டன் Tamil Times பத்திரிகையை இழுத்து விட்டுள்ளன.

Tamil Times பத்திரிகை புலிகளின் செய்திப் பத்திரிகை என்றும் இந்தப் பத்திரிகைகள் அப்பட்டமான ஒரு பொய்யைக் கட்டவிழ்த்து விட்டுள்ளன. இதற்கு முன்பும் ஐ.தே.க அரசை விமர்சித்து எழுதும் தமிழ்ப் பத்திரிகைகளையும் புலிகளின் குரல் என்று முத்திரை குத்தி விடுவது நடந்திருக்கிறது. சரிநிகர் பற்றியும் இதே மாதிரியான பொய்ப்பிரசாரம் முன்பொருமுறை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அஷ்ரஃப் அவர்களுடைய பதிலறிக்கையிலும் Tamil Times ஒரு புலிகளின் பத்திரிகை என்று தெரிவிக்கப்பட்டிருப்பது அஷ்ரஃப் அவர்களின் அறியாமையா அல்லது ''குற்றத்தை'' Tamil Times இல் போட்டு விட்டுத் தப்ப நினைக்கும் மனோபாவமா என்பது தெரியவில்லை.

புதிதாக வெளிவர ஆரம்பித்திருக்கும் The Sunday Leader பத்திரிகையும் இதே மாதிரியான நடவடிக்கையிலேயே இறங்கியுள்ளது. Tamil Times பத்திரிகையை ஆதாரம் காட்டியே The Sunday Leader உம் அஷ்ரஃப் பிரபாகரன் கூட்டு என்று கிளப்பி விட்டுள்ளது. ஆரம்ப இதழ்களில் நடுநிலைமை, பத்திரிகா தர்மம் என்று பாசாங்கு செய்த The Sunday Leader மற்றுமொரு ஐ.தே.க அரசு சார்புப் பத்திரிகை என்பது வெளித் தெரிய வந்துள்ளது.

லண்டனிலிருந்து இதுபற்றிச் சரிநிகருக்கு Tamil Times ஆசிரியர் ராஜநாயகம் அவர்கள் தெரிவித்த விவரங்களைத் தருகிறோம்:

Tamil Times பத்திரிகை புலிகளின் பத்திரிகை என்று சொல்வது திட்டமிட்டுப் பொய்யான முறையில் தங்களுடைய லாபங்களுக்காகப் பிரச்சாரம் செய்கிற கயமைத்தனமே தவிர வேறொன்றுமில்லை.

எந்தத் தமிழியக்கமும் பகிரங்கமாக அரசியலரங்குக்கு வருவதற்கு முன்பாக 1981இல், ஜனநாயக மனித உரிமைகளைப் பேணுவதற்காகவும் பத்திரிகைச் சுதந்திரத்திற்காகக் குரல் கொடுக்கவும் ஆரம்பிக்கப்பட்டது Tamil Times.

புலிகளைப் பற்றிய விமர்சனங்கள் Tamil Timesஇல் வருகிற போதெல்லாம் வசதியாக அவற்றை எடுத்துப் பிரசுரித்து வந்த கொழும்புப் பத்திரிகைகள் இப்போது தேர்தல் கால அரசியலுக்காகவும் தாம் சார்ந்த கட்சி நலன்களுக்காகவும் Tamil Times பத்திரிகையைப் பாவிக்க நினைப்பது அருவருக்கத்தக்க ஒரு செயலாகும்.

Tamil Times வெளியிட்ட அஷ்ரஃப் அவர்களின் கடிதத்தின் பகுதிகள் வீரகேசரி 22 ஏப்ரல் 94 இல் வெளியான பகுதிகளின் மொழி பெயர்ப்பே ஆகும். இந்த மொழி பெயர்ப்பும் கொழும்பிலிருந்து எங்களுக்கு அனுப்பப்பட்டதாகும்.

அஷ்ரஃப் அவர்கள் இப்போது சொல்வது போல அந்தக் கடிதப் பகுதிகளில் ஏதாவது மாறுபாடு அல்லது திரிபு ஏற்பட்டிருக்குமானால் அது திட்டமிட்டுச் செய்யப்பட்ட ஒன்றல்ல என்று அவருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

சம்பந்தப்பட்ட பத்திரிகைகள் Tamil Times விஷயத்தில் இழைத்துள்ள தவறுக்குப் பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டும். இல்லையெனில் அவற்றுக்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளோம். ○

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ''எப்போது அமைதி வரும்? மீண்டும் எப்போது நாம் எம் மண்ணைத் தரிசிப்போம்''

நிலக்ஷன் சுவர்ணராஜா

''ஸ்கூலாலை வரயிக்கை போஸ்ட் ஓஃபிசிலை பேபி அன்ரியிட்ட ஒரு ரூபா முத்திரை ரண்டு வாங்கிக் கொண்டு வா தம்பி''! அம்மா சொல்லுவா, நானும் வெளிக்கிட்டுக் கொண்டு பள்ளிக் கூடத்திற்கு நடக்கத் தொடங்குவேன். போற வழியில் செல்வன், தர்ஷன், றூபன் என்று வீட்டு வாசலில் காவல் நிற்கும் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து நடப்போம். எங்கள் ஸ்கூல் பத்தாம் வகுப்பு வரை இருக்கிற ஸ்கூல் தான் என்றாலும் எத்தனையோ அறிஞர்களும் பெரியவர்களும் ''ஆனா'' எழுதிப் பழகியது இங்குதான். இண்டைக்கு அது இருக்குதோ? இல்லையோ எங்கடை ஊருக்கையே இப்ப கால் வைக்க முடியாது.

ஆம்! இன்று ஒரு மனிதர் கூட (இராணுவத்தினர் நீங்கலாக) இல்லாத கிராமமாக, வெறிச்சோடிக் கிடக்கும் எனது சொந்த ஊரை நினைக்கிறேன். கண்கள் பனிக்கின்றன. வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு மாதிரிக் கிராமமாக அறிமுகப்படுத்தப்பட்டதும் இந்திய - இலங்கை இராணுவத்தினரால் ''குட்டிச் சிங்கப்பூர்'' என வர்ணிக்கப்பட்டதுமான குரும்பசிட்டிக் கிராமத்தைத் தான் சொல்கிறேன்.

இரசிகமணி கனக.செந்தில்நாதன், பொன்.பரமானந்தர், பத்திரிகைத் துறையின் ஓர் முன்னோடி ஈழகேசரி நா.பொன்னையா, அச்சகத் தொழிலறிஞர் மு.சபாரத்தினம், கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை, வர்த்தகப் பெருந்தகை கெக்கிராவ பூ.சுப்பிரமணியம், பூ.சு.நடராசா போன்றவர்களை ஈன்றமண் குரும்பசிட்டி.

இரசிகமணி ஐயா ஒரு முறை எழுதியிருந்ததை வாசித்தேன். அவர் சொல்வார்: ''பூகோள ரீதியில் குரும்பசிட்டி ஒரு சபிக்கப்பட்ட கிராமம்''. வலிகாமம் வடக்குப் பகுதியில் சைவமும் தமிழும் ஒருங்கே தழைத்து வளர்ந்த குரும்பசிட்டி கொடையிலும் பின்நின்றதில்லை. எனினும் எமது ஊரின் வடக்கெல்லையாக இருக்கும் பலாலி விமானத் தளத்தாலும், இராணுவ முகாமாலும் அது நிரந்தரத் தொல்லைகளுக்கு ஆளாகியது.

1984ம் ஆண்டு முதல் தேசிய விடுதலைப் போராட்டம் வீறடையத் தொடங்கியது. பலாலி இராணுவத்தினர் அடிக்கடி தேடுதல் என்றும் ரோந்து என்றும் வந்து போனார்கள். இதனால் போராளிகள் கவனமும் எமது கிராமத்தின் மீது குவிந்தது.

எனக்கு நல்ல ஞாபகம் இருக்கிறது; அது 1985. எனக்கு 9 வயது. மத்தியானம் சாப்பிட்டு முடிய அம்மா 2 ரூபா தந்து ஸ்ரார் ரொஃபி வாங்கி வரும்படி பாலன்ரை கடைக்கு அனுப்பியிருந்தா. நான் போய் ரொஃபி வாங்கிக் கொண்டு காசைக் கொடுத்தேன்.

''டோம்'' என்று ஒரு பெரிய சத்தம், காது செவிடுபடும் வண்ணம் ஒலித்தது. பனையேறும் அருள் 'பெடியள் பிளேனுக்கு அடிக்கிறாங்கள்' எண்டு கத்திக்கொண்டு ஓடியதைக் கண்டேன். சிறுவனாக இருந்ததால் இயல்பாகவே ஏற்படும் பயம் ஒருபுறம்; என்ன நடந்தது என அறியும் ஆவலும் மறு புறம் இழுக்க இறுதியில் வென்றது எனது பயம்தான். நான் பற்றைகளுக்கால் புகுந்து மா இடிக்கும் மிதினேஸ் வீட்டடியால் ஓடி ராசரத்தினத்தின் வளவுக்குள்ளால் வீடு போய்ச் சேர்ந்தேன்.

அன்று முழுவதும் இராணுவத்தினர் ஒரே ஆர்ப்பாட்டம். இராணுவத்தினர் வீதியில் கண்டவர்களையெல்லாம் பிடித்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அன்று தான் முதல் முதலாக இராணுவத்திற்கெதிரான தாக்குதல் எமது ஊரிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. சித்தப்பா அவருடைய 'கியர்' பூட்டிய சைக்கிளில் பறந்து வந்தார். ''தம்பி! பிளேன் தப்பிவிட்டுது. கொஞ்சம் பிந்தி அடிச்சிட்டாங்களாம்.'' அம்மா முணுமுணுத்தது கேட்டது; ''நல்லகாலம்! இல்லாட்டி இண்டைக்கு நாங்களெல்லாம் துலைஞ்சிருப்பம்.''

அன்று தொடக்கம் இராணுவத்தினர் அடிக்கடி குரும்பசிட்டிக்கு ரோந்து வரத் தொடங்கினர். எனினும் 85ன் இறுதிப் பகுதியுடன் அவர்கள் முகாமிற்குள் முடக்கப்பட்டபின் பெடியளின் சென்றியும் எமது ஊரில் பலப்படுத்தப்பட்டது. முடக்கப்பட்ட இராணுவம் வழமை போல் போராளிகளை விரட்டுவதாகக் கூறிக்கொண்டு ஹெலியிலிருந்து சரமாரியாக வேட்டுக்களைத் தீர்க்கத் தொடங்கியது.

ஆனால் விரட்டப்பட்டது போராளிகளல்ல, பெருமளவு பொதுமக்களே. போராளிகள் எமது ஊரில் குவிந்தவண்ணமிருந்தனர். 86 நடுப்பகுதியில், கடைக்காரக் கந்தையரும் மகளும் ஹெலிச்சூட்டுக்கு பலியாகியதோடு, ஊரில் கிலி குடிகொண்டது. பெருமளவு மக்கள் இரவைத் தூர இருந்த உறவினர்கள் வீட்டிலும், பகலில் தமது வீடுகளுக்கு வந்து சமைத்துச் சாப்பிடுவதுமாக நிம்மதியற்ற வாழ்வைத் தொடங்கினார்கள்.


86 இறுதிப் பகுதியில் நாமும் எண்பது வீதமான மக்களுடன் எமது கிராமத்தைவிட்டு முற்றாக வெளியேறி வெவ்வேறு இடங்களில் வசிக்கத் தொடங்கினோம். 87 பங்குனி 26ம் திகதி எமது கிராமம் பூரணமாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. அன்றிலிருந்து எஞ்சிய அனைத்து மக்களும் வெவ்வேறிடங்களில் தஞ்சம் புகுந்து அல்லல் மிகு வாழ்வு வாழ்ந்தனர். ஒவ்வோர் காசாக உழைத்து மிச்சம் பிடித்துக் கட்டிய வீடு, வாசல், பொருட்களை விட்டு வெளியேறும் போது அந்த நெஞ்சங்கள் பட்டபாட்டைச் சொல்லிலே வடித்தல் கடினம்.



87ம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டதுடன் குரும்பசிட்டிக்கு எம்மவர் செல்லும் சாத்தியம் உருவானது. அங்கே எமது சொத்துக்களைப் பார்வையிடச் சென்ற எமக்குப் பேரிடி! ஆம்! அங்கே ஒரு சில வீடுகள் தவிர ஏனையவை யாவும் தரைமட்டமாக்கப் பட்டிருந்தன. தோட்டங்கள் காய்ந்து தரிசாகக் காணப்பட்டன. அனைத்திற்கும் மேலாக எம்மூரவர் இதயத்தைப் பிளந்த காட்சி ஒன்று இருந்தது. அதுதான் கிராமத்திற்கே இதயமாய் விளங்கிய அன்னை அருள்மிகு முத்துமாரியம்பாள் குடிகொண்ட திருக்கோவில் இருந்த இடம் தெரியாமற் கற்குவியலாகக் கிடந்ததும், நாற்புறமும் சிதறிக் கிடந்த அம்பாளின் அழகிய சித்திரத் தேரின் சிதறல்களும்தான்.

இவ்வளவு அழிவுகளையுந் தாங்கிக் கொண்ட குரும்பசிட்டி மக்கள், தாம் பெற்ற சிறுதொகை நிவாரணப் பணத்துடனும் உழைத்துச் சேர்த்த சிறு பணத்துடனும் தமது வீடுகளைச் சிறுகச் சிறுக கட்டத் தொடங்கினர். இவ்வாறு எமது கிராமம் மீண்டும் ஒரு நிலைக்கு வரத் தொடங்கிய நிலையில் 1990 ஜூன் மாதம் எவ்வித முன்னறிவித்தலுமின்றித் திடீரெனப் போர் மீளத் தொடங்கியது. இதனால் எந்தப் பொருட்களையும் எடுக்காது வெறுங்கையுடன் வெளியேறிய எம்மக்கள் மீண்டும் அகதிகளாகவும், உறவினர் வீடுகளிற் தஞ்சமடைந்தும் உள்ளார்கள்.

87 இல் எம்மவர் அகதிகளாயிருந்த போது, வடமராட்சி ஒப்பரேசன் லிபரேசனிற் பாதிக்கப்பட்ட மக்களுக்காகத் தமக்குக் கிடைத்த அகதி நிவாரணமான 30,000 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் முழுவதையும் அனுப்பி வைத்தனர். முல்லைத்தீவு நெடுங்கேணிப் பகுதியில் ஆடையின்றி வாடையில் மெலிந்த மக்கள் நிலையறிந்து ஈராயிரம் உடைகளை உடனடியாக அங்கு அனுப்பிவைத்த மனிதாபிமானம் மிக்க மக்கள் குரும்பசிட்டி மக்கள்!




சன்மார்க்க சபை, உதயதாரகை மன்றம் போன்ற மன்றங்களினூடாக அளப்பரிய சமூக சேவைகள் செய்த எம்மவரைக் கவனிக்க இன்று யாருளர்? எமது மக்களின் துயர்துடைக்கக் கூடியவர் யார்?

எப்போது அமைதிவரும்? மீண்டும் எப்போது நாம் எம்மண்ணைத் தரிசிப்போம்? எங்கள் சொந்தக் கிணற்றிலிருந்து ஒரு மிடறு நீர் எடுத்துக் குடிப்போம்? மணிகடைச் சந்திப் படியிலிருந்து எல்லோருமாக எப்போது இனிக் கூடிக் கதைப்போம்? தகர்ந்த அம்பாளின் ஆலயத்தை மீளப் புனரமைப்போமா? காய்ந்து கிடக்கும் நிலங்களைப் பண்படுத்தி மீண்டும் எப்போது தோட்டங்கள் செய்வோம்? அதுவரை போரியன் வைரவரும், அரசடிக் காளியம்மனும் எமது ஊரையும் எஞ்சி நிற்கும் சில சொத்துக்களையும் பாதுகாத்து நிற்பார்களா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யானையாகிப்போன மரம் !

## பத்திரிகையின் பழக்க தோசத்தால் வந்த வினை !

-முல்லா

தேர்தல் கால ஊரடங்குச் சட்டம் தந்த ஓய்வில் நிஜமாகவே பலர் ஹாயாக உட்கார்ந்து புதிய மாற்றங்களை அனுபவித்திருப்பார்கள். நான் செய்தவைகளில் ஒன்று - 16ம் திகதியும் அதற்கு முன்னரும் - அதற்கு பிறகும் வந்த ஏரிக்கரைப் பத்திரிகைகளை ஒப்பிட்டுப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தது. சும்மா சொல்லக்கூடாது. மெய்சிலிர்க்கும் எழுத்துச் சத்தியமும் - சுத்தமும் போங்கள்!

ஒரு சில - முன்னாள் ஆளுங் கட்சிப் பிரமுகர்களின் செய்திகள் தமிழ்ப்பதிப்பின் - ஒரு நாளில் மூன்று இடங்களில் கூட பிரசுரமாகியிருந்தன. இத்தனைக்கும் செய்தி ஒன்றுதான்! தொட்டாலும் செய்தி, விட்டாலும் செய்தி; நியாயமோ வியாக்கியானமும் அவர்களே. தீர்ப்பும் அவர்களே என்று பிய்த்து உதறிவிட்டார்கள். மும்மொழிவாணரான சிறுபான்மையின மொழி பெயர்ப்புக்காரரின் 'ராஜாங்கம்' சற்று அதிகம்.

பிரசாரங்கள் முடிவடைய வேண்டிய இறுதி தினம் என்று நினைக்கிறேன். இப்பத்திரிகையில் விளம்பரம் கொடுத்திருந்த திருகோணமலை மாவட்ட வேட்பாளர் ஜனாப். நஜீப், ஏ.மஜீத் அவர்களுக்கும் அவரது அபிமானிகளுக்கும் அது அதிர்ச்சி. அவரது சின்னம் மரம். பிரசுரமாகியிருந்தது யானை! ''நீண்ட நாளாக யானையைத் தவிர வேறு எதனையும் பற்றி சிந்திக்காத பத்திரிகை இது. பழக்க தோஷத்தில் -எல்லாமே யானையாகத்தான் தோன்றுகிறது அவர்களுக்கு'' என்று சொல்லிச் சிரித்தார் நண்பர் ஒருவர். அடுத்தடுத்த தினங்களில் பெட்டிச் செய்தி கேட்டு வருந்தி, பிராயச்சித்தம் தேடிக் கொண்டது பத்திரிகை.

விடிந்தால் தேர்தல் என்ற நிலையில் தொலைக்காட்சி காமினி ஈரிய கொல்ல என்பாரின் பேட்டியைப் போட்டு 'புண்ணியம்' தேடிக் கொண்டது. இந்தப் பக்கவர்த்தியம் சட்டத்துக்கு முரணானது என்று பின்னால் கொதித்தார்கள். போனது போனதுதான் துவேஷம் கக்கும் அவரது பேட்டியாலும் வெற்றிக்கனி எட்டவில்லை. பிரசார காலங்களின் போது வேட்பாளர்களை- சின்னங்களை தொலைக்காட்சியிலோ வானொலியிலோ ஒளி - ஒலி பரப்பக் கூடாது. சின்னங்களை காட்டவில்லை. அதுபற்றி ஒலிபரப்பப்படவுமில்லை. ஆனாலும் சிலர் தொலைக்காட்சியில் வந்து போனார்கள்; அமைச்சர்கள் என்ற கோதாவில். தொலைக்காட்சி நிலையத்தின் நேர்மையில் உங்களுக்குப் புல்லரிப்பு வந்திருக்கும்.

'தேர்தல் பிரசார காலத்தின் போது அரசாங்கத்துக்கு சொந்தமான வெகுஜனத்தொடர்பு சாதனங்கள் காட்டக்கூடிய பாரபட்சம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். அந்த தொடர்பு சாதனங்களின் ஆசிரிய பீடத்தின் மீது இருக்கும் ஆதிக்க செல்வாக்கை தனிமைப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்'' என்று சர்வதேச அவதானிகள் குழு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவர்களுக்கும் புல்லரித்திருக்க வேண்டும்!

2

தேர்தல் முடிவுகளை அறிவித்தது இரவு வானொலி. முதலில் சொல்லப்பட்டது மொனறாகலை மாவட்ட தபால் வாக்கு முடிவுகள். முதலில் சொல்லப்படும் கட்சி அதிக வாக்குகளைப் பெற்றுவிட்டது என்பது அர்த்தம்- அதுவே வழக்கமும் பொதுஜன ஐக்கிய முன்னணியே அதிக வாக்குகளைப் பெற்றிருந்தது. இருந்தாலும் தமிழில் முடிவுகளை வாசித்த அறிவிப்பாளர் ''ஐக்கிய தேசியக் - என்று சொல்லி நிறுத்தி விட்டு பொதுஜன ஐக்கிய முன்னணி'' என்று வாசித்தார். வாசித்தவர் பிரபல்யம் மிகுந்த சிரேஷ்ட அறிவிப்பாளர்!

அதே அறிவிப்பாளர் திகாமடுல்ல மாவட்ட விருப்பு வாக்குகள் முடிவுகளை அறிவித்த போது ''9 அங்கத்தவர்கள் கொண்ட திகாமடுல்ல மாவட்டம்' என்று விட்டு சிறிது இடைவெளியில் 6 பிரதிநிதிகள் கொண்ட என்று வாசித்தார். இருபத்திரண்டு தேர்தல் மாவட்டங்களில் எத்தனை எத்தனை அங்கத்தவர்கள் தெரிவாவார்கள் என்பது பத்திரிகைகளில் பலமுறை தெரிவிக்கப்பட்டிருந்தது. தவிரவும் இது பாராளுமன்றத்தில் ஏற்கனவே இருந்த நடைமுறை, வாக்குத் தொகைகளிலும் பிதற்றல், ஒரு சிரேஷ்ட அறிவிப்பாளர் மன்னிப்'புக்கூட கேட்டுக் கொள்ளாமல் இந்த சாதாரண விடயம் கூட தெரிந்து வைத்துக் கொள்ளாமல் முடிவு அறிவிக்கச் சென்றது சரியா? இவ்வளவுக்கும் முடிவுகள் தேர்தல் ஆணையாளர் செயலகத்தில் இருந்துதான் அறிவிக்கப்பட்டது.

தொலைக்காட்சியிலும் இவ்வாறே, ஒரு குறிப்பிட்ட அறிவிப்பாளர் பெயர்களை எல்லாம் மாற்றி விட்டார். ஒரு பெண்மணி 91 அங்கத்தவர்கள் என்பதற்குப் பதிலாக 91 மாவட்டங்கள் என்றார்!

3

ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட போதும் ஒன்றும் இரண்டுமாக பாதைகளில் மக்கள் நடமாடிய'தைக் காணமுடிந்தது. வாகனங்கள் தாராளமாக சென்றன!

காலை 5.00 மணிக்கு ஊரடங்கு தளர்த்தப்பட்ட ஒருநாளில் வாகனத்தில் பயணம் செய்து 4.50க்கு துப்பாக்கி நிமிர்த்திய கடற்படையினர் நின்ற தடுப்பருகே வேகத்தைக் குறைத்த போது - 'போகலாம்' என்றார்கள். அதிசயம் நிகழ்ந்தது போல ஓர் உணர்வு எனக்குள். கிழக்கில் பயணிக்கையில் இறங்கி ஏறும் சோதனை அனுபவித்த எனக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. சந்தேகத்துக்கும் அப்பாற்பட்ட - ஊட்டப்பட்டிருக்கும் ஒரு விடயத்தில் வெறுப்புப் பார்வை பார்ப்போருக்கும்

இவர்களுக்குமிடையில் நிறைய வித்தியாசம் உணர்ந்தேன். அது வேறு நிலை இது வேறு நிலை என்றிருந்த போதும் இறுக்கமான வேதனையான சூழ்நிலைகளை அனுபவித்து பழகிப் போன மனநிலைக்கு இந்த அனுமதி இதமாக இருந்தது.

4

கடந்த 15ம் திகதி இரவு ஒரு வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் ஒருவரை கண்டேன். குழப்பத்தில் இருந்தார். எப்படி நிலவரம் என்று கேட்டேன். ''இதென்ன கேள்வி. ஆள்பவர்கள்தான் மீண்டும்'' என்றார். ''எதிரணியினர் வந்தால் House Maids ஏற்ற முடியாமல் போகும் என்று அங்கலாய்த்தார்.

எதிரணி வரவேண்டும் என்று எடுத்த எடுப்பிலேயே சொன்னார்; இந்தியா சென்று புடவை, மற்றும் பொருட்கள் கொண்டு வந்து விற்பனை செய்யும் ஒருவர். (ஒருவகைப் புடவையை குறிப்பிட்டு) '' பேமன்டில் போட்டு விற்கிறார்கள். இதனால் Demand இல்லாமல் போய்விட்டது. நாங்கள் கஷ்டப்பட்டு கொண்டு வந்தால் துட்டுக்கு கேட்கிறார்கள். எதிரணி வந்தால் இதெல்லாம் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வரும்'' என்று உறுதியாக சொன்னார்.

''யாழ்ப்பாணத்தாக்கள் வேறு யாரும் இல்ல எண்டபடியால தராசுக்குத்தான் (கொழும்பில்) நாங்கள் போட்டுவம்'' என்றார் ஒரு வடக்கு சார்ந்த ஒருவர்.

எனக்கு நெருக்கமான பம்பலப்பிட்டியில் வசிக்கும் யாழ்ப்பாண நண்பர் ஒருவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிலவரம் கேட்டேன். எதிரணி வரவேண்டும் என்று விரும்புவதாக சொன்னார். ஏன் என்று கேட்ட போது 'நம்ம சிக்கல் தீர வாய்ப்பிருக்கு' என்றார். எப்படிச் சொல்கிறீர்கள் என்று கேட்டேன்.

பாருங்கோ - இந்தச் சதுரங்கத்திலான இவங்கட 5 வருடத்துக்குள்ள ஒரு காயை முன்னுக்கு நகர்த்தினாலும் நமக்கு லாபம் தான்'' என்றார். வாஸ்தவம்!


விரக்தி கலந்த எதிர்பார்ப்பு! அவரவர்க்கு அவரவர் பிரச்சினை!

---

# எந்த உடன்பாடும் மக்களுக்கு தெரியாமல் செய்யப்படக் கூடாது

கொழும்புப் பல்கலைக்கழகத்து அரசறிவியல் துறையில் பணிபுரிபவரும், இலங்கை சமூக விஞ்ஞானிகள் சங்கம் (Social Scientists Association - SSA) என வழங்கப்படும் புகழ் பெற்ற சமூக விஞ்ஞான நிலையத்தின் செயலாளருமான கலாநிதி ஜயதேவ உயங்கொட அவர்கள் ஆட்சி மாற்றம், தேர்தலுக்குப் பிந்திய இலங்கை நிலைமை, இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த எதிர்பார்ப்புகள் எனப் பல அம்சங்கள் குறித்து சரிநிகர்/யுக்திய பத்திரிகை ஆசிரியர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நிகழ்த்தினார்.

கலாநிதி உயங்கொட அவர்களின் கருத்துக்களைத் தொகுத்துத் தருகின்றோம். கலாநிதி உயங்கொட அவர்களும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அவர்களும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கருத்தியலையும் வழிமுறைகளையும் கணிசமான அளவுக்கு மாற்றியமைத்துள்ளனர் என்று சொல்லப்பட்டு வந்த போதிலும் கலாநிதி உயங்கொட அவர்கள் பகிரங்கமாக பொதுஜன ஐக்கிய முன்னணி மேடை அரசியலில் ஈடுபடவில்லை.



கலாநிதி உயங்கொட

''எங்களுடைய சிந்தனை, சமாதான நோக்கு, புதிய அரசியல் போன்ற விசயங்கள் குறித்து பொதுஜன ஐக்கிய முன்னணியுள் மிகுந்த ஏற்குந் தகவு இருப்பதால் எங்களுடைய அறிவுப் பயன்பாட்டுக்கும், அறிவுப் பண்பாட்டுக்கும் ஒரு புதிய இடம் கிடைத்துள்ளதாக நம்புகின்றோம்'' என்று குறிப்பிடுகிறார் கலாநிதி உயங்கொட அவர்கள்.

### ஆட்சி மாற்றம் குறித்து

நிச்சயமாக இந்தப் பதினேழு வருடப் பயங்கரவாதம் முடிவுக்கு வந்திருப்பது ஆசுவாசமளிக்கிறது. இலங்கையின் அரசியல் கலாசாரத்தை பயங்கரவாதம் மேலோங்கிய கலாசாரமாக மாற்றியமைக்கான மிக முக்கிய பங்கு ஐ.தே.கட்சிக்கே உரியது. அடிப்படை உரிமைகள், சமத்துவ சமூக வாழ்வு போன்ற மனிதத்தின் அடிநிலைகளையே ஐ.தே.க ஆட்சி சிதைத்தொழித்து விட்டது. ஊழல், மோசடி என்பன அரசியல் கலாசாரத்தின் ''ஏற்றுக்கொள்ளத் தக்க'' ஒரு அம்சமாக மாறிவிட்ட ஒரு நிலையை ஐ.தே.க ஏற்படுத்திள்ளது. எனவே புதிய ஆட்சி முற்று முழுதான ஒரு புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்க வேண்டிய அவசரத் தேவை இருக்கிறது.

### ''புதிய அரசியல் கலாசாரம் ''குறித்து

புதிய அரசியல் கலாசாரம் என்று நான் பேசுகிறபோது இப்போதுள்ள பாராளுமன்ற ஜனநாயக ரசியல் கலாசாரத்தின் சீரழிவுகளையும், மக்களுக்கும் - அதிகாரத்துக்கும் இடையே இருக்கும் மிகப்பெரிய இடைவெளியை நீக்குவதையும் கருதுகிறேன். பொதுசன தொடர்பு சாதனங்களின் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான சுதந்திரம் அனைத்தும் கேள்விக்குள்ளாக்கப்படாமல் நிலவுகிற நிலை தேவை. அதுபோலவே ஊழல், லஞ்சம், மோசடி என்பன அரசியலுடன் நீக்கமுறக் கலந்திருப்பதால் இதனை மாற்ற ஒரு அடிப்படையான நேர்மையான மனோதிடம் அரசுக்கு வேண்டும். பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அவர்களின் ஆரம்பம் இந்த மனோதிடம் அரசுக்கு இருக்கும் என்ற நம்பிக்கையைத் தருகிறது.

இதுவரையான ஐ.தே.க அரசியல் கலாசாரத்தில் இரண்டு போக்குகள் தூக்கலாக இருந்தன. ஒன்று, எதிரிகளையும் மாற்று அமைப்பினரையும் கொல்வது அல்லது வன்முறையால் ஓரங்கட்டுவது. இரண்டாவது பணம் கொடுத்து விலைக்கு வாங்கி விடுவது. இந்த இரண்டு போக்குமே இப்போது முடிவுக்கு வருகிறது.

மக்கள் சமூகம் (Civil - Society) அரசைக் கேள்விக்குள்ளாக்கக் கூடிய, அரசு மக்கள் சமூகத்துக்குப் பதில் தரவேண்டிய ஒரு நிலை தேவை. அது இதுவரை காலமும் இருக்கவில்லை. இந்த நிலையை ஏற்படுத்துவதற்கான சாத்தியங்களும் நம்பிக்கையும் இப்போது ஏற்பட்டுள்ளன என நான் கூறுவேன்.

### இனப்பிரச்சினைத் தீர்வு

தமிழ், முஸ்லீம் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய முடியாத எந்தத் தீர்வும் உதவாது. இம்மக்க

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறு சிறு புத்தகங்கள் நிகழ்வுகள் குறிப்புகள்

கனவும் மனிதன்
(சிறுகதைகளின் தொகுப்பு)
எம்.ஐ.எம்.றஊப்
முனைப்பு வெளியீடு
விலை:75/=


இத்தொகுப்பு பற்றி கலாநிதி நுஃமான் அவர்கள் எழுதிய முன்னுரையிலிருந்து பகுதிகளை இங்கே தருகிறேன்.

"**ம**ருதூர்க் கொத்தன் முக்கியமான ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்களுள் ஒருவர். 1960, 1970களின் ஈழத்துச் சிறுகதை உலகில் அவரது பெயரும் பிரபலமாக இருந்தது. றஊப் கொத்தனின் மூத்த மகன். சமகால ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்களுள் கவனத்துக்குரிய ஒருவர். இவர் தனது முதல் கதையை - மஞ்சள் சோறு - 1980 ஜனவரி முதல்திகதி எழுதியிருக்கிறார். அவ்வகையில் சிறுகதைத் துறையில் இவர் பிரவேசித்து சரியாக ஒரு தசாப்தம் முடிந்து விட்டது. இந்தப் பத்துவருடகால அறுவடை இந்தத் தொகுதியில் உள்ள கதைகள். றஊபின் கதைகள் கொத்தனின் கதைகளின் சாயல் எதையும் கொண்டிருக்கவில்லை. முற்றிலும் வேறுபட்டவை என்பது நம் கவனத்துக்குரியது. இந்த வேறுபாடு ஒரு தனிப்பட்ட தந்தைக்கும் மகனுக்கும் இடையே உள்ள தலைமுறை வேறுபாடு மட்டுமல்ல, தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் காணப்படும் இருவேறு தலைமுறைகளுக்கு இடையே உள்ள வேறுபாடுமாகும்.

தமிழ்ச் சிறுகதை முன்னோடிகளும் அவர்களின் வழித் தோன்றல்களும் கதை அம்சத்துக்கு முதன்மை கொடுத்தே சிறுகதை எழுதினார்கள். அதற்கேற்ற வகையான கட்டமைப்புள்ள ஒரு வடிவத்தையும் அவர்கள் கையாண்டார்கள். சிறுகதை என்றால் இப்படித்தான், சிறுகதை இலக்கணம் இதுதான் என்ற ஒரு மனோபாவத்தை இவர்கள் வளர்த்திருந்தார்கள். இவர்கள் எல்லோரையுமே நாம் பழைய தலைமுறை எழுத்தாளர்கள் எனலாம். மௌனி இதில் ஒரு வித்தியாசம். மற்றவர்களிடமும் ஆங்காங்கே சில விலகல்கள். மற்றும்படி கதை அம்சம் பழைய தலைமுறைச் சிறுகதையின் பிரதான பண்பு எனலாம். புதுமைப்பித்தன் முதல் ஜெயகாந்தன் வரை இந்தப் பண்பை நாம் காணலாம். இவர்களின் கதைகளை மரபுவழிச் சிறுகதை என்று வேண்டுமானாலும் நாம் அழைத்துக் கொள்ளலாம்.

எழுபதுகளில் தோன்றிய புதிய சிறுகதை எழுத்தாளர் பலர் இந்த மரபு வழி முறையில் இருந்து பெரிதும் விலகினார்கள். கதை அம்சத்தை பெரும்பாலும் அல்லது முற்றிலுமாக இவர்கள் கைவிட்டார்கள். அன்றாட வாழ்க்கை அனுபவங்கள், அதன் அடியான மனோநிலைகள், எண்ணங்கள், உணர்வுகள் என்பனவற்றுக்கு வடிவம் கொடுக்க முயன்றார்கள். தொடர்புள்ள அல்லது தொடர்பற்ற நிகழ்வுகளைத் தொகுப்பதன் மூலம் ஒரு குறிப்பிட்ட உணர்வு நிலையை வெளிக்காட்டுவது இவர்களின் பொதுப்பண்பு எனலாம். கதை என்று சொல்லக்கூடியதாக ஒரு சட்டகம் இவர்களிடம் இராது. இவர்கள் மூலம் தமிழ்ச் சிறுகதையின் பொருளும் வடிவமும் பெரிதும் மாற்றம் அடைந்தன. சா.கந்தசாமி, நா.முத்துசாமி, அசோக மித்திரன் முதல் வண்ணதாசன், வண்ணநிலவன், பிரபஞ்சன், பூமணி, கோபி கிருஷ்ணன் போன்றோர்வரை வெவ்வேறு அளவில் இப்பண்பு மாற்றத்துக்கு வழிவகுத்தனர். ஈழத்திலும் இப்பண்பு மாற்றத்தை நாம் காண்கின்றோம். கொத்தனும் அவருக்கு முந்திய, அவர் காலத்து எழுத்தாளர்கள் பலரும் பாரம்பரிய சிறுகதை வடிவத்தையே பயன்படுத்தினர். ஒரு கதை, இவர்கள் படைப்புகளின் மையமாக இருக்கும். எழுபதுக்குப் பிறகு இங்கு தோன்றிய புதிய தலைமுறை எழுத்தாளர் சிலர் **சிறிதரன், யேசுராசா, சண்முகம் சிவலிங்கம், எம்.எல்.எம்.மன்சூர், உமா வரதராஜன், ரஞ்சகுமார்** முதலியோர் பாரம்பரிய மரபில் இருந்து விலகிச் சென்றனர். இலங்கைத் தமிழ்ச் சிறுகதைக்கு ஒரு புதிய முகத்தைப் பெற்றுத் தந்தனர். இவர்கள் வழக்கமான கதை சொல்லும் மரபை முற்றிலுமாக -- அல்லது வெவ்வேறு அளவில் தம் படைப்புகளில் நிராகரித்தவர்கள். இவர்களின் வரிசையில் வந்து நிற்பவர்தான் றஊப். இவர் சிறுகதையில், கதை அம்சத்தை முற்றாக நிராகரித்து விட்டவர் என்பதற்கு இத்தொகுப்பில் உள்ள அத்தனையுமே சாட்சி கூறுகின்றன.

இத்தொகுப்பில் 12 சிறுகதைகள் உள்ளன. எல்லாமே கடந்த பத்து ஆண்டுகளுள் எழுதப்பட்டவை.





இக்கதைகள அனைத்திலும் இடம் பெறும் பிரதான பாத்திரம் பெயர் இல்லாத அவன். ஏனைய பாத்திரங்கள் எல்லாம் அவனைச் சுற்றி அமைபவை. அவன் கனவு காணவும் கண்ட கனவுகள் கலையவும், அவன் இன்புறவும் துன்புறவும் காரணமாக அமைபவை. அவனது வாப்பா, உம்மா, மூத்தம்மா, மாமா, சகோதரர்கள், பெயர் இல்லாத சில 'அவள்'கள், சில நண்பர்கள், மனைவி - இவர்கள் அனைவருமே சிறுசிறு கீறல்களாக - கோட்டுச் சித்திரங்களாக வந்து செல்பவர்கள். முழுமையாக அவன் மட்டும் தான். இதில் உள்ளவை அவனைப் பற்றிய கதைகள்-- இது அவனைப் பற்றிய ஒரு நாவல்.

அவன் யார்? ஓர் இளைஞன். அவன் உணர்வுகளும் நொய்மையான மனமும் கொண்டவன். இலக்கிய பாஷையில் மோப்பக் குழையும் அனிச்சம் போல; நாட்டார் வழக்கில் தொட்டாற் சுருங்கி போல. மத்திய தரக் குடும்பத்தின் பற்றாக்குறை வாழ்வின் நெரிசல்களைச் சுமப்பவன் அவன். இந்த நெரிசல்களுக்கு உட்படாத சிறுபிராய நினைவுகளை மீட்டி அதில் சுகம் காண்பவன். அவனுடைய உலகம் மிகவும் சிறியது. அனுபவங்கள் குறுகியவை. அறிவார்த்தமான விசாரணைகளோ, இலட்சியதாகமோ அவனிடம் இருப்பதாகத் தெரியவில்லை. வாழ்க்கை பற்றிய அவனது தரிசனங்கள் சாதாரணமானவை. மத்தியதரக் குடும்பத்தில் பிறந்து, பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்று, சில ஊமைக் காதல் அனுபவங்களுக்கு உள்ளாகி, உத்தியோகம் பெற்று, 'பலரைத் திருப்திப் படுத்த திருமணம் என்னும் வில்லங்கத்துள் மாட்டி' குழந்தை பெற்று, கடைசியில் உத்தியோகத்தையும் உதறி எறிந்து விட்டு வெளியேறும் வரையுள்ள அவனது இளமை வாழ்வின் சில கட்டங்கள் அவனது பார்வையிலேயே இக்கதைகளில் விபரிக்கப் பட்டுள்ளன. இக்கதைகளில் விபரிக்கப்பட்டுள்ள வகையில் 'அவன்' நமது படித்த சராசரி இளைஞர்களுள் ஒருவன். அவனது ஆசை அபிலாசைகளில் பல நமதாகவும் உள்ளன. அவ்வகையில் அவன் நமது இளைஞர்களில் ஒருவனாக, அவர்களின் பிரதிநிதியாக இருக்கிறான். ஆயினும் அவனது உணர்திறன் நமது சராசரி இளைஞர்களில் இருந்து அவனை வேறுபடுத்திக் காட்டுகிறது. சண்முகம் சிவலிங்கம் வேறு ஒரு இடத்தில் சொல்வது போல அவன் 'தன் இருத்தலுக்குப் பிரக்ஞையாக இருக்கிறான்' இது அவனது தனித்துவம். இந்தப் பிரக்ஞை தான் இந்தக் கதைகளைச் சாத்தியமாக்கி இருக்கின்றது; அதற்கு ஒரு கலைத் தன்மையைக் கொடுத்திருக்கின்றது.

இந்தத் தொகுப்புக்குக் 'கனவும் மனிதன்' என்று றஊப் பெயரிட்டிருக்கிறார். இக்கதைகளின் நாயகனைக் கனவுகாணும் மனிதனாக கதாசிரியர் கருதுகிறார் என்பதை இத்தலைப்பு உணர்த்துகின்றது. நமது பெரும்பாலான வாசர்களுக்கு இவரது கதைகளைப் போலவே இத்தலைப்பின் மொழி அமைப்பும் பிடிபடாததாக -- நெருடலாகத் தோன்றக்கூடும். கனவு என்பது பெயர்ச் சொல். இங்கு அது வினையாகப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றது. கனவினான், கனவுகிறான், கனவுவன் என நாம் வழங்குவதில்லை. அவ்வகையில் 'கனவும் மனிதனும்' என்பதுதான் 'கனவும் மனிதன்' என பிழையாக எழுதப்பட்டிருக்கிறதோ எனச் சிலர் கருதக்கூடும். ஆனால் இது பிழையல்ல; ஒரு புதுமையாக்கம். மழைகிறது என்பது போல. வினவு என்ற வினை அடிஇப்பது போல அதே வடிவில் ஒத்த கனவு என்பதும் வினையடியாகக் கொள்ளப்பட்டுள்ளது. அவ்வளவு தான். இத்தகைய புதுமை ஆக்கங்களை பின்னோக்கு ஆக்கம் (Back Formation) என மொழியியலாளர்கள் காட்டுவர். றஊபுக்கு முன்னரே கனவு வேறு சில எழுத்தாளர்களால் வினையாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. நமக்கு இப்பயன்பாட்டைவிட அவன் எவ்வகையில் கனவு காண்பவனாய் இருக்கிறான், அவனது கனவு எத்தகையது என்பது முக்கியமானது. பொருளாதாரப் பற்றாக்குறையினால் ஏற்படும் அன்றாட நெரிசல்களுக்கு ஒரு மாற்றீடாக தற்காலிகமாகவேனும் திருப்தி தரும் ஒன்றைத் தேடும் அவனது மனோ நிலையையே கனவு என்பது காட்டுவதாக நான் கருதுகிறேன். இந்த மனோநிலையே பெரும்பாலும் எல்லாக் கதைகளிலும் ஏதோ ஒரு வகையில் வெளிப்பாடு பெற்றுள்ளது எனலாம்.

வார்த்தைகளின் செட்டான படிமங்களைச் செதுக்கும் ஆரம்பத்தில் இருந்தே றஊபுக்கு கைவந்திருக்கிறது. உதாரணத்துக்கு அவரது முதலாவது கதையில் வரும் பின்வரும் சித்திரத்தைக் காட்டலாம். 'சுவரில் தொங்கிய கண்ணாடி வலது சொக்கிலும் நெற்றிப் பொட்டிலும் மிகக் கோரமாகக் கொப்பளித்துப் போனதைக் கண்டு திண்ணையில் சலாரென்றது. எல்லோரும் சற்றைக்குத் திடுக்கிட்டுப் போனார்கள். பேசாமல் வந்து மெதுவாக உம்மா கண்ணாடித் துண்டுகளைத் தள்ளிவிட்டாள்.' பொதுவாகவே இத்தொகுப்பில் உள்ள கதைகள் எல்லாம் தம்மளவில் சிறப்பான வடிவ அமைதி பெற்றிருப்பதாகவே சொல்ல வேண்டும். அதிகம் அலட்டிக் கொள்ளாமல் ஆர்ப்பாட்டம் இல்லாமல் இயல்பாக நிகழ்வுகளைத் தொடுத்துச் செல்வது இவரது வினைத் திறனுக்கு அடையாளம்.''

— முகாஸனன்




நண்பா, நான் சிறிது உன்னுடன்
நடந்து செல்ல வேண்டும்
மலர்கள், மாபிள் கற்கள்
மனிதர்களுடனும்
மரணித்துப் போன நட்சத்திரங்களுடனும்
வாழ்ந்து
மறந்து விடப்பட்ட அத்தெரு
ஒழுங்கை வழியாக, நண்பா
நாம் சிறிது நடந்து செல்ல வேண்டும்
உனக்குள்ளாகவே நீ பேசிக் கொண்டாயா
அல்லது,யாருடனாவது பகிர்ந்து கொண்டாயா?
உடைந்த நட்சத்திர தூசுகளிலிருந்தும்
சாதாரண களிமண் சேர்வைகளிலிருந்தும்
வார்த்தெடுக்கப்பட்ட உன் சத்தியங்களை
நீ உனக்குள்ளாகவே பேசிக் கொண்டாயா?
அல்லது,
யாருடனாவது பகிர்ந்து கொண்டாயா?

அவ்விழுமியங்களை நான் வாசித்ததுண்டு
கொடுந்துயரங்களை மறைத்து
விறைத்துப் போன, உன் கண்புருவங்களில்
நான் அதனை வாசித்ததுண்டு
விண் கலங்களிலிருந்து புறப்படும்
தூரத்துப் பிரகிருதிகளின்
ஆரவாரங்களில்-
நவீன மூளைகளின் தந்திரங்களில்
தாக்க முறாமல்,
இந்த வானத்தையும் பூமியையும்
அகல விரிக்கின்ற ஒரு இதயத்தை
உன் கண்களில் பதித்திருக்க வேண்டும்

எதிர்பாராத ஒரு புதிய தர்மத்தை
நோக்கிய - சிந்தனைச் சலனமற்ற -
பிரகடனம் செய்யப்படாத - ஒரு
நவீன பிரதேசத்தில்,
இந்த உணர்ச்சி பூர்வ மனிதர்கள் எழுந்து
எப்போது
இயந்திர மனிதர்களின் தசைகளை
உலுக்கப் போகிறார்கள்?

நன்றி நண்பனே,
நாம் சிறிது நடந்தோம்
புலப்படாத துயரங்களால்,நான்
இனியும்
உன் இதயத்தை புண்படுத்த மாட்டேன்.

'கல்லூரன்'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கொழும்பு மாவட்டம்:
# தமிழ் வாக்குகளால் இலாபம் பெற்ற பெரும்பான்மையர் கட்சிகள்

நடந்து முடிந்த தேர்தலில் எதிர்பார்த்த சில; எதிர்பாராத பல நிகழ்வுகளும், முடிவுகளும் நடந்து முடிந்துள்ளன. அந்த வகையில் கொழும்பு மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இம்முறை இல்லாது போனதற்கான காரணத்தை இக்கட்டுரை தேட விளைகிறது.

கொழும்பில் ஏறத்தாழ 3 லட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் வாழ்கின்றனர். இது கொழும்பு மாவட்ட சனத்தொகையில் 15%த்தைக் கொண்டுள்ளது. கொழும்பில் தெரிவாகும் மொத்த உறுப்பினர் தொகை 20. இதன்படி பார்க்கையில் கொழும்பில் குறைந்தது மூன்று தமிழ் உறுப்பினர்களாவது தெரிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இதுவரைகாலம் அவ்வாறு நடந்ததில்லை.

1977க்கு முன்னிருந்த தொகுதிவாரிப் பிரதிநிதித்துவமுறை நடைமுறையில் இருந்த போது சிறுபான்மை இனங்களின் பிரதிநிதித்தும் பேணப்படுவதற்காக சில தொகுதிகள் ''பல அங்கத்தவர்கள் தொகுதி''யாக (Multi Member Co-ntituencies) மாற்றப்பட்டிருந்தது. அதன்படி கொழும்பில் சிறுபான்மையின பிரதிநிதித்துவத்திற்காக கொழும்பு மத்திய தொகுதி 3 அங்கத்தவர் தொகுதியாக மாற்றப்பட்டிருந்தது. ஆயினும் 1947தொடக்கம் அத்தொகுதியிலிருந்து ஒரு தமிழரும் தெரிவு செய்யப்படவில்லை. முஸ்லீம் அங்கத்தவர்கள் மட்டுமே தெரிவு செய்யக்கூடியதாக இருந்தது.

1978ஆம் ஆண்டு இரண்டாவது குடியரசு அரசியலமைப்பின் மூலம் ஏற்படுத்தப்பட்ட ''விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் பின் தொகுதிவாரிப் பிரதிநிதித்துவம் நீக்கப்பட்டது. அத்தோடு 'பல அங்கத்தவர் தொகுதி' முறையும் நீங்கியது.

சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த பலர் இத்தேர்தல் முறை தங்களைப் பாதிக்கும் விதத்தினை சுட்டிக்காட்டிய போதும் இது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆனால் சில மாவட்டங்களில் தனக்கு ஆதரவு தெரிவிக்கக்கூடிய சிறுபான்மை கட்சிகளை வெல்ல வைப்பதன் தேவையை உணர்ந்த தன் பின்பு ஐ.தே.க அரசு 10 ஆண்டுகளின் பின் (1989 தேர்தல் வருவதற்கு முன்) 1988 டிசம்பர் 17ம் திகதி அரசியலமைப்பின் 15 வது திருத்தச் சட்டத்தினை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது.

''குறிப்பிட்ட தேர்தல் மாவட்டத்தில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 1/20 (அதாவது 5%) பங்கினைப் பெறாத கட்சி போட்டியிலிருந்து நீக்கப்படும்'' என்பதே அதன் சாரம். மேற்படி எண்ணிக்கை 1977 தொடக்கம் 1988 வரை 1/8 ஆக (12.5) இருந்தது குறிப்பிடத்தக்கது. 1989ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மேற்படி அனுகுமுறை கணிசமானளவு ஐ.தே.கவுக்கு கைகொடுத்தது.

1989ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் முதற்தடவையாக தமிழ் பிரதிநிதியாக எம். எஸ்.செல்லச்சாமி தெரிவு செய்யப்பட்டார் என்ற போதும் செல்லச்சாமி தனி ஒரு குழுவின் வேட்பாளராக போட்டியிட்டிருக்கவில்லை. அப்போதுத் தேர்தலில் ஐ.தே.க இ.தொ.கா. இரண்டும் கூட்டாக போட்டியிட்டிருந்ததால் கொழும்பு மாவட்ட வேட்பாளர் பட்டியலில் செல்லச்சாமி போட்டியிட்டிருந்தார்.

அதுவரை காலம் கொழும்பு மாவட்டத்தில் தமிழர்களில் பெரும்பாலானோர் ஐ.தே.கவை சார்ந்திருந்தனர். ஐ.தே.க பட்டியலில் போட்டியிடும் தமிழர்களுக்கு தங்களது விருப்பு வாக்கை அளித்தனர். ஐ.தே.க பட்டியலில் செல்லச்சாமியுடன் செல்லையா ராஜதுரையும் இருந்த போதும் செல்லச்சாமி ஏற்கனவே மாநகர சபை உறுப்பினராக இருந்து அறிமுகமான நபராக இருந்தபடியால் செல்லச்சாமிக்கே விருப்பு வாக்கு அதிகமாக கிடைத்திருந்தது. செல்லச்சாமி 10வது இடமும் ராஜதுரை 17வது இடமும் வந்தனர். ஐ.தே.கவுக்கு மொத்தம் 12 ஆசனங்கள் மட்டுமே கிடைத்திருந்ததால் ராஜதுரை நிராகரிக்கப்பட்டார்.

கொழும்பில் வாழும் தமிழர்களில் பெரும்பாலானோர் இந்திய வம்சாவழித் தமிழர்களாவர். இவர்களில் அனேகமானோர் சாதாரண மத்தியதர வர்க்க கல்வியறிவு குறைந்தவர்களாவர். ஏனையோர் படித்த உயர் மத்தியதர வர்க்க குழாமினர். இவர்கள் தொடர்ச்சியாக தங்கள் வர்க்க நலன் சார்ந்த ஐ.தே.கவை மற்றும் இ.தொ.காவை ஆதரித்து வரும் தரப்பினர். ஏனைய சாதாரண மத்தியதர வர்க்கப்பிரிவினர் அவர்கள் வாழும் பிரதேசத்தில் பெரும் ஆதரவுள்ள தரப்பினருக்கு தங்கள் ஆதரவை அளித்து வந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. பெரும்பாலும் இவர்களது ஆதரவு சிங்கள வேட்பாளருக்கு அளிக்கப்படுவது இயல்பாக நடந்து வந்துள்ளது. கடந்த 17 வருடகால ஆட்சியில் ஐ.தே.கவை சார்ந்தே தமிழர்களின் ஆதரவு இருந்து வந்துள்ளது. இந்த இடைப்பட்ட காலப்பகுதியில் இ.தொ.காவும் கொழும்பில் தன்னைப் பலப்படுத்திக் கொண்டிருந்ததால் இ.தொ.காவுக்கும் ஐ.தே.கவுக்குமான ஆதரவை வெவ்வேறான ஆதரவு என கொழும்பு தமிழர்களும் எண்ணியிருப்பதற்கான சாத்தியம் குறைவு. இந்நிலையில் இம்முறையும் ''மாற்றத்தை விரும்பியும் பொது எதிரியை வீழ்த்துதல் எனும் பேரிலும் ஏனையோர் பொ.ஐ.முவுக்கு வாக்களித்திருக்கின்ற போதிலும் கொழும்பு தமிழர்களின் வாக்குகள் சொற்பமான அளவே பொ.ஐ.முவுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இம்முறையும் கொழும்பில் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் இடங்கள் அனைத்திலும் ஐ.தே.க வென்றுள்ளது. (ஐ.தே.க இம்முறை பலமான எதிர் கட்சியாக இருப்பதற்கு கூட தமிழ் வாக்குகளே காரணம் என்பதில் இருவேறு கருத்தில்லை) குறிப்பாக கொழும்பு வடக்கு, மத்திய கொழும்பு, கொழும்பு மேற்கு ஆகியவற்றைக் குறிப்பிடலாம் (பார்க்க அட்டவணை)







| | பொ.ஐ.மு ஸ்ரீ.ல.சு.க பெற்ற வாக்குகள் | | ஐ.தே.க பெற்ற வாக்குகள் | | செல்லுபடியாகாத வாக்குகள் | | வாக்களித்தோர் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1989 | 1994 | 1989 | 1994 | 1989 | 1994 | 1989 | 1994 |
| கொழும்பு வடக்கு | 17.15 | 40.41 | 66.46 | 54.62 | 6.90 | 5.47 | 66.80 | 74.74 |
| மத்திய கொழும்பு | 13.57 | 43.94 | 56.90 | 52.38 | 6.55 | 5.99 | 71.05 | 73.16 |
| பொறளை | 28.42 | 46.59 | 56.45 | 47.40 | 4.66 | 4.06 | 68.23 | 72.18 |
| கொழும்பு கிழக்கு | 27.29 | 45.69 | 56.48 | 44.21 | 4.34 | 3.90 | 66.30 | 72.83 |
| கொழும்பு மேற்கு | 17.79 | 35.30 | 66.25 | 51.06 | 3.96 | 3.13 | 65.16 | 71.09 |
| தெகிவளை | 33.87 | 51.90 | 54.91 | 42.10 | 3.62 | 3.07 | 71.59 | 71.05 |
| இரத்மலானை | 34.52 | 58.96 | 56.12 | 36.01 | 4.06 | 3.62 | 72.61 | 76.47 |
| கொலன்னாவ | 37.41 | 55.46 | 49.59 | 40.23 | 4.76 | 4.00 | 69.65 | 76.93 |
| கோட்டே | 39.68 | 53.69 | 46.93 | 40.53 | 3.40 | 2.76 | 67.24 | 75.58 |
| கடுவல | 37.48 | 55.97 | 45.47 | 36.60 | 4.17 | 3.47 | 68.95 | 76.69 |
| அவிஸ்ஸாவளை | 8.32 | 33.44 | 47.23 | 46.29 | 4.79 | 4.44 | 76.91 | 80.05 |
| ஹோமாகம | 29.19 | 73.70 | 48.66 | 39.66 | 5.68 | 3.80 | 65.77 | 72.72 |
| மகரகம | 20.08 | 33.82 | 40.24 | 54.93 | 3.76 | 2.72 | 69.61 | 75.78 |
| கெஸ்பேவ | 43.18 | 59.16 | 45.83 | 35.47 | 4.33 | 3.40 | 71.38 | 77.81 |
| மொறட்டுவ | 35.92 | 55.62 | 53.97 | 40.52 | 3.86 | 3.49 | 66.58 | 79.33 |
| மொத்தம் | 28.29 | 50.94 | 51.67 | 41.77 | 4.64 | 3.82 | 69.87 | 77.56 |

SOURCE:- The island- sunday edition- 21.08.94

1989ம் ஆண்டு பொதுத் தேர்தலின் சர்வதேச கண்காணிப்பாளர்களின் அறிக்கை.

**என்.சரவணன்**

இதன்படி இதுவரை காலம் தமிழர்களின் வாக்குகள் தமிழரல்லாதவர்களுக்கு வழங்கப்பட்டு வந்திருப்பது தெரியாததொன்றல்ல. ஆனால் ஒருபோதும் சிங்களவரின் வாக்குகள் தமிழர்களுக்கு வழங்கப்படுவதில்லை. இதனால் தமிழர்களின் பிரதிநிதிகளாக சிங்கள இனத்தவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள்.

பொதுவாக கொழும்பில் உள்ள சாதாரண மத்தியதர வகுப்பு தமிழர்கள் பலரில் வாக்களிக்கும் முறையே கூட தெரியாத பலர் இன்னும் உள்ளனர். (விகிதாசார பிரதிநிதித்துவத்தின் பின்னர்) கொழும்பில் தமிழர் அதிகமாக வாழும் இடங்களிலேயே செல்லுபடியாகாத வாக்குகள் அதிகரித்திருப்பதிலிருந்து இது நிரூபிக்கப்படுகின்றது. (பார்க்க அட்டவணை) அத்தோடு கொழும்பில் தமிழர் அதிகமாக வாழும் இடங்களிலேயே வாக்களித்தோர் வீதமும் குறைவாக இருக்கின்றது. மேற்படி இரண்டு அம்சங்களும் கடந்த இரு பொதுத் தேர்தல் முடிவுகளிலிருந்து இது தெளிவாகின்றது. (பார்க்க அட்டவணை). எனவே கொழும்பில் வாழும் தமிழர்களில் பலர் வாக்களிப்பில் காட்டும் நாட்டம் குறைவு.

இம்முறை பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட மொத்த வேட்பாளர் எண்ணிக்கை 184. இதில் 74 தமிழர்கள் அடங்குகின்றனர். இவ்வெண்ணிக்கை கொழும்பு மாவட்ட மொத்த வேட்பாளர் எண்ணிக்கையில் 40.21 வீதமாகும்.

மேற்படி எண்ணிக்கையைக் கொண்டு கொழம்பு தமிழ் வாக்குகள் எந்தளவு பிரிந்து சென்றிருக்கிறது என்பதை உணரலாம்.

ஐ.தே.கவின் பட்டியலில் இரா. யோகராஜன் பீ.பீ.தேவராஜ் ஆகியோர் போட்டியிட்டிருந்த போதும் ஐ.தே.கவுக்கு விழுந்த அதிகமான தமிழ் வாக்குகளில் அனுர பஸ்தியன், ஒஸி அபேயகுணசேகர, கிறிஸ்டி பெரேரா, ரத்னசிறி ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கே போய்ச் சேர்ந்தது. யோகராஜன், தேவராஜ் ஆகியோருக்கு அவர்களது நெருங்கிய ஆதரவாளர்களும் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வர்க்கப்பிரிவினருமே ஆதரவளித்திருந்தனர்.

பொ.ஐ.முவில் போட்டியிட்ட செல்லச்சாமிக்கு கூட ஏற்கனவே தன்னை நன்றாக அறிந்த நெருங்கிய ஆதரவாளர்களிடமிருந்தும் பொ.மு.வின் வருகையை விரும்பிய கணிசமான தமிழர்களிடமிருந்துமே கிடைத்திருக்கிறது. ரி.சி.ராஜரத்தினத்துக்கும் அவ்வாறே ஏற்பட்டுள்ளது. கொழும்பில் பொ.ஐ.முவை ஆதரிக்கும் வடகிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த கணிசமான தமிழர்களின் வாக்குகள் கிடைத்திருந்தன.

குமார் பொன்னம்பலம் தலைமையிலான சுயேட்சைக்குழுவுக்கு கிடைத்த கணிசமான வாக்குகள் கூட வடகிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து வாழும் தமிழர்களதே. இக்குழுவில் இடம்பெற்ற வேட்பாளர்கள் அனைவரும் சமூகத்தில் பெறாதாக அறிமுகமில்லாத உயர் வர்க்கப்பிரிவினரே. ''கொழும்பில் வாழும் இடம்பெயர்ந்த தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அவ்வப்போது தீர்ப்பதற்காக எங்களை நியமியுங்கள்'' என்ற ரீதியில் இடம் பெயர்ந்தோரின் வாக்குகளை தம்வசம் திருப்ப அவர்கள் முயன்ற போதும் கணிப்பு பிழைத்துப் போனது.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், மற்றும் ரெலோ ஆகிய கட்சிகள் கொழும்பில் அடையாளம் தெரியாத கட்சிகள். ஐ.தொ.கா. கொழும்பு தமிழர்களின் வாக்குகளை நம்பியும் ரெலோ அதிகமாக இடம் பெயர்ந்தவர்களின் வாக்குகளை நம்பியுமிருந்தது இரண்டும் படுதோல்வியடைந்தது.

இம்முறை பொதுத்தேர்தலை பொறுத்தவரை கொழும்பு மாவட்டத்தில் தமிழ் வாக்குகள் கூட கொழும்பு தமிழ், மலையகத் தமிழ், வடகிழக்கு தமிழ் என வாக்குகள் பிரிக்கப்பட்டமையும் தமிழ் வாக்கு டைவிற்குக் காரணமாக குறிப்பிடலாம்.

பல்லின மக்கள் வாழும் இலங்கையில் குறிப்பாக இனமுரண்பாடுகள் இனபாரபட்சங்கள் கூர்மையடைந்துள்ள நிலையில் இவ்வினங்களின் விகிதாசாரத்திற்கேற்ற வகையில் பிரதிநிதித்துவம் இல்லாத சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட சமூகம் மேலும் மேலும் ஒடுக்கப்பட்ட சாதகமாகப் போகும்.

கொழும்பைப் பொறுத்தவரையில் சிறுபான்மை இனம் பெரும்பான்மை இனத்துடன் பூகோள, பொருளாதார சமூகரீதியில் பின்னிப் பிணைந்திருப்பதால் சிறுபான்மை இனம் ஒன்று சேர்ந்து பிரச்சினையை முன்னெடுப்பதற்கான வாய்ப்புகளும் சொற்பம்.

ஆனால் கொழும்பு தமிழர்கள் தொடர்ச்சியாக பாதுகாப்பு பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பது பிரதானமான பிரச்சினையாகவே இன்றுள்ளது. இதர பிரச்சினைகளாக வேலை வாய்ப்பில் பாரபட்சம், தலைநகரிலுள்ள அரச அலுவலகங்களில் இன்னமும் தமிழ் மொழியல் கருமமாற்ற முடியாமை, கடவுச்சீட்டு, அடையாள அட்டை என்பவற்றைப் பெறுவதில் தமிழர்கள் விசேடமாக பிரச்சினைக்குள்ளாதல் என்பன போன்றவற்றைப் பற்றி குரலெழுப்ப தமிழ் பிரதிநிதித்துவம் கொழும்பு தமிழ் மக்களினால் எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் கொழும்பு தமிழ் பிரதிநிதித்துவம் இம்முறை இல்லாமல் போனதையிட்டு தங்களையே நொந்து கொள்வது அவதானிக்க முடிகிறது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திருமலை:

# ஓடாதார் யாரோ ?



ஓகஸ்ட் 16இல் நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தல் நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. 17 வருட ஆட்சியிலிருந்த கட்சியும், ஏனைய கட்சிகளும் 'மக்களின் தீர்ப்புக்காக' மிகவும் கடுமையான முறையில் போராடினார்கள். இறுதி வெற்றி பெரும்பாலானோர் எதிர்பார்த்தது போல மக்கள் கூட்டு முன்னணிக்கே கிடைத்துள்ளது. மாற்றத்தை விரும்பிய ஆதரவா, அல்லது முன்னைய ஆட்சிக்கான எதிர்ப்பா என்பது இதுவரை தெளிவாகவில்லை.

நாடாளாவிய ரீதியில் நடந்த இத்தேர்தல் வழமையான தேர்தல்கால நிலவரங்களுடனேயே நடந்தேறியது. மூவின மக்களையும் அண்ணளவாக ஒரேயளவாகக் கொண்ட திருமலை மாவட்ட தேர்தல் நிலைமை முன்னைய கணிப்பீடுகளை மாற்றியமைத்துள்ளது. அனேகம் பேர் எதிர்பார்த்திராத, இம்முறை ஒரங்கட்டப்படுமென எதிர்பார்க்கப்பட்ட ஐ.தே.கட்சி இரு உறுப்பினர்களை பெற்றுள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு உறுப்பினரைப் பெற்று இயக்கக் கட்சிகள் அனைத்தும் ஓரங்கட்டப்பட்டிருக்கின்றன. தமிழர்களின் வாக்குகள் சிதறிப் போனதால், பெறமுடியுமாயிருந்த இரு பிரதிநிதித்துவம் ஒன்றாக்கப்பட்டுள்ளது பெரிய இழப்பாகும். தேர்தல் பிரசார காலத்தின் போது கூட்டணி மேடைகளிலும், இயக்கக் கட்சி மேடைகளிலும் ஆளுக்காள் சாடிக் கொள்ளும் தொனியிலான மோதல்கள் இடம் பெற்றன.

தமிழ்க்கட்சிகளில் பிரதானமாகப் போட்டியிட்ட இருகட்சிகளான தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழ்த் தேசிய முன்னணி (ஈரோஸ், ரெலோ, புளொட் கூட்டு) பிரசாரக் கூட்டங்கள் கடைசி சில தினங்களில் ஒரே நாளில் இடம் பெற்றன. இவர்கள் பேசினால் அவர்களுக்கும் அவர்கள் பேசினால் இவர்களுக்கும் கேட்கக்கூடிய தூரத்திலேயே மேடைகள் அமைந்திருந்தன. கூட்டங்களுக்கு மக்களின் வருகை மிகக் மிகக் குறைவானதாகவே இருந்தது. திருமலை நகர வட்டாரத்துக்குள் எங்கிருந்தாவது ஒலிபெருக்கியில் பேசினால் அது மக்களை நோக்கி சென்றடையும் சூழல் இருப்பதால் கூட்டத்துக்கு வருகை தருவோர் எண்ணிக்கை பற்றி அலட்டிக் கொள்ளாமல் பேச்சாளர்கள் எல்லாரும் மணிக்கணக்காகப் பேசினார்கள்.

''நாங்கள் அன்று தமிழீழப் பிரகடனம் செய்து ஓர் உத்வேகத்தை ஊட்டியதனால் தான் அவர்கள் போர்க்களம் சென்று போராடத் துணிந்தார்கள்'' என்று கூட்டணியினர் பேச, ''அவர்கள் பேசாமல் தமிழீழம் என்று பிரகடனம் செய்து விட்டு நாட்டை விட்டே ஓடி விட்டார்கள், நாங்கள் இங்கே உங்களுக்காகக் கஷ்டப்பட்டோம். ஆயுதம் தூக்கிப் போராடினோம்...'' என இவர்கள் பேச மக்கள் தடுமாறித்தான் போனார்கள்!

''அவர்களுக்குப் போட்டு உங்கள் தலையில் மண் அள்ளிக் கொட்டப் போகிறீர்களா...'' என ரெலோ வேட்பாளர் சிங்கம் ஆக்ரோஷமாகப் பேசினார்.

தேர்தல் முடிவு அவர்களுக்கே மண் அள்ளிக் கொட்டி விட்டது. மக்கள்.... யுத்தத்தை விரும்பவில்லை.... யாரும், யாரையும் அடக்குவதை விரும்பவில்லை.... மக்களுக்காகப் போராடுவதாகச் சொல்லிக் கொண்டு இவர்கள் செய்தவைகளை மக்கள் மறந்து விடவில்லை.... எல்லோரும் மக்கள் பற்றிப் பேசினார்கள், போராடினார்கள்.... ஓடினார்கள்... யார் தான் ஓடவில்லை.... சந்தர்ப்பம் கிடைத்த போது அவரவர் வசதிக்கேற்ப எல்லாரும் எல்லாவற்றையும் செய்தார்கள்.

அண்மையில் நடந்ததைவிட பழையதை மக்கள் மறந்திருக்க முடியுமாதலால் தானோ என்னவோ... தமிழ் வாக்காளர்கள் கூட்டணியினர் பக்கம் திரும்பிவிட்டார்கள்.

இயக்கத்தின் மிரட்டல்கள், மாகாணசபைத் தேர்தல் கால கள்ள வோட்டு நிரப்பல்கள் எல்லாக் கட்சிக்கும், இயக்கத்திற்கும் பொதுவாகவே இருந்தன. கிராமப்புற வாக்குகளைக் கள்ளத்தனமாகப் பெற்றுக் கொள்வதில் சில கட்சிகள் ஈடுபட்டன. இதில் ஐ.தே.கட்சியின் ரஞ்சனிக்குழு வசமாக மாட்டுப்பட்டது. இவர்கள் வேன் ஒன்றில் கிராமப்பகுதிகளுக்குச் சென்று தாங்கள் தேர்தல் அதிகாரிகள் என்று இனங்காட்டி மக்களின் வாக்குகளை வாங்கி, பரிசோதித்து கணக்கிட்டுள்ளார்கள். இதனை இராணுவ அதிகாரிக்கு ஒருவர் தெரியப்படுத்த அவர் எடுத்த நடவடிக்கையினால் ஒரு செக் பொய்ன்டில் வைத்து அந்த வேனும், அவர்களும் மறிக்கப்பட்டனர். பின்னர் என்ன நடந்தது என்பதை அறிய முடியவில்லை.

தேர்தல் நாளுக்கு முன்னர் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் குழுவினர்களுக்கிடையே மோதல் இடம்பெற்றது. பொலிஸார் தலையிட்டு சண்டையை நிறுத்தியதோடு அவர்களின் அலுவலகங்களையும் மூடச் செய்தனர். ரெலோ எம்.பி.சிறிகாந்தாவின் கைத்துப்பாக்கியையும் தற்காலிகமாக பறிமுதல் செய்ததாகவும் அறியமுடிந்தது.

திருமலை நகரை அண்டியுள்ள பிரதான ஊர்களான கிண்ணியா, மூதூர், தோப்பூர் பகுதிகளில் முஸ்லிம் காங்கிரஸ், ஐ.தே.க. ஆதரவாளர்களிடையே தேர்தல் கை கலப்புகள் குத்து வெட்டுக்கள் இடம் பெற்றுள்ளன.

இம்முறையும் கள்ளவோட்டுகள் தாராளமாய் போடப்பட்டுள்ளன. எனினும் மாகாணசபைத் தேர்தலை விடக் குறைவானதே. சண்முக வித்தியாலயத்தில் ரெலோ சார்பாக கள்ளவோட்டு அளிக்க வந்த ஒருவரை கூட்டணி ஆதரவாளர்களில் ஒருவர் தடுத்து நிறுத்தியதால் கோபம் கொண்ட ரெலோவினர் அவரைத் தாக்கியுள்ளனர்.

முஸ்லீம் காங்கிரஸுக்கு கள்ள வோட் அளிக்க வந்த இருவரை ஐ.தே.கட்சி தேர்தல் கண்காணிப்பாளர் தடுத்தி நிறுத்தியுள்ளார். பின்னர் இவர்கள் வேட்பாளர் ஒருவரின் தலையீட்டினாலும், இன்னொருவரின் தந்திரத்தினாலும் விடுவிக்கப்பட்டனர். சில இடங்களில் யாரும் யாரையும் பிடிப்பதில்லை என்ற உடன்பாட்டோடு செயற்பட்டதையும் காணக்கூடியதாக இருந்தது.

கட்சிகள் கிராமப்புற மக்களைப் பயன்படுத்தி தங்கள் கைவரிசையைக் காட்ட முனைந்தனர். அதுவும் கைகூடவில்லை என்பது தேர்தல முடிவுகளின் பின் தெரிய வந்தது.



படங்களும், கட்டுரையும்: அலிபாரம்

திருமலையின் மூன்று தொகுதிகளிலும் முதன்மையில் வராத ஐ.தே.கவினர் இரண்டு ஆசனங்களைப் பெற்று வெற்றியடைந்திருப்பது எல்லோருக்கும் ஆச்சரியத்தை தந்துள்ளது. தேர்தல் பிரசார இறுதி நாட்களின் போது ஒரே கட்சி வேட்பாளர்கள் விருப்புவாக்குப் பெறுவதில் சுயநலமாக நடந்து கொண்டதால் அக்கட்சி சில நலன்களை இழந்துள்ளது. இது கூட்டணி, முஸ்லீம் காங்கிரஸ் விடயத்தில் மிகுந்த பாதிப்பை எற்படுத்தியுள்ளது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சார்ந்த நஜீப் முஸ்லீம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டதாலேயே ஒரு உறுப்பினரையாவது பெற முடிந்தது. இல்லாதிருந்தால் முஸ்லீம் காங்கிரஸுக்கு ஒன்றும் கிடைத்திருக்காது என்று முஸ்லீம் காங்கிரஸ் எதிர்ப்பாளர்கள் சிலர் பேசிக் கொள்கிறார்கள். அஷ்ரப், சாணக அமரதுங்கவுடன் செய்து கொண்ட உடன்பாடு முஸ்லீம்களிடையே மிகுந்த விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது. அக்கட்சியின் பின்னடைவுக்கு முக்கிய காரணமாக அதுவே குறிப்பிடப்படுகிறது.

தேர்தலின் பின்னர் சில இடங்களில் 'பட்டாசுக் கலவரம் நிகழ்ந்தது' மூதூரில் ஐ.தே.கட்சியினரிடையேயும் முஸ்லீம் காங்கிரஸிடையேயும் இக்கலவரம் சற்று அதிகமாக நிகழ்ந்தது. முஸ்லீம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் ஓட்டோவில் பட்டாசுகளை நிரப்பிக் கொண்டு ஐ.தே.கவின் ஆதரவாளர்களின் வீடு வீடாக கொளுத்திக் குழப்பி விட்டுச் சென்றனர். அதனால் சில அப்பாவிப் பொதுமக்கள் கைகலப்பிலும் ஈடுபட்டனர்.

தோப்பூர் பகுதியில் ஐ.தே.கட்சியைச் சார்ந்த சிலர் ஒரு மரமொன்றை வெட்டி வீதியில் இழுத்துச் சென்றதைக் கண்ட முஸ்லீம் காங்கிரஸினர் தாக்கியுள்ளனர். பின்னர் ஐ.தே.கவினர் மு.காங்கிரஸினரைக் கத்தியால் குத்திவிட்டு மூதூரின் ஐ.தே.க. வேட்பாளர் ராஜேஸின் வீட்டில் அடைக்கலமானதாக அறியமுடிந்தது

இராணுவத்தினருக்கும் புலிகளுக்குமிடையில் அகப்பட்டு வாழும் மக்கள் பயத்தினால் வாக்களித்தும், வாக்களிக்காமலும் விட்டுள்ளனர். மூதூரின் தமிழர்களின் வாக்குகள் தங்கத்துரைக்கு மட்டுமாக விழுந்துள்ளபடியால் அவர் கூட்டணிக்கு எம்.பியாக முடிந்தது. இப்போது அவரும் அவரது கட்சியினரும் இயக்கக் கட்சிகளின் மிரட்டலுக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எப்பும் ராஜகாரியரின் சுயேட்சைக் குழுவும் மக்களின் குறைந்தளவு கவனத்தையாவது பெறவில்லை.

தேர்தல் முடிந்த மறுநாள் காலை வதந்தியொன்று பரவியது. ஆரியபால என்பவரை கொலை செய்து மணிக்கூட்டு கோபுரத்திற்கருகே போட்டுவிட்டதாகவும் கந்தளாயில் மூன்று சிங்களவர்கள் கொலை செய்யப்பட்டு அவர்களின் சடலங்கள் வீதியில் போடப்பட்டிருப்பதாகவுமே அந்த வதந்தி பரவியது. ஆனால் அதில் எந்த உண்மையுமிருக்கவில்லை.



தேர்தலின் பின்னரும் எல்லோரும் தேர்தல் பற்றியே அசைபோட்டுக் கொண்டிருந்தார்கள். வயது, பால் வித்தியாசமிருக்கவில்லை. மக்கள் தாங்கள் ஒவ்வொருவரும் சரியான தீர்ப்பளித்துவிட்டதாக நினைக்கிறார்கள். இன்னும் சிலருக்கு விழுந்தும் மீசையில் மண் ஒட்டாத நிலை....! இன்னும் சிலருக்கு something better than nothing... போட்டவன் வராவிட்டாலும்... யாரோ வந்திருக்கிறானே....! இன்னும் சிலருக்கு குழப்பம். எதிர்க்கட்சியாகிவிட்ட ஐ.தே.க இங்கு வெற்றி பெற்றதால் சந்தோஷிப்பதா? ஆட்சி மாறியிருப்பதால் சந்தோஷிப்பதா? கூட்டுக்கட்சிக்கு ஒன்று கிடைத்திருப்பதால் சந்தோஷிப்பதா?

அவரவர் அவரவர்களின் கட்சிக்காக சந்தோஷப்படுகிறார்கள். இது அரசியல் பழிவாங்கலா? மாற்றம் விரும்பும் மக்களின் மனவெளிப்பாடா? அல்லது தேர்தலும் திருவிழா என்ற நிலைப்பாடா?

மக்கள் நடந்ததை மறந்திருக்கிறார்களா? நடக்கப் போவதற்காக மறந்திருக்கிறார்களா..? பழைய நிலைதான் தொடருமோ... என்ற கேள்வி எல்லார் மனதிலும்...

உடைத்து வீழ்த்தப்பட்ட தந்தை செல்வாவின் சிலையை அண்டிய காவலரண்....
பற்றைபோல் முளைத்திருக்கும் அத்துமீறிய குடியேற்ற கள்....
நிறையவே வேண்டாதவைகளாய் அண்டி விட்டவைகள்
எல்லாம் அகலுமா... இன்னல் தீருமா...? சுதந்திர மனிதர்களாய் உலவ முடியுமா..? விடைகள் தருவார்களா..?
அல்லது ''எப்போதும் போல் மக்கள்தான் தோற்றுப் போவார்களா...?''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மட்டக்களப்பு:

# மண்கவ்விய தமிழ் இயக்கங்கள்!

## கணிப்பு தவறியதேன்?

டி.சிவராம்

மட்டக்களப்பில் தேர்தலுக்கான நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து ஒன்று மட்டும் தெளிவாக இருந்தது. திரு.ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் பா.உ ஆகத் தெரிவு செய்யப்படுவார் என்பதே அது.

இத்துடன் ரெலோவினரும் ஒரு ஆசனத்தையாவது கைப்பற்றுவர் என்ற கணிப்பும் இருந்தது. ஏனெனில் ரெலோவின் வெளிச்ச வீட்டுச் சின்னத்தில் புளொட்டும், ஈரோஸும் போட்டியிட்டதால் மூன்று இயக்கங்களுடைய கூட்டான செல்வாக்கும் இணைந்து ஒரு ஆசனத்திற்காவது வழிவகுக்கும் என்பது சிலரின் கணிப்பாக இருந்தது.

முதலில் ரெலோவின் தலைமையில் போட்டியிட்ட தமிழ்த் தேசிய ஒற்றுமை முன்னணி ஏன் தோல்வியைத் தழுவிற்று என்பதைப் பார்ப்போம்.

தன் வெற்றி வாய்ப்பை பின்வரும் நான்கு காரணிகள் உறுதிப்படுத்தும் என ரெலோ எதிர்பார்த்தது.

1) ஜனா 5 வருடங்கள் எம்.பியாக இருந்த காலத்தில் தனக்குத் தெரிந்த பலருக்கு வழங்கிய வேலை வாய்ப்புகள்.

2) ஜனா பா.உக்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் மாவட்டத்தின் சில இடங்களில் செய்து கொடுத்த வேலைகள்.

3) மார்ச் மாதம் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களில் ரெலோ கைப்பறிய மாநகரசபை நிர்வாகம் மற்றும் பிரதேசசபை நிர்வாகங்கள்.

4) ஜனாவின் சொந்த ஊரான செட்டி ப்ாளையம், ராபட்டின் சொந்த ஊரான ஆரையம்பதி, பேட்டோவின் இடமான செங்கலடி ஆகியவற்றில் தனக்கு இருப்பதாக ரெலோ கருதிய செல்வாக்கு.

இத்துடன் கிட்டத்தட்ட நாற்பதாயிரம் வாக்காளரைக் கொண்ட மட்டக்களப்பு மாநகரசபைப் பகுதியில் மேயர் செழியனின் காரணமாகவும் அவருடன் தெரிவு செய்யப்பட்ட ஏனைய ரெலோ உறுப்பினர் ஊடாகவும் நகரப்பகுதியிலும் ஓரளவு செல்வாக்கு இருக்கும் என ரெலோ எதிர்பார்த்தது.


வாழைச்சேனை, மண்டூர் ஆகிய பகுதிகளில் ரெலோவின் கையிலிருந்த பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் ஊடாக வாக்குகள் சேகரிக்கும் முயற்சியும் நடைபெற்றது. புலிகளின் நடமாட்டத்திற்குட்பட்ட வாகரைப்பகுதியில் ஈரோஸ் சார்பில் போட்டியிட்ட சிவானந்த தாசிற்கு (காந்தன்) பெரும் ஆதரவு இருப்பதாக ஈரோஸ் தலைமைப்பீடம் கூறி வந்தது. எனினும் இப்பகுதியில் வாக்காளர் தொகை ஒப்பீட்டளவில் மிகக் குறைவாகவே (ஏறத்தாழ 7000) என்பதை ஈரோஸ் கவனத்திற் கொள்ளவில்லை போலும்.

மட்டக்களப்பு மாநகரசபைத் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிட்டு வென்று பின் ஐ.தே.கவுக்கு விலை போனதாகக் கூறப்படும் திரு.பிரபாகரன் மாநகரசபைப் பகுதியிலும் ஈரோஸின் பழைய 'கோட்டையான' மகிழவெட்டுவான் போன்ற இடங்களிலும் பல வாக்குகளைப் பெறலாம் என ஓடியாடித் திரிந்தார். ஆரம்பத்தில் இவரை வேட்பாளராகப் போடுவதற்கு தமிழ்த் தேசிய முன்னணியின் ஏனைய தலைவர்கள் கடும் ஆட்சேபனை தெரிவித்திருந்தனர். எனினும் ஈரோஸ் தலைவர்ான சங்கர் ராஜி மட்டக்களப்பு சென்று வேட்பாளர் தெரிவு தொடர்பாக அவ்விடம் இருந்த இயக்க உறுப்பினருடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட வேளையில் பிரபா தனது ஆட்களைத் திரட்டிக் கொண்டு ராஜியிடம் வாதித்ததாகவும், ''பிரபா போட்டியிட்டால் மட்டுமே இங்குள்ள ஈரோஸ் தேர்தல் வேலையில் இறங்கும்'' என அந்தக் கோஷ்டி ராஜியை வலியுறுத்தியதனாலேயே ராஜி வேறு வழியின்றி பிரபாவையே வேட்பாளராகப் போட வேண்டியதாயிற்று எனவும் இயக்கப் பிரமுகர் ஒருவர் கூறினார்.

அடுத்தது புளொட். 90 இல் மோகனை பணம் கையாடல் காரணமாக விலத்திய பின்னர் பெரிதாக எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடாமல், கிராமப் பகுதிகளிலும் மட்டக்களப்பு நகரை அண்டிய ஒரு சில பகுதிகளிலும் சில சமூக சேவைகளில் ஈடுபட்டு வந்த இயக்கம். உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வவுணதீவு பிரதேச சபையில் புளொட் வெற்றியீட்டி இருந்தது. இப்பகுதியில் பிரதேச சபைத் தலைவரான வேலாயுதம் செய்த சில அபிவிருத்தி நடவடிக்கைகள் காரண்மாக இங்கு வாக்குகள் கிடைக்கலாம் எனப் புளொட் எதிர்பார்த்திருந்தது. இத்துடன் மரப்பாலம் பகுதியிலும் கழுதாவளையிலும் அதன் வேட்பாளர்களான மாணிக்கம்பிள்ளை மாஸ்டர், ப்ாக்கியராஜ் (மாமா) ஆகியோருக்கு இருந்த ஊர்ச் செல்வாக்கையும் புளொட் நம்பியிருந்தது. ரெலோவின் சின்னத்தின் கீழ் போட்டியிட்ட இம் மூன்று இயக்கங்களின் மேற்கண்ட எதிர்பார்ப்புகள் ஏன் கைகூடவில்லை?

இதில் நாம் முதலாவதாக நோக்க வேண்டியது யாதெனில் ரெலோ எவற்றைத் தன் கோட்டைகள் எனக் கற்பனை செய்திருந்ததோ அவையெல்லாம் வெறும் ஓட்டைகள் என்பதே. ரெலோ வாக்குகளைப் பெருமளவு எதிர்பார்த்திருந்த ஆரையம்பதி, செங்கலடி ஆகிய பகுதிகளில் அவ்வியக்கத்தினர் மக்களுக்கு உதைத்த உதையும், அடித்த அடியும் செய்த கொலைகளும் அம்மக்கள் மத்தியில் பலத்த ஆனால் மிக இரகசியமான எதிர்ப்பை உண்டாக்கியிருந்தது. உதாரணமாக ஆரையம்பதியிலுள்ள இராசதுரை கிராமத்தில் கிட்டத்தட்ட 100 குடும்பங்களுக்கு மேல் ஆண் பெண் சிறார் என்ற பேதமின்றி ஒரே இரவில் ரெலோ உறுப்பினர்களிடம் அடி உதை பட்டவர்கள் உள்ளனர். இவர்களைப் போன்றவர்கள் பயம் காரணமாக வேனும் தமக்கு வாக்களிப்பர் என எதிர்பார்த்திருந்தது ரெலோ. இந்த எதிர்பார்ப்பிற்குக் காரணம் இப்பகுதியில் உள்ளூராட்சி தேர்தலில் அங்கு ரெலோவிற்குக் கிடைத்த வாக்குகள். இதுபற்றி ஆரையம்பதியில் ஒருவர் கூறினார் ''உள்ளூராட்சித் தேர்தலில் நாம் ரெலோவிற்கு வாக்களித்தது முஸ்லீம்களின் கையில் எம் பிரதேச சபை அதிகாரம் போய்விடக் கூடாது என்பதற்காகவே. ஆனால் இந்தத் தேர்தலில் கதை வேறு. ரெலோவின் அட்டூழியத்தை இல்லாதொழிக்க இரகசியமான ஒரு சந்தர்ப்பம் இதுவென்றே நாம் நினைக்கிறோம்''. ரெலோ தன் கோட்டைகளாக கருதிய இடங்களில் பலர் இவ்வாறான கருத்துக்களை தனிப்பட்ட முறையில் தெரிவித்த போதும் முன்பின் அதிகம் பழக்கமில்லாதவர்களோ இயக்க உறுப்பினர்களோ அவர்களது நிலைப்பாடு பற்றி விசாரித்த வேளைகளில் வெளிச்ச வீட்டிற்கே தாம் வாக்களிப்பதாக அவர்கள் கூறி வந்தனர். ரெலோவும் இதை நம்பி தனக்கும் பெரும் ஆதரவு இருப்பதாகக் கற்பனைகளை வளர்க்கலாயிற்று.

அடுத்தது ஈ.பி.ஆர்.எல்.எப். இவ்வியக்கம் பெரிதும் நம்பியிருந்த இடங்கள் ஐந்து. அவையாவன சந்திவெளி, மொறக்கட்டான் சேனைப் பகுதி, உன்னிச்சை, கொக்கட்டிச்சோலை, ஏறாவூர், மட்டுநகர்ப் பகுதி. முன்னர் புளொட்டிலிருந்து பின் தமிழகத்தில் ஈ.பி.ஆர்.



ஜோசப் பரராஜசிங்கம்

எல்.எப்பின் புழல் முகாமில் சிலகாலம் வாழ்ந்து அங்கிருந்து சவுதியில் போய் பணம் சம்பாதித்துக் கொண்டு சில மாதங்களின் முன்னர் ஊர் திரும்பியவர் வைத்தி. தேர்தல் என்றதும் திடீரென்று ஈ.பி.ஆர்.எல்.எப்பின் வேட்பாளரானார். சந்திவெளியும் அதன் ஆற்றுக்கப்பால் உள்ள திகிலி வெட்டை கிராமும் முன்னொரு காலத்தில் புளொட் கோட்டைகள். எனவே வைத்திக்கு அப்பகுதியில் ஆதரவு கிடைக்கும் என ஈ.பி.ஆர்.எல்.எப் கூறிற்று. இதே போல உன்னிச்சையில் சண்முகம் என்பவரையும் ஏறாவூரிலும், மட்டக்களப்பு நகரின் சீலாமுனை எனும் பகுதியிலும் நேசராசா (நிவாஸ்)வையும், கொக்கட்டிச் சோலைப் பகுதியில் 'பெனாண்டோ' என்பவரையும் நம்பி வாக்குவேட்டையில் ஈ.பி.ஆர்.எல்.எப் ஈடுபட்டது. இப்பகுதிகள் அனைத்திலும் ஈ.பி.ஆர்.எல்.எப்பினால் மாகாணசபை நடந்த காலத்தில் பயனடைந்தவர்களை விட அவ்வியக்கம் பிள்ளை பிடித்ததால் பாதிக்கப்பட்ட குடும்பங்களே அதிகம். இதை ஈ.பி.ஆர்.எல்.எப்.ஆர்.எல்.எப். புரிந்து கொள்ளவில்லை அல்லது புரிந்து கொள்ள விரும்பவில்லை. அத்துடன் மாகாண சபை ஒரு கேலிக்கூத்தாகிப் போனதும், துண்டைக் காணோம் துணியைக் காணோம் என ஈ.பி.ஆர்.எல்.எப்பினர் ஆயுதங்களைத் தூக்கி எறிந்து விட்டு இந்தியாவிற்கு ஓடியதும் மக்கள் மனதில் பதிந்து போய் இருந்தமையால் எவரும் இவர்களை பாராளுமன்றம் அனுப்பப்படக் கூடியவர்களாகக் கருதவில்லை. எனினும் ''பூவின் மீது புள்ளடி போடுங்கள்'' என ஈ.பி.ஆர்.எல்.எப்.ஆர்.எல்.எப். மேற்குறிப்பிட்ட பகுதிகளில் இருந்த மக்களைக் கோரிய போதெல்லாம் அவர்கள் தவறாமல் தலையாட்டினார்கள். இதைக் கண்டு ஈ.பி.ஆர்.எல்.எப்பும் மனங்குளிர்ந்து போய் தனக்கு ஒரு ஆசனம் நிச்சயம் எனக் கனாக் கண்டது. அத்துடன் தான் இலங்கை இராணுவத்துடன் நின்று துரோகமிழைக்காத ஒரு சுத்தமான இயக்கமாதலால் தனக்கு ரெலோவை விடவும் கூடுதல் ஆதரவு இயல்பாகவே கிடைக்கும் எனவும் ஈ.பி.ஆர்.எல்.எப். கூறிற்று. இதை அதன் காரியலாயத்தில் அடிக்கடி காணப்பட்ட சில உள்ளூர் புத்திஜீவிகளும் வலியுறுத்தினர். (ஆனால் இவர்கள் கூட்டணியின் மறைமுகப் பிரச்சாரர்களாய் இருந்த விடயம் ஈ.பி.ஆர்.எல்.எப்புக்குத் தெரிந்திருக்கவில்லை.)

ஈ.பி.ஆர்.எல்.எப். கோட்டைகளின் காவலர்கள் பெற்ற விருப்பு வாக்குகளை நோக்கினால் ஈ.பி.ஆர்.எல்.எப் எப்படிப்பட்ட கற்பனையில் மிதந்திருக்கிறது என்பது புரியும். கொக்கட்டிச்சொலை பரமேஸ்வர மூர்த்தி (பெனாண்டோ) 1358 ஏறாவூர்- சீலாமுனை- நேசராசா (நிவாஸ்) 982. சந்திவெளி -வைத்தி -649. உன்னிச்சை -சண்முகம் -775. கிட்டத்தட்ட 2 இலட்சம் தமிழ் வாக்காளர் உள்ள இடம் மட்டக்களப்பு தேர்தல் மாவட்டம் என்பதை நாம் கவனிக்க வேண்டும். இதில் ஈ.பி.ஆர்.எல்.எப். எடுத்தது 4000(?) வாக்குகள் மட்டுமே. ஈ.பி.ஆர்.எல்.எப்புக்கு கடந்த ஐந்து வருடங்களாக ஒரு பா.உ. மட்டக்களப்பு சார்பில் இருந்து வந்திருந்தும் அதனால் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முடியாமற் போய் விட்டது.

மட்டக்களப்பு தேர்தல் களத்தில் குதித்த இயக்கங்களினுள் மரண அடி விழுந்தது. ஈ.பி.ஆர்.எல்.எப்பை விட ஈரோஸிற்கேயாகும். அதன் உள்ளூர் தலைவர் மாநகர சபை புகழ் -பிரபாகரன் முழு மாவட்டத்திலும் எடுத்த விரும்பு வாக்கு 1190. இதில் தோற்றாலென்ன மாகாணசபைத் தேர்தல் விரைவில் வரும்; அதில் ஒரு ஆசனம் எடுக்கலாம் என கூறியுள்ளார் அவர். இனி ஆசை வி_ாது அவரை.. ஆனால் ஐ.தே.க. தற்போது அரசிலில்லை. எனவே பிரபாவை நாடுவார் யாரும் இல்லை என்பதுதான் பிரச்சினை. இத்தேர்தலில் இறங்கிய இயக்கங்களுள் அதிக வாக்குகளை புளொட்டே எடுத்துள்ளது. ஜனாவை விட ரெலோ பட்டியலில் போட்டியிட்ட மாமா (பாக்கியராஜ்) அதிக வாக்குகளை எடுத்துள்ளமை ரெலோவிற்கு அதிர்ச்சி அளித்துள்ளது.

ஆரம்பத்தில் ஜனா போன்றவர்கள் புளொட்டின் வேட்பாளரான மாமா ஒரு பூச்சியம் என்றே நினைத்திருந்தனர். மாமாவிற்குச் செல்வாக்கில்லை என அவர்கள் நினைத்ததற்குக் காரணம் இருக்கலாம். ஏனெனில் மாமா ஊர்களுக்குள் புகுந்து அடி, உதை, வெட்டு என்பவற்றில் ஈடுபட்டு புகழ் தேடிக் கொள்ளவில்லை. எனவே மாமா தன்னைவிடக் கூடுதலான விருப்பு வாக்குகளை எடுத்தமை ஜனாவிற்குப் பெரும் மனவேதனையை உண்டாக்கி விட்டது. கொழும்பு போனவர் இன்னும் திரும்பவில்லையாம்.


அடுத்ததாக மட்டக்களப்பு தேர்தலில் நடந்த ஒரு எதிர்பாராத-திடீர்த் திருப்பத்தைக் கூற வேண்டும். அது தான் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு தேர்தலின் கடைசி வாரத்தில் ஏற்பட்ட எதிர்பாராத செல்வாக்கு. இராஜன் செல்வநாயகம் பா.உ.ஆக இருந்த காலத்தின் பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மட்டக்களப்பிற்கும் எவ்விதத் தொடர்பும் இருந்தது கிடையாது. இராஜன் செல்வ்நாயகம் பா.உ. ஆக இருந்த காலத்தின் மட்டக்களப்பிற்குச் செய்த சேவைகளை (முக்கியமாக வலையிறவுப் பாலம்) பலர் மறக்கவில்லையெனினும் எழுபதுகளின் நடுக்கூற்றிலிருந்து உருவாகிய தமிழ் ஈழ அலையில் மட்டக்களப்பிலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி எனும் சிங்களக் கட்சி இல்லாது போயிற்று. எனினும் அண்மைக் காலத்தில் தென்பகுதியில் சந்திரிகா இனப்பிரச்சினை தொடர்பாக முன்வைத்த கருத்துக்கள் மட்டக்களப்பின் முன்னாள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களுக்குப் பெரும் உற்சாகத்தை ஊட்டி விட்டன. இவர்களுள் முதன்மையானவராக படுவான்கரையின் பெரும் நில உடமையாளர்களில் ஒருவரான கொச்சிக்காய் போடியாரைக் குறிப்பிடலாம். போடியார் ஸ்ரீ.ல.சு.கட்சி ஆர்வலர்களது முயற்சியின் பயனாய் மட்டக்களப்பின் பழம்பெரும் இடதுசாரியான சிவகுருநாதனின் இளைய சகோதரர் கணேசமூர்த்தியின் தலைமையில் பொது ஜன முன்னணியும் தேர்தலில் இறங்கியது. சிவகுருநாதன் தமிழ் ஈழக் கோஷம் வானைப்பிளந்த 77 தேர்தலில் கூட லங்கா சமமாஜக் கட்சி சார்பில் பட்டிருப்புத் தொகுதியில் போட்டியிட்டு ஏழாயிரம் வாக்குகள் எடுத்தவர். இவருடைய குடும்பம் பட்டிருப்புத் தொகுதியில் செல்வாக்குடையது. அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்பான்மையாக உள்ள முக்குவ இனத்தவருள் முதன்மை பெற்ற குடிகளுள் ஒன்று இவர்களுடைய குடி.

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net





## ஐ.தே.க:

# வெற்றியும் தோல்வியும் காரணம் என்ன?



**ச.பாலகிருஷ்ணன்**

ஓகஸ்ட் 16ம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் 17வருட ஆட்சியை மாற்றுவதற்கான தீர்ப்பை மக்கள் வழங்கியுள்ளார்கள். எந்தவொரு தனிக் கட்சியும் இத்தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையை பெறாததினால் பொது ஜன ஐக்கிய முன்னணியானது சிறீலங்கா முஸ்லீம் காங்கிரசினதும், நுவரெலிய மாவட்டத்தில் இருந்து தெரிவாகியுள்ள சுயேட்சை அபேட்சகரினதும் ஆதரவுடன் ஆட்சியை அமைத்துள்ளது. இத்தேர்தலில் வடகிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த 17 தேர்தல் மாவட்டங்களில் 13 மாவட்டங்களையும், இப்பிராந்தியத்தில் உள்ள 136 தேர்தல் தொகுதிகளில் 92 தேர்தல் தொகுதிகளையும் பெரும்பான்மை வாக்குகளினால் கைப்பற்றியுள்ளது பொ.ஐ. முன்னணி

1977ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு ஓரளவு சுதந்திரமாக வாக்களிப்பதற்கு வாக்காளர்களுக்கு கிடைத்த முதலாவது சந்தர்ப்பமாக இத்தேர்தல் அமைந்திருந்தாலும், வட மாகாணத்தில் நடைபெற்ற தேர்தலானது தேர்தல் ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கும் வகையில் அமைந்தது. அரசின் கட்டுபாட்டிலுள்ள தொலைக்காட்சி, வானொலி மற்றும் ஏரிக்கரைப் பத்திரிகைகள் மிகவும் கீழ்த்தரமான முறையில் ஐ.தே. கட்சி சார்பான பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களை திசை திருப்ப பாடுபட்டதோடு 90 அமைச்சர்களினது அதிகாரங்கள், அரச வாகனங்கள், அரச அதிகாரங்கள் என்பவற்றின் துணையோடு போட்டி போட்ட ஐ.தே.கட்சியின் தோல்விக்கான காரணங்களை இனம் காணுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### தேர்தல் பிரசார நடைமுறைகள்

ஐ.தே.கட்சியின் தேர்தல் பிரச்சார நடைமுறைகள் பின்வரும் முக்கிய அம்சங்களை கொண்டதாக அமைந்திருந்தன:

பேரினவாத ஆதிக்கத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வட கிழக்கு பிரதேச இனவாத யுத்தத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் சென்று தமிழ்ப் போராளிகளை தோற்கடித்து இராணுவரீதியான வெற்றியை உறுதி செய்வதற்கான மக்களின் ஆதரவை திரட்ட முயன்றமை;

சிங்கள பௌத்த மக்களின் இனவாத உணர்வுகளைத் தூண்டிவிட்டு, இனவாதப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை முன்வைத்தும் இனவாத யுத்தத்திற்கு எதிராகவும் பொ.ஐ.முன்னணி மேற்கொண்டிருந்த நிலைப்பாட்டுக்கு எதிராக சிங்கள மக்களை தூண்டியமை;

பொ.ஐ.முன்னணியின் தேர்தல் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய சந்திரிகா குமாரணதுங்கவிற்கும், பொ.ஐ.முன்னணியினருக்கும் எதிராக விஷமப் பிரச்சாரங்களை மேற்கொண்டு அவர்களின் நற்பெயர்களுக்கு களங்கத்தை ஏற்படுத்தி அவர்களுக்கான ஆதரவுகளை குறைத்துவிட முயன்றமை;

1970 - 1977 ஆண்டுக்களுக்கிடைப்பட்ட காலகட்டத்தில் நிலவிய உணவுப் பங்கீடு, அத்தியாவசியப் பொருட்களின் கட்டுப்பாடு போன்ற நிலைமைகளை ஞாபகப்படுத்தி மக்களின் ஆதரவை ஐ.தே. கட்சியின் பக்கம் திசை திருப்ப முயன்றமை;

திறந்த பொருளாதாரக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வது உட்பட பல்வேறு சமூக, பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை அறிவித்தமை;

ஊழலற்ற நிர்வாகத்தை நிலை நாட்டப் போவதாக கூறியமை எனினும் மேலே கூறப்பட்டுள்ள விடயங்களில் முதல் நான்கு விடயங்கள் தான் ஐ.தே.கட்சியின் பிரச்சாரங்களில் பிரதான இடங்களைப் பிடித்திருந்தமையும், இவற்றில் முதல் இரு விடயங்களிலும் மிகக் கூடுதலான அவதானம் செலுத்தப்பட்டிருந்தமையும் காணக்கூடியதாக இருந்தது.

தேர்தல் பிரச்சாரங்களின் போது இனவாத யுத்தத்திற்கான சிங்கள மக்களின் ஆதரவைத் திரட்டுவதில் முக்கிய பங்கை வகித்தவர் ஜனாதிபதி விஜேதுங்க. இவரது பிரச்சாரங்களின் இறுதிக்கட்டத்தில் ஐ.தே.கட்சியை வெற்றி பெறச் செய்தால் மூன்றே மாதங்களில் யுத்தத்தை வெற்றி பெற்று தருவதாக உறுதி மொழியளித்தார். கடந்த 15 வருடங்களாக வெல்ல முடியாத இந்த யுத்தத்தை மூன்றே மாதங்களில் வென்று தருவதாக கூறிய ஜனாதிபதி விஜேதுங்காவின் கூற்றானது ஐ.தே.கட்சி தோல்வியடையும் அறிகுறியின் விரக்தி நிலையையே வெளிப்படுத்தியது.

முஸ்லீம் காங்கிரஸுடன் பொ.ஐ. முன்னணி செய்து கொண்ட தேர்தல் உடன்படிக்கையை கிழக்கு மாகாணத்தை முஸ்லீம்களுக்கு தாரைவார்த்துக் கொடுக்கும் ஒரு சதியெனவும், இது ஒரு இரகசிய ஒப்பந்தம் எனவும், இது இலங்கையின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் சீர்குலைத்துவிடும் எனவும் பொ.ஐ.முன்னணிக்கு எதிராக பிரச்சாரம் செய்தது ஐ.தே. கட்சி. இனவாதப் பிரச்சினையின் தீர்விற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரான பிரபாகரனுடன் இரகசிய உடன்படிக்கை ஒன்றை பொ.ஐ.முன்னணி செய்துள்ளதென்றும் இதன் மூலம் பொ.ஐ. முன்னணி பதவிக்கு வந்தால் நாட்டைப் பிரித்து புலிகளுக்குக் கொடுக்கும் நிலை ஏற்படும் எனவும் பிரச்சாரம் செய்யப்பட்டது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையையும், அவர்களின் பாரம்பரிய (வட-கிழக்கு) ப் பிரதேசங்களுக்கான உரிமையையும் அங்கீகரிப்பதைத் தமது கொள்கை நிலைப்பாடாகக் கொண்டு முன்னணியில் செயற்படும் அரசியல் வாதி, வாசுதேவ நாணயக்கார ஆவார். இவர் தனது கொள்கை நிலைப்பாட்டை வலியுறுத்தி ஐ.தே.கட்சியின் அபேட்சகரும் பிரபல இனவாதியுமான ஜினதாச நியத்தபாலவுடன் TNL தொலைக்காட்சி சேவையில் நடத்திய விவாதத்தின் போது வாசுதேவ முன்வைத்த தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பான நிலைப்பாடுகள் பற்றிய கூற்றுக்களை ஒலிப்பதிவு செய்து இவ்வொலிப்பதிவு நாடாக்களை ஐ.தே.கட்சியின் பிரச்சார மேடைகளிலும், வாகனங்களிலும் பிரச்சாரம் செய்து வாசுதேவாவின் கூற்றின் அடிப்படையில் இந்நாட்டை தமிழர்களுக்குப் பிரித்துக் கொடுக்கும் வேலைத்திட்டத்தினை பொ.ஐ.முன்னணி வகுத்திருக்கின்றது என பொ.ஐ.முன்னணிக்கு எதிராக சிங்கள பௌத்த மக்களின் உணர்வுகளைத் தூண்டிவிட முயன்றது ஐ.தே.கட்சி.

இலங்கையின் வரைபடத்தில் வட கிழக்கு பிரதேசங்கள் சிவப்புமையினால் வரையப்பட்டு கிழக்கிலங்கையில் முஸ்லீம் காங்கிரஸின் தலைவரான அஷ்ரப்பின் படத்தையம், வடக்கில் பிரபாகரனின் படத்தையும், மத்தியில் சந்திரிகா குமாரணதுங்கவின் படத்தையும் பிரசுரித்து வாசுதேவ நாணயக்காரவின் கூற்றுக்களை அருகில் பிரசுரித்து பொ.ஐ.முன்னணி பதவிக்கு வந்தால் வட கிழக்குப் பிரதேசம் இலங்கையில் இருந்து பிரிந்து சென்றுவிடும் எனப் பிரச்சாரம் செய்யும் சுவரொட்டிகளை நாடு பூராவும் ஒட்டியது ஐ.தே.கட்சி.

ஐ.தே.கட்சியின் இந்தப் பேரினவாதப் பிரச்சாரங்களின் ஒரு உச்சகட்டமாக அமைந்தது தேர்தல் நடைபெறுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர்தான் இந்நாட்டின் பிரபல சிங்கள பௌத்த இனவாதியான காமினி ஈரிய கொல்லாவுடன் நடத்திய பேட்டியை TNL, ரூபவாகினி ஆகிய தொலைக்காட்சி சேவைகளில் பலமுறை ஒலிபரப்பியது. இந்த ஒலிபரப்பானது தேர்தல் நடைமுறைசசட்டங்களை மீறிய செயலாக அமைந்ததோடு, இதை ஒளிபரப்ப ரூபவாகினிக் கூட்டுத்தாபனத் தலைவர் மறுப்பு தெரிவித்த போது இந்நாட்டின் சட்டமா அதிபரும், ஜனாதிபதியும் இதை ஒளிபரப்பும்படி வற்புறுத்தியதாகவும் கூறப்படுகின்றது. சிங்கள பௌத்தர்களின் உணர்வுகளைத் தமிழர்களுக்கெதிராக தூண்டிவிட முயல்வதாகவும் யுத்தத்திற்கு மாற்று நடவடிக்கை எதுவும் கிடையாது எனவே இராணுவ ரீதியில் தமிழ்ப் போராளிகளை வெல்வதற்கான நிலைப்பாட்டை வலியுறுத்தியும், பொ.ஐ.முன்னணியின் அரசியல் தீர்விற்கான நிலைப்பாட்டையும், தமிழ் மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளையும் நிராகரிக்கும் தன்மையிலும் இப்பேட்டி அமைந்திருந்தது.

ஆனால் இந்நாட்டு மக்களில் பெரும்பான்மையினர் இந்த முடிவு முடியாத இனவாத யுத்தத்தை எதிர்ப்பவர்களாகவும், ஐ.தே.கட்சி ஆட்சியின் ஜனநாயக விரோதப் போக்குகளையும், அடக்கு முறை, ஊழல்கள் வீண் விரயங்கள் போன்றவற்றையும் எதிர்ப்பவர்களாகவும் காணப்பட்டனர். இத்தகைய எதிர்ப்புணர்வுகள் கடந்த இரு வருடங்களாக வளர்ந்து வந்தமையையும் காணக்கூடியதாக இருந்தது. எனவே பொ.ஐ.முன்னணி யுத்தத்திற்கு எதிராகவும் ஊழல்களை ஒழிப்பது, அரசியல் வன்முறைகளை இல்லாதொழிப்பது, மக்களின் சுதந்திரங்களைப் பாதுகாக்கக் கூடிய ஜனநாயக மரபுகளை இலங்கையில் நிலைநாட்டுவது போன்ற நிலைப்பாடுகளுக்கான ஆதரவை இம்மக்கள் வழங்கினர்.

பொதுவாக தேர்தல் வாக்குறுதிகளில் மக்கள் வாழ்க்கைச் செலவு, பொருளாதார மேம்பாடு போன்ற விடயங்களே முக்கிய இடத்தைப் பிடிப்பது வழக்கமாகும். ஆனால் இத்தேர்தலில் அவை இரண்டாம் தரப் பிரச்சினைகளாக்கப்பட்டதோடு யுத்த நிறுத்தம், இனவாதப் பிரச்சினையைக்கான அரசியல் தீர்வு, ஊழல் ஒழிப்பு, அடக்கு முறை ஒழிப்பு, ஜனநாயகத்தையும், மனித சுதந்திரத்தையும் நிலைநாட்டல் போன்ற விடயங்களே முன்னணியில் திகழ்ந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

### சிறுபான்மையினரின் வாக்குகள்:

ஆயினும் இத்தேர்தலில் சிங்கள பௌத்த தீவிரவாத உணர்வுகளுடன் போட்டியிட்ட பேரினவாதக் கட்சிகள் சிங்கள மக்களினால் தோற்கடிக்கப்பட்டுள்ளது ஒரு கவனிப்புக்குரிய சம்பவமாகும். அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிட்ட சிங்கள மகாசம்பத்த பூமி புத்திர கட்சி மொத்தமாக 300க்கும் குறைவான வாக்குகளையே பெற்றது. சென்ற பாராளுமன்றத்தில் மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருந்த மக்கள் ஐக்கிய முன்னணி இம்முறை முற்றாக துடைத்தெறியப்பட்டுள்ளது.

இதன் தலைவரான தினேஷ் குணவர்த்தன இலங்கையின் பிரபல சிங்கள இனவாதிகளான கலாநிதி நளின் டி சில்வா, கலாநிதி குணதாச அமரசேகர, எஸ்.எல் குணசேகர போன்றோருடன் சேர்ந்து தீவிர இனவாதப் பிரச்சாரத் அடிப்படையாகக் கொண்டு தேர்தலில் இறங்கியிருந்தார் என்பதையும் இங்கு குறிப்பிடல் வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி கடந்த 17வருடங்களாக செயற்படுத்தி வந்த கருத்தியல் கோட்பாடான சிங்கள, பௌத்த ஆதிக்கத்தை நிலைநாட்டவும் தமிழர்களுக்கு எதிரான இனவாத யுத்தத்தில் வெற்றி பெறுவதற்குமான ஆதரவையே வாக்காளர்களிடம் கோரியது. எனினும் சிங்கள பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பிரதேசங்களில் இக்கட்சி படுதோல்வி அடைந்துள்ளது. இப்பிரதேசங்களில் யுத்தத்திற்கு எதிராகவும், இனவாதப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வையும் நடைமுறைப்படுத்துவதை பிரதான கோரிக்கைகளில் ஒன்றாகக் கொண்டு தேர்தல் களத்தில் செயற்பட்ட பொ.ஐ.முன்னணி அமோக வெற்றியீட்டியுள்ளது.

தமிழ் மக்கள் உரிமைகளுக்கு முன்னுரிமை கொடுத்து சிங்களப் பிரதேசங்களில் செயற்பட்டவரும் வாசுதேவ நாணயக்கார இரத்தினபுரி மாவட்டத்தில் ஆகக்கூடுதலான விருப்பு வாக்குகளால் வெற்றியீட்டியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதற்கு மாறுபட்ட விதத்தில் சிறுபான்மை மக்கள் செறிவாக வாழ்கின்ற பிரதேசங்களில்தான் ஐ.தே. கட்சியின் இனவாதக் கோரிக்கைக்கு பெரும்பான்மையான ஆதரவு கிடைத்துள்ளது. கடந்த 17 வருடங்களாக இ.தொ.காவின் தொண்டமானின் துணையுடன் ஐ.தே. கட்சி முன்னெடுத்துச் சென்ற பேரினவாத மயப்படுத்தும் நடவடிக்கைகளினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் மலையகத் தமிழர்களாவர். இருப்பினும் இத்தேர்தலிலும் அவர்களின் பெரும்பான்மையான ஆதரவு ஐ.தே.கட்சிக்கு கிடைத்திருப்பது ஆராயப்பட வேண்டிய விடயமாகும். கடந்த 17 வருடகால ஆட்சியின் போது பல வழிகளிலும் மலையக மக்களின் வாழ்க்கையை சீர்குலைத்த ஐ.தே.கட்சியானது மலையகத் தமிழ் மக்களில் பெரும்பான்மையினருக்கு இன்னும் 'பஞ்சாமிர்தமாக' சுவைத்துக் கொண்டிருக்கும் ஒன்றாகவே நிகழ்கின்றது.

கடந்த 16 வருடகாலமாக தனக்கு வழங்கப்பட்டிருந்த அமைச்சர் பத

→5

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஈ.பி.டி.பி...

தவிர) அவர்களால் நியமிக்கப் பட்ட (ஈ.பி.டி.பியால்) பிரஜைகள் குழுக்கள் வாக்காளர்கள் அட்டைகளை விநியோகிக்க அனுமதி கொடுக்கப்பட்டது.

வாக்காளர் அட்டைகள் ஈ.பி.டிபிக்கு எதிரானவர்கள் என்று கருதும் பொதுமக்களுக்கு அவர்களது கிராம சேவகர்களோ அல்லது பிரஜைகள் குழுக்களோ வழங்கவில்லை.

வாக்காளர் அட்டைகள் ஏனைய மாவட்டங்களில் விநியோகிக்கப் பட்டது போன்று அன்றி சாதாரண றோணியோ தாளில் றோணியோ செய்யப்பட்டு பெயர்கள் தமது விருப்பத்தின் படி எழுதப்பட்டன.

தேர்தல் ஆணையாளரதோ அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட முகவரதோ கையொப்பம் அதில் காணப்படவில்லை.

வாக்களிப்பு நிலையங்களின் பெயர்கள் பிழையாகவும் வேறு இடங்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டிருந்தன.

வாக்காளர் அட்டைகள் 1987ம் ஆண்டின் பதிவுப்படி கொடுக்கப்படும் என்று கூறப்பட்ட போதும் இந்தியா, வெளிநாடு, ஏனைய இடங்கள் என்பவற்றுக்கு சென்றவர்கள் இறந்தவர்கள் பேரில் உள்ளவை பிரஜைகள் குழுக்களாலும் கிராம சேவகர்களாலும் தெரிவு செய்யப் பட்டு ஈ.பி.டி.பியிடம் கையளிக்கப் பட்டது.

18 - 22 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கு இறந்தவர்களது அட்டைகள் ஈ.பி.டி.பியால் வழங்கப் பட்டது.

வாக்களிப்பு அன்று வாக்குச் சாவடி முகவர்களது அனுமதிப்பத்திரங்கள் யாவும் ஈ.பி.டி.பியிடம் சென்ற நிலையில் ஏனைய கட்சி முகவர்கள் அங்கு செல்வது தடுக்கப்பட்டன.

வாக்களிப்பு நிலையங்களுக்கு முன்பாக நேரடியாகவே குளிர்பானங்கள், சாராயம், பால்மா போன்ற பொருட்கள் பிரஜைகள் குழுக்களாலும் ஈ.பி.டி.பி உறுப்பினர்களாலும் வழங்கப்பட்டது.

வாக்காளர் இடாப்பில் பெயரில்லாத 18-24 வயதுக்குட்பட்டவர்களும் 12-18 வயதுக்குட்பட்டவர்களும் ஈ.பி.டி.பியால் முதல் தினமன்று ஒவ்வொரு தீவிலும் இருந்து தலா 200, 250க்கும் மேற்பட்டவர்கள் வெவ்வேறு தீவுக்குக் கொண்டு செல்லப்பட்டு வாக்குச் சீட்டு போட அனுமதிக்கப்பட்டனர். சுமார் 500 பேர் வரையே வசிக்கும் புங்குடுதீவு எனும் பகுதியில் நாலாயிரத்திற்கும் அதிகமான வாக்குச் சீட்டுக்கள் போடப்பட்டன.

புங்குடுதீவில் கடமை புரிந்த தேர்தல் அதிகாரியிடம் ஊர்காவற்துறையில் ஈ.பி.டி.பி முகாம் ஒன்றின் பொறுப்பாளராக இருக்கும் கிளாஸ்ரர் என்பவர் தான் ஈ.பி.டி.பி. என்றும், தங்களுடன் ஒத்துழைக்கா விட்டால் வெளியே போக முடியாது என்றும் எச்சரிக்கை செய்ததன் பின்னர் அவ்வதிகாரி அப்படி ஒரு பிரச்சினையும் இல்லை அரசாங்கமே உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி கூறியுள்ளது என்று கூறி 40 வாக்குச்சீட்டுப் புத்தகங்களை அவரது கையில் கொடுத்துள்ளார். அவையாவும் ஒருவராலேயே அதாவது ஈ.பி.டி.பியின் உறுப்பினராலேயே போடப்பட்டுள்ளது(2000 வாக்குகள்).

ஊர்காவற்துறையில் அருமைலிங்கம் என்பவர் (மட்டக்களப்பு) ஈ.பி.டி.பி. உறுப்பினர் தமது கையாலே சுமார் 25க்கு மேற்பட்ட வாக்குகள் போடப்பட்டதை பெருமையாக ஒப்புக் கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு, கொழும்பு போன்ற பகுதிகளிலிருந்து அழைத்து வரப்பட்ட சுமார் 450க்கு மேற்பட்டவர்கள் கப்பலில் தீவுப்பகுதிக்கு கொண்டு வரப்பட்டு அவர்களுக்கு வாக்குகள் இல்லாத போதும் வேலணை, புங்குடுதீவு போன்ற மக்கள் இல்லாத இடத்தில் பெருந்தொகையான வாக்குகள் போடப்பட்டன.

நெடுந்தீவு, அனலைதீவு போன்ற பகுதிகளில் மாத்திரம் வாக்குச் சாவடி முகவர்களாக இருந்த ஏனைய கட்சி உறுப்பினர்கள் ஆள் மாறாட்டம் செய்து வாக்குப் போடுபவர்கள் 18 வயதுக்கு உட்பட்டவர்கள். பல தடவைகள் வாக்குப் போடுபவர்கள் என்று அடையாளம் கண்டு பிடித்துக் கொடுக்கப்பட்ட போதும் பொலிஸும் கடமையில் ஈடுபட்ட தேர்தல் அதிகாரிகளும் நடவடிக்கைகளை மேற்க் கொள்ள மறுத்து விடுதலை செய்து விட்டனர். அது மட்டுமல்ல வாக்களிக்கவும் சந்தர்ப்பம் வழங்கினர்.

நெடுந்தீவு மேற்கு வாக்குச் சாவடியில் மாத்திரம் கள்ளவோட் போட வந்த இருவர் ஏனைய கட்சி உறுப்பினர்களால் பிடிக்கப்பட்டு தற்செயலாக அந்நேரம் அங்கு வந்திருந்த சர்வதேச பத்திரிகையாளரிடம் கொடுக்கப்பட்டு அவரது முயற்சியின் காரணமாக கள்ள வாக்கு போட வந்தவர்கள் ஈ.பி.டி.பியால் அனுப்பப்பட்டவர்கள் என்றும், நெடுந்தீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த பிரஜைகள் குழு உறுப்பினர் குணரத்தினம் என்பவரே ஈ.பி.டி.பி. உதவியுடன் அவர்களது மீன் சின்னத்திற்கு வாக்களிக்க அனுப்பப்பட்டனர் என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆறாயிரம் மக்களே ஏறக்குறைய தீவுப்பகுதிகளில் வசிக்கின்றனர் என்றும் அதிலும் 1500க்கு மேற்பட்டவர்கள் 18 வயதுக்குட்பட்ட மாணவர்கள் என்பதும் சுமார் 1000க்கும் மேற்பட்டவர்கள் சிறுகுழந்தைகளும் மிகவும் வயதானவர்களுமே என்று புள்ளி விபரங்கள் கூறுகின்றன. அது தவிர தீவுப்பகுதிகளில் நிவாரணம் பெற்ற மொத்த உறுப்பினர்களது எண்ணிக்கை 5000 வரையில் இருக்கின்றது. இவ்வாறு இருக்கும் போது சுமார் 10,000க்கும் மேற்பட்ட வாக்குகள் கிடைத்தது. இடம் பெயர்ந்த மற்றும் முஸ்லீம் என்பவர்களை கணக்கில் எடுத்தாலும் கூட எப்படி மிகுதி 6000க்கு மேற்பட்ட தீவுப்பகுதி மக்கள் அதுவும் ஒருவர் கூட தவறாது வாக்களிக்க முடிந்தது என்பது மிகவும் ஆச்சரியமாகவும் கேள்விக்குறியாகவும் இருக்கின்றது.

## மட்டக்களப்பு...

பொது ஜன முன்னணியைத் தவிர எந்த ஒரு கட்சியும் இந்தச் சாதியில் ஒருவரை முதன்மை வேட்பாளராகப் போடவில்லை என்பதனால் கணேசமூர்த்தியை செல்வாக்குள்ள உறவுக்காரர் பலரும் ஆதரிக்க முற்பட்டனர். தென்னிந்தியத் தமிழர் மத்தியிலும் திருமலை, வன்னி, யாழ் தமிழர் மத்தியிலும் காணப்படாத ஒரு சமூக அமைப்பு மட்டக்களப்பில் உண்டு. அது தாய் வழிக் குடிமுறை (Matrilineal Clan System) இது மட்டு அம்பாறை மாவட்ட முஸ்லீம்கள் மத்தியிலும் காணப்படுகிறது. ஒரே சாதியைச் சேர்ந்த இருவர் முன்பின் தெரியாதவர்களாக இருப்பினும் கூட தத்தமது குடிபெயரைக் கொண்டு தமக்குள்ள உறவுமுறை (மச்சான், மாமா, மாமி என இன்னோரன்ன) என்ன என்பதை அறிந்து விடலாம். இது அரசியலுக்கு மிகவும் பயனுள்ள ஒன்றாகும். ''மட்டக்களப்பின் பா.உக்களாக இருந்த எதிர் மன்னசிங்கம், செ.இராசதுரை போன்றோரின் வெற்றியில் இச் சாதி செல்வாக்கும் ஒரு பங்கு வகித்ததென்பதே உண்மை. இராசதுரை மட்டு. முக்குவருள் முதன்மை பெற்ற காலிங்கா குடியைச் சேர்ந்தவர் என்பதை நாம் நோக்க வேண்டும். எனவே முக்குவ இனத்தவரின் ஆதிக்கம் பெற்ற படுவான்கரைப் பகுதியில் பல முக்கியஸ்தர்கள் பொது ஜன முன்னணி வேட்பாளர் கணேசமூர்த்திக்கு ஆதரவாகக் களத்திற்கு குதித்ததில் வியப்பேதுமில்லை எனலாம்.

இது ஒருபுறமிருக்க கணேசமூர்த்தியின் இளைய சகோதரர் மகேசன் மட்டு.பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளா. அண்ணனின் பிரச்சார வேலையில் மகேசன் தன்னுடைய பல்கலைக்கழக நண்பர் சிலரையும் மெதுவாக ஈடுபட வைத்து விட்டார். அத்துடன் சந்திரிகாவின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு பேராசிரியர் இராமகிருஷ்ணனும் பொது ஜன முன்னணியின் மேடைகளில் பேசலானார். ஆனால் எல்லாற்றையும் விட மேலாக கூட்டணிக்குச் செல்ல இருந்த பல ஆயிரக்கணக்கான வாக்குகளை பொது ஜன முன்னணியின் பக்கம் திருப்பியது விரிவுரையாளர் பாலசுகுமாரின் அனல் பறக்கும் பேச்சுக்களேயாகும். ஆனால் மட்டக்களப்பில் ஐ.தே.க வகுத்த தேர்தல் வியூகம் பொது ஜன முன்னணி ஒரு ஆசனம் பெறும் வாய்ப்பை இல்லாதொழித்து விட்டது. அலிசாகிர் மௌலானாவின் (இவருடைய மனைவி ஒரு மட்டு.தமிழ் பெண்) முஸ்லீம் வாக்குளும் ஏனைய தமிழ் ஐ.தே.க. நபர்களுடைய வாக்குகளும் சேர்ந்தமையாலேயே ஐ.தே.க தமிழ் வாக்குகளை மட்டும் நம்பியிருந்த பொதுஜன முன்னணியை முறியடிக்கக் கூடியதாயிற்று.

"வானமே எல்லை"
போட்டி முடிவுகள்
அடுத்த இதழில் வெளியாகும்

## ஐ.தே.க...

வியையும் தனது கைக்கூலிகளுக்குப் பெற்றுக் கொடுத்த பட்டப் பதவிகளையும் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் இ.தொ.காவினால் மலையகப்பகுதியில் நடத்தப்பட்டு வந்த ஐ.தே.கட்சி சார்பான பிரச்சாரங்களும் அதன் மூலம் மலையக மக்களின் மனநிலையில் ஐ.தே.கட்சியுடம் யானை சின்னமும் பிடித்துள்ள இடமும் ஐ.தே.கட்சியின் இனவாத செயற்பாடுகளை உணர முடியாதவாறு தடுத்து வந்துள்ளது. தமது பதவிகளையும் சலுகைகளையும் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் ஐ.தே.கட்சியின் இனவாத சுயரூபத்திற்கு முகமூடியாக இ.தொ. காங்கிரஸின் தலைமைகள் விளங்கியமையும் ஒரு காரணியாகும். மலையக அமைப்புகளும் தொண்டமான் போன்ற ''அரசியல் வியாபாரிகளும்'' மலையகத்தை தேசிய வாழ்விலிருந்து ஒதுக்கி வைத்து மலையக மக்களின் பிரச்சினைகளை தேசியப் பிரச்சினைகளிலிருந்து வேறுபடுத்தியதன் விளைவாக தேசிய நலன்களின் ஆர்வமும் அவதானமும் செலுத்தக்கூடிய தன்மையை மலையக வாக்காளர்களிடம் மழுங்கடித்து வந்துள்ளனர். மலையக மக்களுக்கு எதிரான பலவழிகளிலும் செயற்பட்டு வந்துள்ள தொண்டமானைக் குல தெய்வமாகக் கருதும் அளவிற்கு இம்மக்கள் வளர்க்கப்பட்டிருப்பது துர்திர்ஷ்டமிக்க ஒன்றாகும். இந்நிலைமையும் தொண்டமானின் வேண்டுகோளை ஏற்று ஐ.தே.கட்சிக்கு இவர்களை வாக்களிக்க வைத்த காரணிகளில் ஒன்றாகும்.

கடந்த 16வருட காலமாக ஐ.தே. கட்சியின் அரசின் அமைச்சராக இருந்து கொண்டு அரசின் தமிழர் விரோத போக்குகளுக்கு ஆதரவாக செயற்பட்ட தொண்டமானுடைய அரசியல் விபச்சாரத்தையோ அல்லது ஐ.தே.கட்சியின் பேரினவாத ஆட்சியின் மூலம் மலையக மக்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகளையோ யதார்த்தரீதியாகப் புரிந்து கொள்ளவிடாமல் அவர்களை தொளிற்சங்க ரீதியாக அடிமை கொண்டிருந்ததும் ஒரு முக்கிய காரணியாகும். இதனால் தான் தேர்தல் காலத்தின் போது எதுவித பிரயோசனமுமற்ற ஒரு சான்றிதழை தொழிலாளர்களுக்குக் கொடுத்து தொழிலாளர்கள் குடியிருக்கும் வீட்டையும், விவசாயம் செய்யும் தோட்டத்தையும் தொழிலாளர்களுக்கே சொந்தமாக வழங்கி விட்டோம் எனப்பட்டப்பகலில் பொய் கூறி எந்த மக்களை நம்பவைக்கின்ற ஒரு துணிவை தொண்டமானுக்கும், ஐ.தே.கட்சியின் பட்டியலில் வேட்பாளர்களாகப் போட்டியிட்ட அவரது கைக்கூலிப் பட்டாளங்களுக்கும் ஏற்படுத்த உதவியது. இச் செயலானது இத்தொழிலாளர்களின் அரசியல் உணர்வை ஏளனம் செய்வதாக அமைந்ததோடு கடந்த 50 வருடங்களாக இந்த அப்பாவித் தொழிலாளர்களை ஈவிரக்கமின்றி ஏமாற்றிய இ.தொ.கவின் செயற்பாடுகளையும் அம்பலப்படுத்துகின்றது.

## இரகசிய...

ளின் அபிலாசைகள் என்ன என்பது பற்றிய புரிந்துணர்வும், உணர்திறனும் (Sensitivity) இதுவரை காலமும் உரிய முறையில் வெளிப்படுத்தப்படவில்லை. இது தொடர்பாக அடிமட்டத்திலிருந்து மேலெழும் சமாதான முயற்சிகள், புரிந்துணர்வை வளர்த்தல் போன்ற முயற்சிகள் அவசியம். இதுவரை கால ஒப்பந்தங்கள் தோல்வியடைந்தமைக்கான காலம் அவை மக்களுடைய ஆதரவை முன்வைத்துச் செய்யப்படவில்லை என்பதும் பல விஷயங்கள் ரகசியமாக இருந்தன என்பதுமே. எந்த உடன்பாடும் மக்களுக்குத் தெரியாமல் செய்யப்படக்கூடாது. அதே நேரம் உடன்பாட்டை ஏற்குந் தகவு மக்கள் மத்தியில் வளர பொதுசன தொடர்பு சாதனங்கள் பயன்பட வேண்டும். யுத்தம் பற்றிய பிரசாரங்கள் ஒழிக்கப் பட்டு, அழிவுகளும் அனர்த்தங்களும் எவ்வாறு வடக்குக் கிழக்கு மக்களைப் பாதித்துள்ளன என்பதை உணர்வுபூர்வமாக வானொலி, தொலைக்காட்சி என்பன சிங்கள மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். இத்தகைய முன்னெடுப்புகள் . இணக்கப்பாட்டுக்கான ஒரு ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்தும்.

### பொ.ஐ.மு.அரசின் கூட்டரசியல் (Coalition Politics) பற்றி:

கூட்டு அரசியல் வினைத்திறன் குறைவு என்று பாரம்பரிய அரசியலாளர் கருதி வந்துள்ளனர். எனினும் கூட்டு அரசியலூடாக வரக்கூடிய அரசியல் இணக்கம் சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் பரவலாக்கப்பட்டால் அது நிறைந்த பயனை விளைவிக்கும். இணக்கத்தையும் தீர்வையும் ஒரு போதுமே மேலிருந்து திணிக்க முடியாது. பொ.ஐ.மு. அரசைப் பொறுத்த வரை இத்தகைய சிக்கல்கள் குறித்தும் கூட்டரசின் எல்லைப்பாடுகள் குறித்தும் ஒரு யதார்த்த பூர்வமான கணிப்பீடு உள்ளது. இப்போதுள்ள புதிய தலைமுறைத் தலைவர்கள், தகுந்த ஆலோசனைகள், வழிநடத்தல்கள் கிடைக்கிற போது பலன்மிக்க மாற்றங்களைக் கொண்டு வர முடியும் என்று தோன்றுகிறது. இந்தத் தளத்தில் தான் என்னைப் போன்றவர்கள் ஆக்கபூர்வமான சில பங்களிப்புகளைச் செய்ய முடியும் எனக் கருதுகிறேன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## யாழ்: தேர்தல் தில்லுமுல்லுகள்

# ஈ.பி.டி.பி ஜனநாயகம்

*(தீவுப்பகுதியிலிருந்து சிறப்பு நிருபர்)*

தேர்தல் நடாத்தக்கூடிய சூழ்நிலை யாழ் மாவட்டத்தில் (குறிப்பாகத் தீவுப்பகுதியில்) இருக்கின்றது என்று காண்பிப்பதற்காக அரசும் அதன் படையினரும் அவர்களது துணைப்படையாகச் செயற்படும் ஈ.பி.டி.பியினரும் செய்த ஒரு தலைப்பட்சமான தேர்தல் நடவடிக்கைகளை புரிந்து கொள்ள முதலில் பின்வரும் விசயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

- 750க்கு மேற்பட்ட ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் ஆயுதம் தரித்து தீவுப்பகுதிகளில் ஊர்காவற்படையாகச் செயற்படுகின்றனர்.
- இவர்கட்கு நாளொன்றுக்கு 110 ரூபா அரசால் வழங்கப்படுகிறது.
- இவர்களது ஆயுதம் பற்றி கேள்வி எழுகிற போது அரசு தனது ஊர்காவற்படை எனக்கூறி வருகிறது.
- போக்குவரத்து, தபால், நிவாரணம் மற்றும் நிர்வாகம் போன்ற அனைத்தும் ஆயுதம் தரித்த ஈ.பி.டி.பியினரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் '' சுதந்திரமான நீதியான'' தேர்தல்கள் நடத்தப்படுவதற்கான சூழல் பற்றி நாம் கேள்வி எழுப்பமுடியும்.

ஜனநாயகமாக சுதந்திரமாக அனைவரும் பங்கு கொள்ளக்கூடிய தேர்தல் என்றால் அரச படைகள் தவிர்ந்த ஏனைய கட்சிகளோ அல்லது குழுக்களோ ஆயுதம் வைத்திருப்பது விரோதமாகும்.

ஆனால் இந்த அடிப்படை ஜனநாயக விதியை உதாசீனம் செய்து அரசும் அதன் ஊர்காவல் படை என்று அரசு ஏற்றுக்கொண்ட ஈ.பி.டி.பியும் தீவுப்பகுதியில் தேர்தல் திருவிளையாடல்களை ஆரம்பித்தன.

யூலை 10ம் திகதி ஈ.பி.ஆர்.எல்.எப்பின் 8 உறுப்பினர்கள் காரைநகர் ஊடாக அனலைதீவுக்கு சென்றனர். அங்கு ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் அனலைதீவு மக்களிடம் ஈ.பி.ஆர்.எல்.எப்பிற்கு உணவோ தங்குமிடமோ யாரும் கொடுக்கக்கூடாது என்று கடும் உத்தரவு இட்டு ஈ.பி.ஆர்.எல்.எப் உறுப்பினர்களை வெருட்டியுள்ளார்கள். எனவே தங்க இடம் கிடைக்காத நிலையில் அங்கு கோயிலில் தங்கியிருந்து விட்டு மறுதினம் ஈ.பி.ஆர்.எல்.எப்பினர் திரும்பி விட்டனர். திரும்பவும் யூலை 21ம் திகதி காரைநகர் சென்ற ஈ.பி.ஆர்.எல்.எப் உறுப்பினர்கள் 8 பேர் அனலைதீவு சென்ற போது நட்னசிகாமணி என்பவர் தலைமையில் ஈ.பி.டி.பியின் பல உறுப்பினர்கள் ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பைச் சேர்ந்தவர்களை அடித்தும் அவர்கள் கொண்டு வந்த சைக்கிள் போன்ற பொருட்களைப் பறித்து கடலில் எறிந்தும் கடைகளை பூட்டுமாறு ம்க்களை வற்புறுத்தியும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதன் மூலம் அவர்கள் மக்களை சென்றடையாதவாறு அவர்களிடம் மக்கள் சென்றடையாதவாறும் ஆயுதப் பாணியிலான கண்காணிப்பு நடைபெற்றது. எனினும் ஈ.பி.ஆர்.எல்.எப்பினர் அனலைதீவில் தங்கிவிட்டனர்.

இதே வேளை நீண்ட காலத்தின் பின் தமது குடும்ப உறுப்பினர்களைப் பார்க்கச் சென்ற வேறொருவர் ஈ.பி.ஆர்.எல்.எப்புக்கு வேலை செய்து அவரது பகுதி மக்களையும் ஊர் மக்களையும் திருப்பி விட்டு விடுவாரோ என்ற பயத்தில் யூலை 21ம் திகதி அன்றே ஊர்காவற்துறையில் வைத்து ஈ.பி.டி.பியினரால் கடத்திச் செல்லப்பட்டார். பின்னர் அவரது உறவினர்கள் ஊர் பொதுமக்களது பெரும் எதிர்ப்பும் கடும் முயற்சியும் காரணமாக மூன்று தினங்கள் தடுத்து வைக்கப்பட்ட பின் ஏதாவது அரசியல் வேலை செய்தால் உடனடியாக கொல்லப்படுவார் என்று எச்சரிக்கப்பட்டு அவரது ஊரில் உள்ள ஈ.பி.டி.பியின் பிரஜைகள் குழு கண்காணிப்பில் விடுதலை செய்யப்பட்டார்.

ஒகஸ்ட் 7ம் திகதி கண்துடைப்புக்காக அரசால் அனுப்பி வைக்கப்பட்ட பொலிஸ், கடற்படையினர் நெடுந்தீவில் இறங்கியதும் ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, புளொட், ஈரோஸ் ஆகியவற்றின் உறுப்பினர்களும் வந்து சேர்ந்தனர்.

ஈ.பி.டி.பியினரோ அவர்கள் செல்லும் இடமெல்லாம் ஆயுதங்களுடன் சென்று கண்காணிப்பு செய்தனர். திரும்பவும் ஒகஸ்ட் 15ம் திகதி முன்பு கடத்தப்பட்ட அதே நபர் ஈ.பி.டி.பியால் ஆயுத முனையில் அழைத்துச் செல்லப்பட்ட பின்பு ஈ.பி.ஆர்.எல்.எப்பின் தீவிர முயற்சியின் பலனாக பொலிஸாரால் அன்று பிற்பகல் மீட்கப்பட்டார். ஆனால் தொடர்ந்தும் எச்சரிக்கப்பட்டதால் பயம் கொண்ட அவர் மறுதினம் பொலிஸிலும் கடற்படையிலும் சரணடைந்த போதும் ஈ.பி.டி.பியின் கடும் எதிர்ப்பு காரணமாக அவர்களைப் பகைத்துக் கொள்ளா விரும்பாத கடற்படையினரும் பொலிஸும் சரணடைந்தவர்களை கைவிட்டு மறுதினம் சென்று விட்டனர். எனவே அவரை ஆயுத பாணிகளாக சென்று சுற்றி வளைத்துத் தேடிய ஈ.பி.டி.பியினருக்கு பயந்து மாறுவேடத்தில் கடற்கரையை அடைந்து சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் நீந்தி நடுக்கடலில் நின்றிருந்த கடற்படையினரிடம் சென்றதாக பின்பு தகவல் கிடைத்தது.

மேற்கூறிய நபர் ஈ.பி.ஆர்.எப்.எப்புக்கு முன்பு ஆதரவாக இருந்தவர் என்றும் இவரைப்பற்றி ஈ.பி.டி.பியினர் பொய்யான வதந்திகளை தமது தினமுரசு பேப்பரில் 'கரை இறங்கியவுடன் ஒருவர் கட்சி மாற்றம்' என்று பொய்யான செய்தி போட்டு அவமானப்படுத்தி அவரது நண்பர்கள் உறுவினர்களையும் குழப்பமடையச் செய்தனர் என்றும் நம்பப்படுகிறது. இதனால் ஆத்திரமுற்ற அந்நபர் நெடுந்தீவின் வாக்குச் சாவடி ஒன்றில் கள்ள வோட் போட முயன்ற சுமார் 600க்கும் மேற்பட்ட ஈ.பி.டி.பி. ஆதரவாளர்களை திருப்பி அனுப்பியுள்ளார். இதேபோன்று புங்குடுதீவில் வாக்குச் சாவடிக்குச் சென்ற இரு ரெலோ உறுப்பினர்கள் ஈ.பி.டி.பியால் கைது செய்யப்பட்டு ஒகஸ்ட் 22 வரை விடுதலை செய்யப்படவில்லை. அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.

### வாக்களிப்பும் வாக்கழிப்பும்

வாக்களிப்பு நடைபெறும் நாளன்றுக்கு முதல் நாளும் அன்றும் தான் தீவுப்பகுதிகளில் (நயினாதீவு

→ 5



## குறுநில மன்னர் ஆட்சி!

யாழ்.மாவட்ட (தீவுப்பகுதி) பொதுத்தேர்தல் என்ற கேலிக் கூத்து தீவுப்பகுதி மக்களை மிகவும் மகத்துவம் மிக்கவர்களாக மாற்றி விட்டது. பாராளுமன்றம் கலைக்கப்பட்டதாகவும் பொதுத் தேர்தல் ஒன்று நடைபெற திகதி குறிக்கப்பட்டு நியமனப்பத்திரங்களும் தாக்கல் செய்யப்பட்டதாகவும் தினமுரசு பேப்பர் மூலம் தான் பெருமளவான தீவுப்பகுதி மக்கள் அறிந்திருந்தனர். தீவுப்பகுதி மக்களுக்கு செய்தி தருவது என்றால் தினமுரசுப் பேப்பர் மாத்திரமே தான். இங்கு ஏனைய பத்திரிகைகள் எதுவும் வராது தடை செய்யப்பட்டிருக்கின்றது. அதே போன்று மக்கள் பி.பி.சி, புலிகளின் குரல், வெரித்தாஸ் போன்றவற்றையும் கேட்கக் கூடாது என்ற ஓர் தடையும் நயினாதீவு தவிர்ந்த ஏனைய தீவுகளில் இருந்து வருகின்றது. அப்படி யாராவது கேட்டதாக அறிந்தால் அதற்கு தண்டனையும் உண்டு.

தபால் சேவைகளும் ஈ.பி.டி.பியின் கட்டுப்பாட்டிலேயே நடைபெற்று வருகின்றன. தீவுப்பகுதிகளுக்கு வரும் தபால்களும் தீவுப்பகுதிகளை விட்டு வெளியேறும் தபால்களும் ஈ.பி.டி.பியின் பொறுப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களது முன்னிலையில் உடைக்கப்பட்டு பூரணமாக வாசித்த பின்பே விநியோகிக்கப்படும், அல்லது தடை செய்யப்படும்.

அரசால் வழங்கப்படும் நிவாரணம் கூட ஈ.பி.டி.பியால் நியமிக்கப்பட்ட பிரஜைகள் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டு ஈ.பி.டி.பியின் அனுசரணையுடன் அவர்கள் தீர்மானிக்கும் நேரமே வழங்கப்படுகிறது. அதிலும் இடம் பெயர்ந்த அல்லது இந்தியா சென்ற, வெளிநாடு சென்ற, மரணமடைந்தவர்களின் நிவாரணப் பொருட்கள் அனைத்தும் ஈ.பி.டி.பியிடமே சேரும்.

மீன்பிடிப்போரிடம் இருந்து மீன், கருவாடு, நண்டு, இறால், சிங்கறால் போன்ற அனைத்தையும் ஈ.பி.டி.பியினரே அவர்களது சங்கத்துக்கூடாக வாங்குவர், அதே போன்று வாங்கப்படும் பொருட்கள் மிகக் குறைவான விலையில் வாங்கப்பட்டு பலமடங்கு கொள்ளை லாபம் வைத்து வெளியிடங்களில் விற்கப்படும்.

நயினாதீவு கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதால் அங்கு ஈ.பி.டி.பியினர் அலுவலகம் அமைக்க முயற்சி செய்த போதும் அது கைகூடவில்லை. அங்கு அவர்கள் ஆயுதங்களுடன் செல்ல முடிவதில்லை. ஈ.பி.டி.பி. அலுவலகம் ஒன்று அமைப்பது தொடர்பாக நயினாதீவு மக்களிடம் சென்று கையெழுத்து பெற ஈ.பி.டி.பி முயன்றபோது அவர்கள் மறுத்து விட்டனர். எனவே நயினாதீவுக்கு ஏனைய தீவுகளிலிருந்து பொருட்களைக் கொண்டு செல்லவோ அல்லது பெருமளவில் கொண்டு வரவோ முடியாதபடி ஓர் ''சிறு பொருளாதாரத் தடையை'' தீவுகளில் நயினாதீவு மக்கட்கு எதிராக ஈ.பி.டி.பியினர் நடைமுறைப்படுத்தி வருகின்றனர். மேலும் கப்பல் போக்குவரத்து சேவையை தீவுப்பகுதிகளுக்கு நடாத்தும் பொறுப்பை ஈ.பி.டி.பியினரிடமே அரசு ஒப்படைத்திருப்பதால், நயினாதீவு மக்கள் மீதான ஈ.பி.டி.பியினரின் வெறுப்பு காரணமாக நயினாதீவு மக்கள் கப்பல் அனுமதிச்சீட்டுக்கள் எடுக்கச் சென்றால் அது காரைநகர் என்றாலும் சரி திருமலை என்றாலும் சரி பின்னுக்கு கடைசியாக நிற்கும்படி உதாசீனம் செய்யப்படுகின்றனர். தேங்காய் போன்ற பொருட்கள் 3,4க்கு மேல் ஏனைய தீவுகளிலிருந்து நயினாதீவுக்கு கொண்டு செல்ல முடியாது. இதனால் நயினாதீவில் தேங்காய் ஒன்றின் விலை 15 ரூபாய்க்கு மேல்.

நயினாதீவு மக்கள் கப்பல் சேவையையும் ஏனைய தீவுகளிலிருந்து தமது தீவுக்கு ஈ.பி.டி.பியால் ஏற்படுத்தப்பட்ட பொருளாதாரத் தடையையும் பற்றி மிகுந்த அதிருப்தி அடைந்துள்ளனர்., இப்போதைய நரோமா (NAROMA) கப்பல் தீவுப்பகுதிக்கு ஒழுங்கு செய்யப்படும் முன்னர் தாம் கடற்படையினால் தீவுப்பகுதியிலிருந்து அத்தியாவசியத் தேவைகளுக்காக திருமலைக்கும் திருமலையிலிருந்து தீவுப்பகுதிகளுக்கும் அவர்களது படகுகளில் கொண்டு சென்று விடப்பட்டதாகவும் விரைவாகவும் துன்புறுத்தல் பிரச்சினைகள் எதுவுமின்றி தாம் வந்து போக முடிந்ததாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

நயினாதீவில் ஈ.பி.டி.பியினர் இல்லை. ஆனால் அங்கும் பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக அரச நிவாரணப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. அங்கு ஈ.பி.டி.பியினர் இல்லை என்பதற்காக எந்த அரச சேவையும் நிறுத்தப்படவில்லை. எனவே எமக்கு ஈ.பி.டி.பி தேவையில்லை என்கின்றனர் மக்கள்.

ஏனைய தீவுப்பகுதிகளில் மரங்களிலிருந்து இறக்கப்படும் கள்ளுக்கூட தனியார் கொண்டு செல்ல முடியாது. அப்படி யாராவது ஒரு போத்தல் கள்ளு ஈ.பி.டி.பியின் பற்றுச்சீட்டு இன்றி கொண்டு சென்றால் கொண்டு போபவருக்கு 5000 ரூபா அபராதம், கொடுத்தவருக்கு 1000 ரூபா அபராதம்.

ஈ.பி.டி.பியினர் தீவுப்பகுதிகளுக்கு அரச படைகளுடன் வந்தபின்னர் புங்குடுதீவு, நெடுந்தீவு, எழுவைதீவு, வேலணை, ஊர்காவற்துறை, காரைநகர் ஆகிய இடங்களில் தமது முகாம்களையும் பெருமளவு உறுப்பினர்களையும் கொண்டு வந்து குவித்திருந்தனர். அதேநேரம் சில அவசியமான பொதுமக்களது தேவைகளையும் அவர்கள் கவனித்தனர் என்பதையும் மறுப்பதற்கில்லை.

30/08/1994

சரிநிகர் (இரு வாரங்களுக்கொருமுறை) இதழ்.இல.18/2 அலோசாலை கொழும்பு 03. இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்.
அச்சுப்பதிவு: 334காலி வீதி இரத்மலானை நவமக அச்சகம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்